# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

■ சுடர்: 29 ■ கதிர்: 037 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 18, வியாழன் 02.01.2014

பக்கம்: 24

வன்னி : ரூபா.20

யாழ். : ரூபா.20

கொழும்பு : ரூபா.30




மப்பான வானிலை

29 C 24 C




பக்கம் 07

அதிகாரங்களைப் பகிர ஒருபோதும் தயாரில்லை





பக்கம் 22

கிறாஸ் கொப்பர்ஸை வென்றது சென்ரல்





பக்கம் 23

வில்லியர்ஸுக்கு சத்திரசிகிச்சை


# மீனவர் பிரச்சினை குறித்து அடுத்தவாரம் முக்கிய பேச்சு

## *அமைச்சர் ராஜித தலைமையில் உயர்மட்டக்குழு இந்தியா பயணமாகின்றது*

கொழும்பு, ஜனவரி 2

எல்லை தாண்டும் இந்திய மீனவர்களின் பிரச்சினை குறித்து இந்தியாவுடன் பேச்சு நடத்தக் கடற்றொழில், நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையிலான உயர்மட்டக் குழு ஒன்று அடுத்தவாரம் இந்தியாவுக்குப் பயணமாகி உள்ளது. இந்தக் குழுவில் பாதுகாப்புஅமைச்சு, வெளி விவகார அமைச்சு, கடற்படை ஆகியவற்றின் முக்கிய பிரமுகர்கள் அடங்கி உள்ளனர். இவர்கள் இந்தியாவின் வெளி விவகார அமைச்சர், மீன்பிடித்துறை அமைச்சர், கடற்படை அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து மீனவர் பிரச்சினை குறித்துப் பேச்சுநடத்தவுள்ளார். அத்துடன் தமிழ்நாட்டு மீனவர்கள் அமைப்பின் 10 பேரடங்கிய பிரதிநிதிகள் குழுவொன்றும் அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன் பேச்சு நடத்தவுள்ளது. இந்தப் பேச்சுகளில் கலந்துகொள்ள அமைச்சர் ராஜித சேனாரத்ன சம்மதித்துள்ளார் என்று இலங்கை - இந்திய மீனவர் பேரவையின் இலங்கை இணைப்பாளர் எஸ்.பி. அந்தோனிமுத்து தெரிவித்தார்.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இருநாட்டு மீனவர்கள் தொடர்பான விவகாரம் இந்தப் பேச்சுகளில் முக்கிய இடம் வகிக்கும் என்று தெரியவருகிறது. அத்தோடு இருநாட்டுக் கடற்படையினராலும் கைதான மீனவர்கள் விடுதலை குறித்தும் இதன்போது ஆராயப்படவுள்ளது.

இதேவேளை, இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் கடல்சார் பொருளாதாரம் தொடர்

> **எங்களுக்கு எதுவும் அறிவிக்கவில்லை**
>
> **இலங்கை உயர்மட்டக்குழு மீனவர் பிரச்சினை தொடர் பில் ஆராய இந்தியா செல்லவிருப்பது குறித்து தமக்கு எதுவித அறிவித்தலும் கிடைக்கவில்லை . இந்திய மீன வர்கள் எல்லை மீறாமல் இருக்க வேண்டும் என்றே இந்தப் பேச்சுக்களில் வலியுறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.**
>
> *- வி. சுப்பிரமணியம், வடமாகாண மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர்*


21 ஆம் பக்கம் பார்க்க


## பீரிஸின் இந்தியப்பயணம் இன்னும் முடிவில்லை

கொழும்பு,ஜன.2

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியாவுக்கு பயணம் செய்யவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தாலும், இது தொடர்பில் இன்னும் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை என்று இலங்கை வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.


21 ஆம் பக்கம் பார்க்க


## புத்தாண்டில் பறிபோனது பெண்ணின் கால்

தென்மராட்சி,ஜன.02

ஆட்களில்லாத காணிக்குள் குடும்பப் பெண் ஒருவர் மேய்ச்சலுக்கு மாட்டை கட்டச் சென்ற போது மிதிவெடியில் சிக்கி கால் ஒன்றை இழந்தார்.

இந்தச் சம்பவம் புதுவருட தினமான நேற்று எழுதுமட்டுவாழ் ஒட்டுவெளியில் இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த சந்திரசேகரம் புஷ்பமலர் (வயது -37) என்பவரே கால் இழந்த நிலையில் சாவகச்சேரி ஆதாரவைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ங-9)

## தாயும் சிசுவும் உடல் சிதறிச் சாவு மோதிய 'டிப்பர்' தப்பியோடியது

### *புதுவருட வழிபாடு செய்துவிட்டு சென்றபோது கோரம்*

யாழ்ப்பாணம்,ஜன.02

புது வருடப் பிறப்பான நேற்று அதிகாலை தேவாலயத்துக்குச் சென்று விட்டு வழிபாடு செய்துவிட்டு மோட்டார் சைக்கிளில் திரும்பிக்கொண்டிருந்த குடும்பம் ஒன்றை வேகமாக பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோதித் தள்ளி விட்டு தப்பியோடியது. இதில் இளம் தாயொருவரும் பிறந்து 27 நாள்களேயான ஆண் சிசுவும் சம்பவ இடத்திலேயே உடல்சிதறி உயிரிழந்தனர். ஏ-9 வீதியில் ஆனையிறவுப் பகுதியிலேயே நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

சம்பவத்தில் முக்கொம்பன் வீதியைச் சேர்ந்த செந்தூரன் சுலக்சனா (வயது -22) பிறந்து 27 நாள்களேயான செ.கிங்ஸ்லி என்ற ஆண் குழந்தை ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

உயிரிழந்த பெண்ணின் கணவர் ஆபத்தான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்


21 ஆம் பக்கம் பார்க்க


## இராணுவ ட்ரக் மோதி ஓட்டோச் சாரதி சாவு

### *சிப்பாய்கள் இருவர் படுகாயம்*

வவுனியா, ஜன.2

வவுனியா மடுக்கந்தப் பகுதியில் இராணுவ ட்ரக் வண்டியும், ஓட்டோவும் மோதியதில் ஓட்டோ சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், இரண்டு இராணுவத்தினர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நேற்று முன்தினம் இரவு 7.10 மணியளவில் ஹொரவப்பொத்தான வீதியூடாக வந்த இராணுவ ட்ரக் வண்டியும், குடாக்கக் கொடி பகுதியில் இருந்து வந்த ஓட்டோவும் நேருக்கு


21 ஆம் பக்கம் பார்க்க


## புத்தாண்டுக் கேளிக்கை சரிந்து வீழ்ந்தது மேடை

### *ஜனாதிபதியின் மகன் உட்பட பலர் காயம்*

கொழும்பு,ஜன.02

புதுவருடத்தையொட்டி கொழும்பு ஹில்டன் ஐந்து நட்சத்திர விடுதியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற கேளிக்கை நிகழ்வின் போது முக்கிய பிரமுகர்கள் அமர்ந்திருந்த மேடை திடீரென சரிந்து விழுந்தது. இதில் பலர் காயமடைந்துள்ளனர். இந்த மேடையில் ஜனாதிபதியின் மகனும் இன்னும் பல முக்கிய பிரமுகர்களும் அமர்ந்திருந்தனர். ஆயினும் இதன் போது அவர்களுக்கு காயம் ஏற்பட்டதா என்ற உறுதியான தகவல்கள் எதுவும் தெரியவரவில்லை.

எனினும் புத்தாண்டு பிறப்பதையொட்டி கேளிக்கை விருந்து உபசாரத்திற்கு இந்த விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் போது திடீரென


21 ஆம் பக்கம் பார்க்க


## அதிகரிக்காது பால்மா விலை பதுக்கும் நிறுவனத்துக்கு 'சீல்'

### *உள்நாட்டு வர்த்தகப் பிரதி அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜன. 2

பால்மாவின் விலை இன்று முதல் அதிகரிக்கப்படும் என வெளியான செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை எனத் தெரிவித்த கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக பிரதி அமைச்சர் ஹேமால் குணவர்தன, பால்மா விலை அதிகரிக்கப்படமாட்டாது. மக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்று தெரிவித்தார்.

குடாநாட்டில் நேற்றுமுன்தினமே பால் மாவின் விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு விற்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு விலை அதிகரிப்புச் செய்து விற்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், விலை அதிகரிப்பை எதிர்பார்த்து பால்மாவைப் பதுக்கி வைத்திருக்கும் நிறுவனங்களை சீல் வைப்பதற்கான நடவடிக்கைகளை நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை மேற்கொண்டு வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பால்மாவின் விலையை அதிகரிக் குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டுள்ளபோதும், விலையை அதிகரிப்பதற்கு எவ்வித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை. பால்மாவின் விலை நாளை (இன்று) முதல் அதிகரிக்கப்படும் என வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை. அதனால், மக்கள் அச்சமடையத் தேவையில்லை. தற்போது நாட்டின் பல பாகங்களிலும் பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பால்மாவின் விலையை அதிகரிக்கக் கோரி பால்மா விற்பனை நிறு


21 ஆம் பக்கம் பார்க்க


## படையினரின் வியாபாரத்தால் மரக்கறி வர்த்தகர்கள் பாதிப்பு

மன்னார், ஜன.2

மன்னாரில் இராணுவத்தினர் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னார் பிரதான நுழைவாயிலில் அமைந்துள்ள காவலரணுக்கு அருகில் இராணுவத்தினர் கடந்த வாரம் 'மரக்கறி விற்பனை நிலையம்' ஒன்றைத் திறந்து வியாபாரம் செய்து வருகின்றனர். இதனால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மரக்கறி வர்த்தகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.


21 ஆம் பக்கம் பார்க்க


## சூடானின் கதியே இலங்கைக்கும்

### *ஐ.தே.க. எச்சரிக்கை*

கொழும்பு, ஜன. 2

'இலங்கை இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அரசு அளித்த வாக்குறுதிகளையும், இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளையும் சர்வதேசம் ஒரு போதும் மறந்து விடாது. அங்கு கொண்டுவரப்பட்ட பிரேரணையை அரசு அலட்சியப் படுத்துமானால் சூடானிலிருந்து தென்சூடான் பிரிந்த நிலையே இலங்கைக்கும் ஏற்படும்.

எனவே, பிரச்சினைகளைத் தீர்க்க சர்வதேசத்துடன் அரசு பேச வேண்டும்' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் தலைமைத்துவச் சபை உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தவில் உள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள கடந்த 5 வருட காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபைக்கும், சர்வதேசத்துக்கும் அரசு பல வாக்குறுதிகளை அளித்துள்ளது. 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது மட்டுமல்ல, அதற்கப்பால் சென்று 13 பிளஸ் வழங்கவும் தயார் என்றும்


21 ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ் மீது கல்வீச்சு

### *மூவர் காயம்*

மாங்குளம்,ஜன. 2

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பஸ் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கல்வீச்சில் பயணிகள் மூவர் காயமடைந்தனர்.

நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் விசுவமடு உழவனூர் பகுதியில் வைத்து கல்வீச்சு மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதில் பஸ்ஸின் முன்பகுதிக் கண்ணாடி சேதமடைந்தது. கண்ணாடித்துண்டுகளின் சிதறல் காரணமாக மூவர் காயமடைந்து தர்மபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக் கல்வீச்சு சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸாரும், புதுக்குடியிருப்புப் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-422,400)

# மாணவர்களை இணைப்பதற்காக பாடசாலைகள் பணம் பெறக்கூடாது

## மாகாணக் கல்விப் பணிப்பாளர் மீண்டும் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.02

யாழ்.மாவட்டத்தில் சில பாடசாலைகளில் தரம் ஒன்று மற்றும் தரம் 6 வகுப்புக்களுக்கு மாணவர்களைச் சேர்க்கும் பொழுது சில பெற்றோர்களிடம் இருந்து ஆயிரக்கணக்கான ரூபா பணம் அறவிடப்படுவதாகவும் சில இடங்களைச் சேர்ந்த மாணவர்களை அத்தகைய பாடசாலைகள் சேர்த்துக்கொள்ள மறுப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களைச் சேர்ப்பதற்கு எந்தப் பாடசாலையும் பணம் அறவிடக்கூடாது என்று முன்னரே அறிவித்துள்ளதாக வட மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராஜா தெரிவித்தார்.

இவ்வாறு பணம் அறவிடும் பாடசாலைகளில் ஒன்றாக சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி உள்ளதாகவும், பணம் செலுத்தினால்தான் பிள்ளைகளைச் சேர்க்கலாம் என்று பாடசாலை நிர்வாகம் கூறியுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

தவிர கல்லூரியை அண்மித்துள்ள பெரிய புலோ, காட்டுப்புலம் மற்றும் கல்விளான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு அந்தப் பாடசாலை நிர்வாகம் அனுமதி மறுப்பதாகவும், தீவகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறுவர் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் மருத்துவ கலாநிதி குமாரவேல் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் வட மாகாண கல்விப் பணிப்பாளருக்கும் எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் வ. ஸ்ரீகாந்தனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் தெரிவித்ததாவது:

*மாணவர்களைச் சேர்ப்பதற்கு* தாம் பணம் எதுவும் அறவிடவில்லை. தாமாக விரும்பிக் கொடுப்பதையே நாம் ஏற்றுக் கொள்கிறோம். மாணவர் அனுமதிக்கு என்று எந்த ஒரு பெற்றோரிடமும் நாம் பணம் அறவிட வேண்டிய அவசியம் இல்லை. பாடசாலைக்கு மாதாந்த மின் கட்டணம் 10 ஆயிரம் ரூபா தொடக்கம் 12 ஆயிரம் ரூபா வரை வருகிறது. அரசு மாதாந்தம் ஆயிரம் ரூபா தொடக்கம் ஆயிரத்து 500 வரையே மின் கட்டணத்துக்குப் பணம் ஒதுக்குகிறது.

எனவே அதற்காக பெற்றோர்களை சுய விருப்பத்தின் அடிப்படையில் பணம் கொடுங்கள் என்று கேட்டிருந்தோம்.

தவிர தற்போது 6 ஆம் தரத்துக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் 3 ஆம் தரத்தில் தமது *பாடசாலைகளில் கல்வி கற்றுக்* கொண்டிருக்கும் போதே, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருந்தால் தான் எமது கல்லூரியில் அனுமதி வழங்குவோம் என்று நாம் அவர்களுக்கு அறிவுரை கூறியிருந்தோம். பாடசாலையின் கல்வித்தரத்தைப் பேணவும், வகுப்பறையில் மாணவர்களது எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவுமே அவ்வாறு நாம் முடிவு எடுத்திருந்தோம்.

பாடசாலை கல்வித்தராதரத்தை அடிப்படையாகக் கொண்டே அரசு எமக்கு நிதி உதவிகளை வழங்குகின்றது. நிதி வழங்கும் நிறுவனங்கள் கூட பரீட்சைச் சித்தி வீதம் தொடர்பில் எம்மிடம் கேட்பார்கள். குறித்த இடங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி *வறுமையில் உள்ளனரே* தவிர பொருளாதார ரீதியாக அவர்களுக்கு வறுமை இல்லை.

சில பெற்றோரே தமது பிள்ளைகளைச் சேர்க்கவில்லை என்று குறை கூறுகிறார்கள் - என்றார்.

இது தொடர்பில் வட மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராஜாவிடம் கேட்டபோது, பெரிய புலோ, கல்விளான், காட்டுப்புலம் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களது பெற்றோர்களை விரைவில் விக்ரோறியாக் கல்லூரியில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம். அதன்போது பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும் - என்றார். (ஐ-4-86-400)

## வெல்லம்பிட்டி ஓ.ஐ.சி. கைது

கொழும்பு, ஜன.2

போதைப்பொருள் குற்றச் சாட்டின்கீழ் வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்.

வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் இவரைக் கைது செய்துள்ளனர். தடுப்புக் காவல் உத்தரவில் இவர் மீது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(ஐ-சி)



புத்தாண்டு பிறப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் நள்ளிரவு கதிர்காமத்தில் கொண்டாடினார்.

## விசர் நாயின் நகக் கீறல் சிறுமியின் உயிருக்கு எமனானது

### *பரிசோதனை முடிவில் தகவல்*

வலி.தென்மேற்கு,ஜன. 2

நவம்பர் மாதம் 30 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்த சிறுமியின் சாவுக்கு நாயின் நகக் கீறலே காரணம் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நவாலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த சிவநேசன் துஷாயினி (வயது -10) என்ற சிறுமியே காய்ச்சலால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் உயிரிழந்தார்.

குறித்த சிறுமிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வீட்டில் வளர்த்த குட்டி நாய் கீறியுள்ளது. இதற்காக தனியார் வைத்திய சாலையில் சிகிச்சை பெறப்பட்டுள்ளது. மூன்று வாரங்களின் பின்னர் அந்த நாய்க்குட்டி இறந்துவிட்டது.

மூன்று மாதங்களின் பின்னர் சிறுமிக்குக் காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு அவர் உயிரிழந்தார்.

சிறுமியின் மூளை மற்றும் மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், விசர் நோயினால் பாதிக்கப்பட்ட நாயின் நகக் கீறலே உயிரிழப்பு ஏற்படக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-115)

# கைதான மீனவர்கள் 18 பேர் நேற்றுமுன்தினம் பரிமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 2

இலங்கை - இந்திய மீனவர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் இலங்கை, இந்திய மீனவர்கள் 18 பேர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடல் எல்லைகளை மீறிச் சட்டவிரோதமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய இலங்கை மீனவர்களே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்கள் அறுவர் இந்தியக் கடலோரக் கடற்படையினரிடமும், இலங்கை மீனவர்கள் 12 பேர் இலங்கைக் கடற்படையினரிடமும் ஒப்படைக்கப்பட்டனர் என இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் ரொஹான் ஜோசப் தெரிவித்தார்.

இதேவேளை இரு பகுதியிலும் இருந்து இவ் விரண்டு மீன்பிடிப் படகுகளும் பரிமாறப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார் மீனவர்களைப் பரிமாறும் திட்டத்தின் ஊடாகவே காங்கேசன்துறைக்கு அப்பாலுள்ள கடல் எல்லையில் வைத்து இந்த நிகழ்வு இடம்பெற்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-400)

# பள்ளிவாசல் மீது தாக்குதல்

கண்டி, ஜன.2

கண்டி பூஜபிட்டிய பிரதேச சபைக்குட்பட்ட அம்பதென்ன, முல்லேகம பகுதியால் அமைந்துள்ள பள்ளிவாசல் மீது கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு 10 மணியளவில் வந்த இனந்தெரியாத கும்பல் ஒன்று பள்ளிவாசல் மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்திவிட்டு பள்ளிவாசலின் கதவை உடைத்து உள்ளே நுழைந்தும் தாக்குதல் நடத்தினர் என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.



இந்தச் சம்பவம் குறித்து, மேலதிக விசாரணைகளை மத்திய மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் எச்.என்.பீ. அம்பன் [illegible] கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

## திருட்டுக் குற்றவாளிக்கு ஒரு வருட சிறைவாசம்

யாழ்ப்பாணம்,ஜன. 2

வீடு புகுந்து பொருள்களைத் திருடியவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்று ஒரு வருட சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

நாரந்தனை சூரியாவத்தையிலுள்ள வீடு ஒன்றினுள் பகல் நேரம் கடந்த 15 ஆம் திகதி உள்நுழைந்து பணம், ஒரு லட்சத்து 71 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள், கைத்தொலைபேசி என்பவற்றைத் திருடிச் சென்ற குற்றத்துக்காக இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் இந்த வழக்குத் தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

திருட்டுத் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து அதே இடத்தைச் சேர்ந்த ஜோசப் றமன்சன் என்பவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். நீதிமன்றில் அவர் தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டார். பணம் தவிர்ந்த ஏனைய பொருள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

> “ **குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அத்துமீறி வீடு புகுந்ததற்காக ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை விதித்ததோடு திருடிய குற்றத்துக்காக ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.**

பணத்தைச் செலவு செய்துவிட்டதாக அவர் மன்றில் தெரிவித்தார். அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அத்துமீறி வீடு புகுந்ததற்காக ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை விதித்ததோடு திருடிய குற்றத்துக்காக ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவர் ஏற்கனவே திருட்டுக்களில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டு ஒத்தி வைத்த சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## நல்லுண்ணி வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.2

'நெல்சிப்' திட்டத்தின் கீழ் பிரான்பற்று நல்லுண்ணி வீதியின் புனரமைப்புப் பணிகள் நேற்று சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன. வலி.தென் மேற்கு பிரதேச சபையின் உதவித் தவிசாளர் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

வலி.தென் மேற்குப் பிரதேச சபையின் கீழ் உள்ள ஐந்து வீதிகள் சுமார் ஆறு கோடி ரூபா செலவில் புனரமைப்புக்குத் தெரி வாகியுள்ளன.

இதில் முதலாவதாக நல்லுண்ணி வீதியைத் திருத்துவதற்கு வேலைகள் ஆம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-115)

## முகாமைத்துவ பரீட்சை

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் மனிதவள முகாமைத்துவ கற்கை நெறிக்கான பரீட்சைகள் எதிர்வரும் 18ஆம், 19ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில் நடைபெறும் என பதிவாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைக்குரிய நேர அட்டவணையை பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-400)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 21000இற்கும் மேற்பட்டோர் இம்முறை வாக்காளராக பதிவு

யாழ்ப்பாணம்.ஜன.2
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இந்த முறை அதிகளவானோர் புதிய வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ளனர். சுமார் 21 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இவ்வாறு பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த முறை புதிய வாக்காளராகப் பதிவு செய்பவர்களுக்கான கால எல்லை நேற்றுமுன்தினம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையென அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி நேற்றுமுன்தினம் வரை 21 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ளனர்.
கடந்த பல தடவைகள் இவ்வாறு பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் சுமார் 3 ஆயிரம் பேர் வரையிலானோரே தம்மைப் புதிய வாக்காளர்களாகப் பதிவு செய்திருந்தனர். எனினும் இந்தமுறை அந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
நேற்றுடன் நிறைவடைந்த வாக்காளர் எண்ணிக்கை பதிவின்படியே இந்த வருடத்துக்கான சகல தேர்தல்களுக்குமான வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ங-4)

## பொன் விழாக் கண்டது சாவகச்சேரி நகர சபை

தென்மராட்சி.ஜன.2
சாவகச்சேரி நகரசபையின் 50 ஆவது ஆண்டுப் பொன்விழா நிகழ்வுகள் நேற்று கேக் வெட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டன.
நகர சபைத் தலைவர் இ.தேவ சகாயம்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்ஸீல், சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா, சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, மருத்துவர் எஸ்.எஸ்.அருளானந்தம், சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஆசைமுத்து அலெக்ஸாண்டர் மற்றும் சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
ஆசியுரையை 'தேசமான்ய' பண்டிதர் கலாநிதி கு.து.ஜெகதீஸ்வரக் குருக்கள், அமெரிக்க - இலங்கை மிஷன் திருச்சபை நுணாவில் தேவாலய போதகர் வண.தேவராசா அடிகள் ஆகியோர் நிகழ்த்தினர்.
சபையில் கடமையாற்றிய முன்னாள் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரின் உருவப் படங்களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. (வ-9)

## மழை வேண்டி இளநீர் அபிஷேகம்


மல்லாவி.ஜன.2
மழை வேண்டி மல்லாவியில் அமைந்துள்ள ஸ்ரீபால சுப்பிரமணியர் ஆலயத்தில் 1008 இளநீர்களால் அபிஷேகம் நடத்தப்பட்டது.
நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் மல்லாவி திருநகர் விவசாயிகள், கமக்கார அமைப்புக்கள் இணைந்து இந்த இளநீர் அபிஷேகத்தை நடத்தினர்.
மழை பொய்த்ததால் மல்லாவிப் பகுதியில் சுமார் 6000 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் எரிந்து அழியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.
வவுனிக்குளத்தின் நீர்மட்டமும் வெகுவாகக் குறைந்துள்ளதால் நெற் பயிர்களைக் காப்பாற்றுவதற்குத் தேவையான நீரை அதிலிருந்து வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
இந்த நிலையிலேயே முருகனுக்கு இளநீர் அபிஷேகம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-415)

## பெண்களைக் கடித்து குதறிய இளம் பெண்

*தென்மராட்சி, ஜன.2*
*வீடொன்றுக்குள் திடீரென உள்நுழைந்து அங்கிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்களைக் கடித்துக் குதறினார் ஒரு இளம் பெண். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நுணாவில் 190 ஆம் கட்டையடியில் இடம்பெற்றது.*
*கடிகாயங்களுக்கு இலக்கான மூவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.*
*குறித்த பெண் ஏற்கெனவே இதுபோன்று பலருக்குக் கடித்து காயம் விளைவித்த போதிலும் அவருக்கு எதிராக நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.* (வ-9)

## திணைக்களங்களில் புதுவருட செயற்பாடுகள் நேற்று ஆரம்பம்

தென்மராட்சி.ஜன.2
2014 ஆம் ஆண்டின் முதல் நாளான நேற்று சகல திணைக்கள அலுவலகங்களிலும் தேசியக் கொடியேற்றப்பட்டு அலுவலக உறுதிமொழிகளும் அலுவலர்களால்மேற்கொள்ளப்பட்டன.
சாவகச்சேரி நகரசபை முன்றலில் செயலாளர் கா.சண்முகதாசன் தேசியக் கொடியையும், தலைவர் இ.தேவச காயம்பிள்ளை நகரசபைக் கொடியையும் ஏற்றி வைத்தனர்.
செயலாளர் முன்பாக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இந்த வருடம்பொது மக்களுக்கு சிறந்தசேவையைவழங்குவோம் என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். நகரசபை தலைவர் இ.தேவ சகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அனைத்து உறுப்பினர்களும், உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் கலந்து கொண்டனர். (வ-9)



## சேவைக்கால அடிப்படையில் விரைவில் சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனம்

யாழ்ப்பாணம்.ஜன.2
வடமாகாணத்தில் சுகாதாரப் பணியாளர்களது வெற்றிடங்கள் மீளாய்வு செய்யப்பட்டு சுகாதாரத் தொண்டர்களது சேவைக்கால அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.
வடமாகாண சுகாதார அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் ஒரு வார காலத்துக்கும் மேலாக கவனவீர்ப்புப் போரட் டத்தை நடத்தி வந்தனர். இது தொடர்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் சத்தியலிங்கம், அமைச்சின் செயலாளர் ரவீந்திரன், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், சுகாதார வைத்திய அதிகாரிகள், சுகாதாரத் தொண்டர்கள் பலர் கலந்துகொண்டனர்.
அதன்போதே வடமாகாண சுகாதார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "வடமாகாணத்தில் உள்ள சுகாதாரப் பணியாளர்களது வெற்றிடங்கள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன. அவை மத்திய சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டவுடன் இந்த நியமனங்கள் வழங்கப்படும் என்று அமைச்சர் சுகாதாரத் தொண்டர்களுக்கு உறுதியளித்தார். (ங-4)

> "–"
> நிரந்தரநியமனம்வழங்குமாறு கோரி யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் ஒரு வார காலத்துக்கும் மேலாக கவனவீர்ப்புப் போரட்டத்தை நடத்தி வந்தனர்.

## பயமுறுத்தல்களால் சபைகளின் செயற்பாடுகள் தடைப்படமாட்டா

*நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன.2
கொலை அச்சுறுத்தல்கள் போன்ற பயமுறுத்தல்களால் எந்த ஒரு பிரதேச சபையின் செயற்பாடுகளையும் நிறுத்திவிட முடியாது என்று நல்லூர் பிரதேச சபைக் கூட்டத்தில் தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.
காரைநகர் பிரதேச சபைத் தலைவர் எஸ்.ஆனைமுகனுக்கு தொலைபேசியூடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து கடந்த செவ்வாய்க் கிழமை நல்லூர் பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
ஆளும் கட்சியினராயினும் சரி, எதிரணியினராயினும் சரி உறுப்பினர் என்ற வகையில் அவரை அச்சுறுத்துவதோ பயமுறுத்துவதோ ஏற்க முடியாதது. இது போன்ற சம்பவங்கள் குறித்து அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
இவ்வாறான சம்பவங்கள் தொடரும் பட்சத்தில் மக்களால் ஜனநாயக ரீதியில் எதிர்ப்புப் போராட்டங்கள் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (வ-7)

## வறிய மாணவர்களுக்கு பருவகாலச் சீட்டுக்கள்

*வவுனியா டயலொக் நிறுவனத்தின் உதவியுடன்*

வவுனியா, ஜன.2
வறிய மாணவர்கள் 93 பேருக்கு வவுனியா டயலொக் நிறுவன ஊழியர்கள் அரச பஸ்களில் பயணம் செய்வதற்கான பருவகால சீட்டுக்களை வழங்கியுள்ளனர்.
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வவுனியா டிப்போவினர் வறியமாணவர்களை இனம் கண்டு நிறுவனங்கள் ஊடாக பருவகாலச் சீட்டுக்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.
இதனடிப் படையில் வவுனியா டயலொக் கிளையினரின் உதவியுடன் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் 93 வறிய மாணவர்களுக்கு பருவகாலச் சீட்டுக்கள் வழங்கப்பட்டன.



வவுனியா டயலொக் நிறுவன ஊழியர்களின் நிதிஉதவியுடன் ஓமந்தை மத்திய கல்லூரி, மாதர் பணிக்கர் மகிழங்குளம் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்கே இவை வழங்கப்பட்டன. ஓமந்தை மத்திய கல்லூரி அதிபர் எஸ்.திருஞானசம்பந்தமூர்த்தி உட்பட பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (க-402)

## ஒட்டுசுட்டானில் இன்று முதல் மண்எண்ணெய் விநியோகம்

*கூட்டுறவுச் சங்கத் தலைவர் தெரிவிப்பு*

முல்லைத்தீவு, ஜன.2
சில நாள்களாக ஒட்டுசுட்டானில் தடைப்பட்டிருந்த மண் எண்ணெய்விநியோகம் இன்று முதல் இடம்பெறுமென முத்துஐயன்கட்டு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் வைத்தியர் நா.வன்னியசிங்கம் தெரிவித்தார்.
ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள முத்துஐயன்கட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த சில தினங்களாக மண்எண்ணெய் விநியோகம் இடம்பெறாததால் மின்சாரம் வழங்கப்படாத கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடர்களை எதிர் கொண்டு வந்தனர். இந்த நிலையில் இது தொடர்பாக சங்கத் தலைவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது எரிபொருள் நிரப்பு நிலையத்தை சங்கம் ஆரம்பித்ததன் பின்னர் ஒழுங்கான வகையிலேயே எரிபொருள் விநியோகம் இடம்பெற்று வருகின்றது. வருட இறுதியின் போது முல்லைத்தீவு அரச செயலகத்துக்குப் பெருந்தொகையான நிதியை வழங்க வேண்டியிருந்ததால் மண்எண்ணெய்யைக் கொள்வனவு செய்வதில் இடர்கள் காணப்பட்டன. இதன் காரணமாகவே அதன் விநியோகமும் தடைப்பட்டிருந்தது.
தற்போது நிலைமை சீராகியுள்ளதால் இன்று தொடக்கம் வழமைபோன்று மண்எண்ணெய் விநியோகம் இடம்பெறுமென அவர் மேலும் தெரிவித்தார். (க-500)

> "–"
> கடந்த சில தினங்களாக மண் எண்ணெய் விநியோகம் இடம்பெறாததால் மின்சாரம் வழங்கப்படாத கிராமங்களைச் சேர்ந்த மக் கள் இடர்களை எதிர் கொண்டு வந்தனர்.

## கல்வி அமைச்சர் தென்மராட்சிக்கு நாளை பயணம்

தென்மராட்சி.ஜன.2
வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா நாளை வெள்ளிக்கிழமை தென்மராட்சி பிரதேசத்துக்கு பயணம் செய்யவுள்ளார்.
இதன் போது காலை 9 மணிக்கு சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் அதிபர்களுடனான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் வேள்ட் விஷன் நிறுவன அனுசரணையுடன் வழிகாட்டல் கையேடு வெளியீடு மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் ஆகியனவும் இடம்பெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் அறிவித்துள்ளார். (வ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீனவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம்

*இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் அந்தோனி*

புதுடில்லி, ஜன.2
இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுப்பதற்கான முயற்களை எடுத்து வருகின்றோம் என்று தெரிவித்துள்ளார் இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி.
கடந்த சில நாள்களில் மட்டும் 40க்கும் அதிகமான இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் ஏ.கே.அந்தோனி.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"தமிழக அரசியல் தலைவர்கள், மீனவர் பிரதிநிதிகள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கை சிறையில் உள்ள அனைத்து இந்திய மீனவர்களையும் விடுவிக்க நாங்கள் முயற்சிகள் எடுத்து வருகிறோம். வெளியுறவுத்துறை அமைச்சகம் மூலம் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், இதற்கு ஒரு நிரந்தர தீர்வு காணவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்று அவர் தெரி வித்துள்ளார். (ற)

> "–"
> இலங்கைச் சிறையில் உள்ள அனைத்து இந்திய மீனவர்களையும் விடுவிக்க நாங்கள் முயற்சி கள் எடுத்து வருகிறோம்.

# நிவாரணம் கோருகின்றனர் வவுனியா விவசாயிகள்

*மழை பெய்யாததால் இந்த அவல நிலை*

வவுனியா,ஜன.2
வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்து நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்ட பெரும்போக நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் தமக்கு நிவாரணம் வழங்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
மழையின்மை காரணமாக குளங்களில் நீர் மட்டம் குறைந்துள்ளது. வயல்களில் நீர் இல்லாததால் நெற்பயிர் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பயிர்களுக்கு உரம் இட முடியாத நிலையும் தோன்றி யுள்ளது. நெற்பயிர்ச் செய்கை பாதிப்படைந்துள்ளதால் விவசாயிகள் பல்வேறு நிறுவனங்களிலிருந்து நெற்செய்கைக்கெனப் பெற்ற கடன்களைத் திரும்பச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இலகுகடன் அடிப்படையில் வாடகைக் கொள்வனவு மூலமாகப் பெற்ற உழவு இயந்திரம், அறுவடை இயந்திரம் ஆகியவற்றின் தவணைப் பணங்களைக் கூடச் செலுத்த முடியாத நிலையும் இங்கு உருவாகியுள்ளது.
மேலும் உப உணவுப் பயிர்களான கௌபி, உழுந்து, பாசிப்பயறு, எள்ளு போன்றவையும் வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.
கடந்த ஆண்டு அதிக மழை வீழ்ச்சி காரணமாக அறு வடையின்போது அழிவுகளைச் சந்தித்த விவசாயிகளுக்கு தற்போது வறட்சி காரணமாக பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

## பயன் தராத நல்லினப் பசுக்கள்

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட நல்லின பசுக்களால் தமக்குப் பயன் எதுவும் கிடைக்கவில்லையென கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்தனர். துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தி லேயே இந்த விடயம் தெரிவிக் கப்பட்டது.
உதவி அமைப்பு ஒன்றினால் வழங்கப்பட்ட பசுக்கள் நன்றாகப் பராமரிக்கப்பட்ட போதிலும் இனப்பெருக்கத்துக்குத் தயாராகாதுமலட்டுத்தன்மையுடன்காணப்படுவதாகவும் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. துணுக்காய் பிரதேசசெயலர் பிரிவில் விலங்கு வேளாண்மை முக்கிய தொழில் என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

# மீனவர்கள் துயர் போக்குவதற்கு பொங்கி எழுகின்றது தி.மு.க.

*விரைவில் போராட்டங்கள் என்கிறார் கருணாநிதி*



சென்னை, ஜன.2
இலங்கைக் கடற்படையிடம் இருந்து தமிழக மீனவர்களைக் காப்பாற்ற விரைவில் போராட்டம் நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.
இந்த விடயம் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் கருணாநிதி. அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,
"இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்களுக்கு நேரும் கொடுமையை இனியும் தாங்கிக் கொள்ளத் தயாராக இல்லை. மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தி.மு.க. சார்பாகப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.
கடல் ஆதாரத்தை நம்பி வாழும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சோதனைகளுக்கு மேல் சோதனையைச் சந்தித்து வருகின்றனர். அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பிரச்சினைகளின் முழு வடிவத்தையும் எடுத்துக் கூறியிருந்தார். பிரதமரும், வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தும் தக்க முடிவு எடுப்பதாக அவரிடம் உறுதி அளித்தனர்.
ஆனால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், அவர்களை இலங்கைச் சிறையில் அடைப்பதும் நின்றபாடில்லை. மீனவர் பிரச்சினை தொடர்பாகச் செவிமடுப்பதுபோல இந்திய மத்திய அரசு காட்டிக் கொள்கின்றது. ஆனால் உரிய பயன் விளையவில்லை.
இலங்கைக் கடற்படையினரால் மீனவர்களுக்கு நேரும் கொடுமையை இனியும் தமிழ்நாடு தாங்கிக் கொள்ளத் தயாராக இல்லை.
பிரச்சினையின் அவசர, அவசியத்தை மனிதாபி மானக் கண்கொண்டு பார்க்கத் தவறி, பழி வாங்கும் நோக்கத்தோடு இலங்கை அரசின் ஆதரவோடு நடைபெறும் இந்தக் கொடுமையை எவ்வளவு நாளுக்குத்தான் தமிழக மக்களால் தாங்கிக் கொள்ள முடியும்.
இந்தப் பிரச்சினைக்கு கடுமையான மாற்றுவழி என்ன என்பதைத் தெரிந்து, தெளிந்து, இலங்கை கடற்படையின் அட்டூழியத்தை நேரடியாகவே சந்தித்து, அதில் முடிவு காண்பதற்கு தமிழகம் தயாராகி வருகிறது.
தமிழக மீனவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் களத்தில் நிற்பதற்கும், அவர்களைக் காப்பாற்ற எத்தகைய இடுக்கண்களை ஏற்பதற்கும் நானும், என் தலைமையில் உள்ள தி.மு.கவும் தயாராக இருக்கின்றோம். போராட்டத்துக்கான திகதி விரைவில் குறிக்கப்படும்" என்று தெரிவிக் கப் பட்டுள்ளது. (ற)

# மீனவர்கள் மீதான தாக்குதல் கண்டிக்கப்பட வேண்டியவை

*ஜி.கே.வாசன் தெரிவிப்பு*



சென்னை, ஜன.2
தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை நடத்தி வரும் தாக்குதல்களுக்கு இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது,
"மீனவர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக இருநாட்டு மீனவர்களுக்கு இடையே பேச்சுக்களை நடத்துவதற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. எதிர் வரும் 20 ஆம் திகதி அந்தப் பேச்சுக்களை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதலை நடத்தியுள்ளதுடன் அவர்களைக் கைதும் செய்துள்ளனர். இது கண்டிக்கத்தக்கது.
இந்திய மத்திய அமைச்சின் நீண்ட நாள் முயற்சியின் பயனாக இருநாட்டு மீனவர்களிடையே பேச்சு நடத்தப்படவுள்ளது. இந்தநிலையில் மீனவர் பிரச்சினையை அரசியலாக்காது, மாநில அரசும், அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு அளித்து சுமுகத்தீர்வு ஏற்பட வழி வகை செய்யவேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# இருநாட்டு மீனவர் சந்திப்புக் குறித்து இலங்கை மீனவர்களுக்கு தெரியாது

*தமிழக மீனவர் அமைப்பின் பிரதிநிதி கூறுகின்றார்*

சென்னை, ஜன.2
தமிழக மற்றும் இலங்கை மீனவர் பிரதிநிதிகளுக்கு இடையிலான பேச்சுக்கள் குறித்து ஊடகங்களிலேயே தகவல்கள் வெளியாகி வருகின்றன. எனினும் அது குறித்து இலங்கை மீனவர்கள் எதுவும் அறிந்திருக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்அண்மையில்இலங்கை வந்து திரும்பிய நிரபராதி மீனவர்கள் விடுதலைக்கான கூட்டமைப்பு என்ற தமிழக அமைப்பின் தலைவரான அருளானந்தம்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"இலங்கையில் பெரும்பாலான மீனவர்கள் சென்னையில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகள் குறித்து அறிந்திருக்கவில்லை. இரு நாட்டு மீனவர்களும் இம் மாதம் 20ஆம் திகதி சென்னையில் சந்தித்துப் பேசுவார்கள் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறியுள்ளார். இந்தத் தகவல்கள் இந்திய, இலங்கை ஊடகங்களில் வெளியாகியுள்ளன.
அதுகுறித்து இலங்கையில் உள்ள மீனவர்களிடம் கேட்டேன். எனினும் இதுவரை அந்தப் பேச்சுத் தொடர்பாகத் தம்மை யாரும் அணுகவில்லை. இலங்கை அரச தரப்பில் தமக்கு சென்னைக் கூட்டம் குறித்து எந்தத் தகவலும் இதுவரை கூறப்படவில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். அந்த ஏற்பாடுகள் குறித்து அவர்கள் எதுவும் தெரிந்திருக்கவில்லை." என்று தெரிவித்துள்ளார்.
இலங்கை, இந்தியச் சிறைகளில் உள்ள மீனவர்கள் குறித்து அவர் கூறும்போது,
"சிறையில் உள்ள மீனவர்கள் உளரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். உணவுப் பிரச்சினையால் சிரமமப்படுகிறார்கள். இலங்கைச் சிறைகளிலுள்ள மீனவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன.
எனினும் இலங்கைக் கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்பதில் சிக்கல் நிலவுகின்றது. படகுகளின் உரிமையாளர்கள் தகுந்த ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையாகி விளக்கமளித்தால் மட்டுமே, படகுகளை விடுவிப்பது தொடர்பிலான வழக்கு அடுத்த கட்டத்துக்கு நகரும் என்று இலங்கையில் வழக்குகள் நடைபெறும் நீதிமன்றங்கள் தெளிவாகக் கூறி விட்டன என்று தெரிவித்துள்ளார். (ற)

> "–"
> இரு நாட்டு மீனவர்களும் இம் மாதம் 20ஆம் திகதி சென்னையில் சந்தித்துப் பேசுவார்கள் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறியுள்ளார்.

# கிராம மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியை தனியொருவர் ஆக்கிரமிப்பு

*முறைப்பாடு தெரிவித்தனர் மக்கள்*

பூநகரி, ஜன.2
பூநகரி ஜெயபுரம் கிராம மக்களுக்கென ஒதுக்கப்பட்ட வயல் நிலத்தில் ஒரு பகுதியைத் தனியார் ஒருவர் ஆக்கிரமித்துள்ளமை தொடர்பாக கிராம மக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி, பூநகரி, ஜெயபுரம் கிராம மக்களுக்கென ஒதுக்கப்பட்ட வயல் நிலத்தில் தனியார் ஒருவர் 30 ஏக்கர் வரையான நிலப் பகுதியை ஆக்கிரமித்துள்ளதுடன் நெற் பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டுள் ளார்.
இது தொடர்பாக ஜெயபுரம் கிராம மக்கள், கிளிநொச்சி அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.
ஜெயபுரம் கிராம மக்களுக்கு வயல் நிலம் வழங்கவென 1989 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 526 ஏக்கர் நிலம் போர்ச் சூழல் காரணமாக துப்பரவு செய்யப்படவில்லை. மீளக் குடியமர்வு இடம்பெற்ற நாளிலிருந்து மேற்படி வயல் நிலத்தில் மிதிவெடிகள் உள்ளதாகவும், அவை அகற்றப்பட்டதும் வயல் நிலங்கள் மக்க ளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டு வந்தது.
இந்த நிலையில் மேற்படி பகுதியில் தனிநபர் ஒருவர் 30 ஏக்கர் நிலப்பகுதியைத் துப்புரவு செய்து நெற் செய்கையில் ஈடுபட்டுள்ளார்.
இவரது இந்தச் செயலைத் தடுத்து நிறுத்துவதுடன் ஜெயபுரம் கிராம மக்களுக்குரிய 526 ஏக்கர் வயல் நிலத்தையும் மிதிவெடிகளை அகற்றித் துப்புரவு செய்து தருமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
வன்னேரிக் குளத்தையும், தேவன் குளத்தையும் இணைப்பதன் மூலமாக ஜெயபுரம் கிராமமக்களுக்கு மேலதிகவயல் நிலங்கள் வழங்கக்கூடிய நிலை உருவாகுமெனவும் தெரியவருகின்றது. (க-18)

# புதுவருடத்தில் காலநிலை மாற்றம்

நாட்டின் சகல பாகங்களிலும் நிலவி வந்த வறட்சியான காலநிலை மாறி நேற்று முதலாம் திகதி முதல் நாடெங்கும் மழை பெய்யும் அறிகுறிகள் தென்படுவதாக வளிமண்டல அவதான நிலையம் தெரிவித்திருக்கின்றது.
அதற்கமைய வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் தொடங்கும் மழை படிப்படியாக நாட்டின் ஏனைய பாகங்களுக்கும் பரவும் என வளிமண்டல அவதான நிலையத்தின் அதிகாரி சன்ன ரொட்ரிகோ தெரிவித்துள்ளார்.
அத்துடன் மேல்மாகா ணத்திலும் திருகோணமலை தொடக்கம் பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையிலான கடற்கரைப் பிரதேசங்களிலும் மழை பெய்யும் அறிகுறிகள் தென்படுமெனவும் திருகோணமலையிலிருந்து பொத்துவில் ஊடாக அம்பாந் தோட்டை வரையிலான கடற் பிரதேசங்களில் காற்று மணிக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் வீசலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழப்பத்தில் வெங்காயச் செய்கையாளர்

***பொய்க்கும் பருவ மழையாலும் விலையேற்றத்தாலும் பெரும் அவதி***



அச்சுவேலி, ஜன.2

விதை வெங்காயத்தின் விலை ஏற்றம், விதை வெங்காயத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, பாதகமான காலநிலை போன்ற களநிலைகள் வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளைக் குழப்பத்துக்கு உள்ளாக்கியுள்ளன.

"இந்த வருடம் மாரிமழை பொருத்தமான அளவு பெய்யவில்லை. பயிர்ச் செய்கை நிலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் ஏற்படக் கூடிய வேதியல் மாற்றம் எதுவும் நிகழவில்லை.

அதேநேரம் விதை வெங்காயத்தின் விலை எந்தக் காலப் பகுதியிலும் இல்லாத அளவுக்கு உச்சநிலைக்கு உயர்ந்துள்ளது" என்கின்றனர் விவ சாயிகள்.

50 கிலோ வேதாள வெங்காயம், வல்லாரை வெங்காயம் என்பன 11 ஆயிரம் ரூபாவுக்கு மேல் 13 ஆயிரம் ரூபா வரை விற் பனையாகின்றன. யாழ்ப்பாண சின்ன வெங்காயம் 9 ஆயிரம் ரூபாவில் இருந்து 10 ஆயிரம் ரூபா வரை விற்பனையாகின்றது. இந்த நிலையில் ஆயிரம் கன்று (3½ பரப்பு) வெங்காயம் நடுகை செய்வதற்கு 45 ஆயிரம் ரூபா வரையில் விதை வெங்காயத்துக்கு மட்டும் செலவு செய்ய வேண்டும். அத்துடன் விதை வெங்காயத்தை இயல்பு நிலையில் கொள்வனவு செய்ய முடியாது. அலைந்துதிரிந்து இடைத் தரகர்களின் உதவியுடனே தான் கொள்வனவு செய்ய வேண்டும்.

"மாரி மழை உரிய காலப் பகுதியில் பெய்யாமல் இருப்பதால் பின் மழை பெய்யலாம் என எதிர்வு கூறப்படுகின்றது. வெங்காயப் பயிர் வளர்ந்து வரும் போது தொடர் மழை பெய்வதோ, தோட்டநிலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதோ பயிருக்குக் கூடாது. அது பயிரை அழுகச் செய்து விடும். அதில் இருந்து தப்பிப் பிழைப்பவையும் உரிய விளைச்சலைத் தரமாட்டாது" என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வெங்காயப் பயிரை குறித்த பருவத்தில் 8-10 தினங்களுக்கு உள்ளே நடுகை செய்து முடிக்க வேண்டும். இல்லாவிடில் காலம்பிந்தி நடுகை செய்த வெங்காயப் பயிரை மூத்த பயிரில் ஏற்படும் பூச் சித் தாக்கம் பாதிக்கச் செய்து விடும்.

மாரிமழை இல்லாமை, பனிப் பொழிவு அதிகமாக இருத்தல் போன்ற பாதகமான கால நிலையில் மிகக் கூடிய விலையில் விதைவெங்காயத்தைக் கொள்வனவு செய்து நடுகை செய்வதால் ஏற்படக்கூடிய விளைவுகள், பொருளாதார இழப்புக்கள், பாதிப்புக்கள் குறித்து விவசாயிகள் மனக் குழப்பத்துக்கு உள்ளாகிய நிலையிலேதான் வெங்காய நடுகையில் ஈடுபட்டுள்ளனர். (வ-11)

## வர்த்தக நிலையத்தில் திருடர்கள் கைவரிசை



யாழ்ப்பாணம், ஜன.2

கல்வியங்காட்டுப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றை உடைத்த திருடர்கள் இரண்டு லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த பொருள்களைக் கள வாடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றது.

முத்திரைச் சந்திக்கு அருகில் உள்ள இந்த வர்த்தக நிலையத்தின் முன்பக்கக் கதவை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்த கைத் தொலைபேசிக்கான மீள் நிரப்பு அட்டைகள் உட்பட பொருள்கள், பணம் என்பவற்றைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (து-17)

## கால்நடைகளுக்கு கால்வாய் நோய்

யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழை, கோப்பாய், சுழிபுரம் போன்ற பகுதிகளில் உள்ள மாடுகளில் கால்வாய் நோய் அறிகுறிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று கால்நடை உற்பத்தி சுகாதார திணைக் களத்தின் உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம் தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

இந்த நோய் தற்போது தீவிரமாக பரவி வருவதால் மக்கள் விழிப்புணர்வுடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். மாடு, ஆடுகளில் குரை, வாய் பகுதிகளில் புண்கள் காணப்படின் விரைவாக கால் நடை வைத்தியர்களுடன் தொடர்பு கொண்டு சிகிச்சை அளிப்பித்துக் கொள்ளுங்கள்.

கால் நடைகளுக்கு நோய்த் தடுப்பூசி போடாதவர்கள் கால் நடை வைத்திய நிலையங்களுடன் தொடர்பு கொண்டு தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்ள வேண்டும் என்றார். (ஓ)

## நடமாடும் வாகனங்களில் பேக்கரி உணவுகள் விற்பனை

***சில்லறை வியாபாரிகள் பாதிப்பு***

குடாநாட்டில் பரவலாக பேக்கரி உணவுகள் நடமாடும் வாகனங்களில் விற்பனை செய்யப்படுவதால் சில்லறைக் கடைகளில் பேக்கரி உணவுகள் தேக்கமடைவதுடன் விற்பனையும் பாதிப்படைந்துள்ளது.

குடாநாட்டில் அண்மைக்காலமாக பேக்கரி உணவுகள் நடமாடும் வாகனங்களில் எடுத்துச் செல்லப்பட்டு கிராம ரீதியாக விற்பனை செய்யப்படுகிறது. இதன்காரணமாக பேக்கரி உணவுகளை வாங்கும் மக்கள் தற்போது நடமாடும் வாகனங்களில் அவற்றைக் கொள்வனவு செய்து வருகின்றனர். இதனால் பேக்கரி உணவுகளை ஓடர்களுக்கு வாங்கி விற்பனைக்கு வைத்துள்ள சில்லறைக் கடை வியாபாரிகள் விற்பனையாகாமல் தேங்கிப்போன பழுதடைந்த உணவுகளை கால்நடைகளுக்கு வைக்க வேண்டிய நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

பேக்கரி உணவுகளில் குறிப்பாக பாண், பணிஸ் போன்றவையே விற்பனை இல்லாது சில்லறைக்கடைகளில் தேக்கமடைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (வ-14-29)

ECONOMICS HALL
ஆரியகுளம் சந்தி
(யாழ் நகர்)
தற்போது யாழ் நகரில்
பொருளியல் உதயன்
A/L 2014
Day Class
ஆரம்பம் : 03.01.2014 வெள்ளிக்கிழமை
காலை 8 மணி
A/L 2014, 2015, 2016
சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம் : 05.01.2014 (41834) (7.6.3)
ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி

### அங்கத்தவர்களில் வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தல்

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர் பட்டியலின் பிரகாரம் 31.12.2013 முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர் இடாப்பின் பட்டியல் இன்று 02.01.2014 ஆம் திகதி முதல் 18.01.2014 ஆம் திகதிவரை உரியகிளைகளிலும், இயங்காத பரமேஸ்வராச் சந்தி - 21 திருநெல்வேலிச் சந்தி - 22 ஆகிய இரண்டு கிளைகளின் பட்டியல் திருநெல்வேலி சந்தி மக்கள் கடையிலும் காட்சிப்படுத்தப்படுகின்றது. இவ் வாக்காளர் இடாப்புத் தொடர்பில் அங்கத்தவர்களின் உறுப்புரிமை தொடர்பிலும், வாக்குரிமை தொடர்பிலும் ஏதேனும் முறைப்பாடுகள், ஆட்சேபனைகள் அபிப்பிராயங்கள் இருப்பின் அவை தொடர்பாக **22.01.2014 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி** என்ற முகவரிக்கு எழுத்துமூலம் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கச்செய்யுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்படி முழுத்தகைமை பெற்ற உறுப்பினர் மட்டுமே கிளை பொதுச்சபை கூட்டங்களுக்கு சமுகமளிக்கவோ வாக்களிக்கவோ உரிமை பெற்றவர்கள் ஆவார். (முழுத் தகைமைபெற்ற உறுப்பினர் என்பது உறுப்பினர்களாக சேர்ந்த திகதியில் இருந்து ஓராண்டு காலத்தை முழுமையாகப் பூர்த்தி செய்தலுடன் ஒரு முழுப்பங்கு ரூபா 100/= ஐச் செலுத்தி முடித்தவரும் ஆன ஓர் உறுப்பினரைக் குறிக்கும்)

நெறியாளர் குழு கட்டளைப்படி
செயலாளர்,
நல்லூர் ப.நோ.கூ. சங்கம்

02.01.2014

### சடலங்களைப் பெற்றுக் கொள்க

யாழ்ப்பாணம், ஜன.2

அடையாளம் காணப்படாத நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள இரண்டு ஆண்களின் சடலங்களையும் உறவினர்கள் அல்லது உரித்துடையவர்கள் வந்து பெற்றுக் கொள்ளுமாறு வைத்திய சாலைப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்துள்ளார்.

40 வயது மதிக்கத்தக்க மாதவன் என்ற பெயர் குறிப்பிடப்பட்டு முகவரி தெரியாத ஒருவர் கடந்த 28 ஆம் திகதி விடுதியில் சேர்க்கப்பட்டு மறுநாள் உயிரிழந்துள்ளார். இதேபோன்று 30-40 இற்கும் இடைப்பட்ட வயதுடைய பெயர் முகவரி தெரியாதவரின் சடலமொன்று கடந்த நவம்பர் 6 ஆம் திகதி பருத்தித்துறைப் பொலிஸாரால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

விற்பனைக்கு
DC 68 G Kubota
நெல் அறுவடை செய்யும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு.
தொ.பே. 077 918 4840/ 077 600 3577

கலைப்பிரிவு
தமிழ் - யசிதன்
அரசியல் - சுகாஷ்
வரலாறு - பிரதீபன்
அளவையியல் - E.S.பவன்
நாடகம் - கணேஷ்
புவியியல் - ஐங்கரன்
இந்துநாகரிகம் - சிவாஷ்கரன்
மனைப்பொருளியல் - மகிபன்
கிறிஸ்தவ நாகரிகம் - அன்ரனி
இலகு கணிதம் - தவசேகர்
ஊடக கல்வி - நவநீதன்

வர்த்தகப் பிரிவு
வர்த்தகம் - நந்தீஸ்வரன்
பொருளியல் - ஜெயக்குமார்
கணக்கீடு - 1. சுபேசன்
- 2. விசுவராஜ்

Subra கல்வி நிறுவனம்

கணித விஞ்ஞானப்பிரிவு
இணைந்த கணிதம் - விஜேந்திரன்
இரசாயனவியல் - கண்ணதாசன்
பௌதிகவியல் - ரவிந்திரன்
உயிரியல் - கெங்காதரன்

தொழில்நுட்பப் பிரிவு
பொறியியல் தொழில்நுட்பம்
தொழில்நுட்பவியல் விஞ்ஞானம்
பொருளியல், புவியியல், மனைப்பொருளியல்
ஆங்கிலம், தொடர்புசாதனம் மற்றும்
ஊடகக்கற்கை, சித்திரம், தகவல் மற்றும்
தொடர்புசாதன தொழில்நுட்பம், விவசாயம்,
வணிகக்கல்வி, கணக்கியல்.
(சி/10889) (7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுலை முன்னிறுத்தினால் காங்கிரஸ் தோல்வியுறும்

## நாடாளுமன்றத் தேர்தல் குறித்து யஷ்வந்த் சின்ஹா ஆரூடம்

புதுடில்லி, ஜன.2
காங்கிரஸ் கட்சியின் பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தி முன்னிறுத்தப்பட்டால் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வியுறும் என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.கவின் மூத்த தலைவர் யஷ்வந்த் சின்ஹா.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

அண்மையில் ராகுல் காந்தி தலைமையில் நடைபெற்ற தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியின் கதி என்னவானது என்பது அனைவருக்கும் தெரியும். பா.ஜ.கவைப் போன்று பிரதமர் பதவி வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவது காங்கிரஸ் கட்சிக்கு அவ்வளவு எளிதான காரியமல்ல.

ராகுலைப் பிரதமர் பதவி வேட்பாளராக அறிவித்தால் பா.ஜ.கவுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. ஏனென்றால் அவரது தலைமையில் காங்கிரஸ் படுதோல்வியடையும்" என்று தெரிவித்துள்ளார்.



இந்த விடயம் குறித்துக் கருத்துத் தெரிவித்த பா.ஜ.க. துணைத் தலைவர் முக்தார் அப்பாஸ் நக்வி,

"புதிய பிரதமர் வேட்பாளரை காங்கிரஸ் அறிவிக்கலாம் அல்லது பழைய பிரதமரையே முன்னிறுத்தலாம். எப்படி முயன்றாலும் காங்கிரஸின் ஊழல் கறையை அழிக்க முடியாது" என்று தெரிவித்துள்ளார். (ற)

# தேச விரோத சக்திகளின் கூட்டணியே ஆம் ஆத்மி

## இல.கணேசன் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜன.2
தேச விரோத சக்திகளுக்கும் பயங்கரவாத சக்திகளுக்கும் ஆதரவாக ஆம் ஆத்மி கட்சி செயற்படுகிறது என்று குற்றஞ் சாட்டியுள்ளார் பா.ஜ.கவின் தேசிய செயற்குழு உறுப்பினர் இல.கணேசன்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புதுடில்லியில் தேர்தலுக்கு முன்பு எந்தக் காங்கிரஸ் ஆட்சியின் ஊழல்களை அம்பலப்படுத்தி தேர்தலில் வெற்றி பெற்றார்களோ, இப்போது அதே காங்கிரஸ் கட்சியின் தயவால் ஆம்ஆத்மிகட்சி ஆட்சிஅமைத்திருப்பது தார்மீக நெறிகளுக்கு எதிரானது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு, புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் ஆம் ஆத்மி கட்சி போட்டியிடும் என்று கூறுகிறார்கள். வெடிகுண்டு கலாச்சாரத்துடன் தொடர்புடையவர்கள், தேச விரோத, பயங்கரவாதிகளுக்கு ஆதரவானவர்கள் நிறைந்த கட்சியாக ஆம் ஆத்மி உள்ளது.

காஷ்மீர் தனி நாடு கோரிக்கை சரிதான் என்றும், அதற்காக காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும் கூறுபவர்கள் அந்தக் கட்சியில் பொறுப்புகளில் உள்ளனர். மாவோயிஸ்டுகளுக்கும், நக்சலைட்டுகளுக்கும் ஆதரவானவர்கள் அந்தக் கட்சியின் தலைவர்களாக உள்ளனர்.

இந்திய ராணுவத்துக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கூறியவர் கேஜ்ரிவால். தமிழ்நாட்டில் இடிந்தகரை உதயகுமாருக்கு ஆதரவாக கேஜ்ரிவால் செயற்படுகிறார். இப்படிப்பட்டவர்கள் தான் நாடாளுமன்றத் தேர்தலில் தாம் வெற்றிபெறுவோம்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# வாசன் - 'கப்டன்' இரகசியப் பேச்சு; கூட்டணிக்கான முன்னேற்பாடு?

சென்னை, ஜன.2
இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன், தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தை அவரது வீட்டுக்குச் சென்று சந்தித்துப் பேசியுள்ளார். இருவரும் 45 நிமிடங்கள் வரை ஆலோசனை நடத்தியுள்ளனர். அதையடுத்து காங்கிரஸ் தே.மு.தி.க. கூட்டணி ஏற்படுமா என்ற பரபரப்பு அரசியல் வட்டாரத்தில் ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் தே.மு.தி.க. யாருடன் கூட்டணி சேரும் என்ற எதிர்பார்ப்பு தமிழக மக்களிடையே ஏற்பட்டுள்ளது. அந்தக் கட்சியை கூட்டணியில் சேர்க்க தி.மு.க., பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் மாலை சென்னை சாலிகிராமத்தில் உள்ள விஜயகாந்த் வீட்டுக்குத் திடீரெனச் சென்றார் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன்.



இருவரும் சுமார் 45 நிமிடங்கள் தனியாக ஆலோசனை நடத்தினர். தமிழக அரசியல் நிலவரம், நாடாளுமன்றத் தேர்தலுக்கான கூட்டணி குறித்து அவர்கள் பேசினர் என்று கூறப்படுகிறது. (ற)

## கழுத்துப்பட்டி கட்டுவதில் சாதித்த இந்தியர்

சென்னை, ஜன.2
இந்தியாவைச் சேர்ந்த தீபக் சர்மா என்பவர் குறுகிய நேரத்தில் கழுத்துப்பட்டியைக் கட்டி உலக சாதனை படைத்துள்ளார்.
மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த தீபக் சர்மா இந்தப் போட்டியில் கலந்து கொண்டு 17.91 நொடிகளில் இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார். 2008ஆம் ஆண்டில் 20.27 நொடிகளில் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டது, அதனை முறியடிக்கும் விதமாக இந்த சாதனையை இவர் நிகழ்த்தியுள்ளார். (ற)

# இனி என்றும் நான் பிரியேன் சோனியாவுக்கு லாலு உறுதி

புதுடில்லி, ஜன.2
ராஷ்ட்ரீய ஜனதா தளக் கட்சியின் தலைவர் லாலு பிரசாத், காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், கூட்டணியில் இருந்து விலகியமைக்காக சோனியா காந்தியிடம் வருத்தம் தெரிவித்துள்ளார் லாலு.

குறித்த சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த லாலு,

" 2009ஆம் ஆண்டு காங்கிரஸுடனான கூட்டணியை முறித்துக் கொண்டமைக்காக சோனியா காந்தியிடம் வருத்தம் தெரிவித்தேன். மீண்டும் அந்த தவறைச் செய்யப் போவதில்லை என்றும் அவரிடம் உறுதியளித்துள்ளேன். கூட்டணி தொடர்பாகத் தாம் என்னை விரைவில் சந்தித்துப் பேசுவார் என்று சோனியா காந்தி கூறியுள்ளார்." என்று தெரிவித்துள்ளார். (ற)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## புஸ்பராஜா பிரவீன்

(மயிலங்கூடல், இளவாலை - முன்னாள் உயர்தர வகுப்பு மாணவன் யா/மத்திய கல்லூரி)



தோற்றம்
10 - 05 - 1994

மறைவு
02 - 01 - 2012

எம் அன்புத் தம்பி சிந்துவே
இரு ஆண்டுகள் கடந்து சென்றாலும்
நீ என்னுடன் வாழ்ந்த காலங்களை
மீட்டுத் தந்து கொண்டிருக்கின்றன.
உன் அன்பான பேச்சும்
உன் குறும்புத் தனமான செயலும்
என்றும் உன் நினைவுகளைத்
தந்துகொண்டிருக்கின்றன.
காலத்தின் செயல்களாய்
கண் சிமிட்டும் நொடிக்குள்
நீ என்னை விட்டு சென்று விட்டாய்
காலங்கள் கடந்து சென்றாலும்
கடைசிவரை உன் நினைவுகள்
என்றும் எம் மனதில் தொடரும்
எத்தனை காலங்கள் கடந்து சென்றாலும்
எம் மனதை விட்டு நீங்காத எம் உயிர் தம்பி நீயே



உன் நினைவுடன்: அப்பா, அம்மா, அக்கா.
அமெரிக்கா.

(A/10900) (5,6,3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோகத்தில் முடிந்த பிலிப்பைன்ஸ் கொண்டாட்டங்கள்

### *வெடி விபத்துகளில் 261 பேர் காயம்*

லண்டன், ஜன.2

பிலிப்பைன்ஸில் நேற்றுமுன் தினம் புத்தாண்டை வரவேற்கும் வகையில் நடைபெற்ற கொண்டாட்டங்களின்போது சக்தி வாய்ந்த வெடிகள் வெடித்ததில் 261 பேர் காயமடைந்தனர்.

அதிக சத்தம் வாய்ந்த வெடி பொருள்களை வெடிக்க வைப்பதன் மூலம் தம்மைச் சுற்றியுள்ள தீய சக்திகள் விலகி, அதிர்ஷ்டம் கிடைக்கும் என்று பிலிப்பைன்ஸ் மக்கள் நம்புகின்றனர்.

அதன்காரணமாக கொண்டாட்டங்களின் போது அதிக சத்தம் வாய்ந்த வெடிபொருள்களைஉபயோகிப்பது, வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுடுவது ஆகியவற்றிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதையும் மீறி கள்ளச் சந்தைகளில் துப்பாக்கியை வாங்கும் மக்கள், கொண்டாட்டங்களின்போது அவற்றை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் நேற்றுமுன் தினம் செபு மாகாணத்தில் நடத்தப்பட்ட புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது, இது வரையிலும் 253 பேர் வெடிவிபத்துகளாலும், 8 பேர் துப்பாக்கி தோட்டாக்கள் பாய்ந்து காயமடைந்தும் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. (ற)



நெதர்லாந்து கலைஞரான ஃபிலாரென்டிஜின் ஹாப்மென் 2007 ஆம் ஆண்டில் 16.5 மீற்றர் உயரமுடைய பிரமாண்டமான மஞ்சள் வாத்து ஒன்றை இறப்பரில் உருவாக்கி மக்களிடையே நட்புறவை வளர்க்கும்வண்ணம் ஒவ்வொரு நாட்டின் கடற்பகுதியிலும் மிதக்கவிட்டார். பிரேஸில், ஆஸ்திரேலியா, ஹொங்காங் உட்பட ஒன்பது நாடுகளில் உள்ள 13 நகரங்களில் இந்த வாத்து மிதக்கவிடப்பட்டு பெரும்பான்மையான மக்களின் வரவேற்பையும் பெற்றது. தற்போது மீண்டும் 2013 ஆம் ஆண்டில் தைவானைச் சேர்ந்த மூன்று நகரங்களின் கடற்பரப்புகளில் 18 மீற்றர் உயரத்தில் செய்யப்பட்ட புதிய வாத்து மிதக்க விடப்பட்டது. ஆனால் ஒவ்வொரு முறையும் மோசமான வானிலை காரணமாக இந்தக் கண்காட்சி நிறுத்தப்பட்டது. கடந்த செப்ரெம்பர் மாதம் கவோசியுங் நகரத்தில் ஒரு மாதம் இந்த வாத்து மிதக்கவிடப்பட்டபோது நான்கு மில்லியன் மக்கள் அதனைக் கண்டு களித்தார்கள். தற்போது கீலங் துறைமுகத்தில் இந்த பிரமாண்டமான வாத்து புது வருட இரவன்று அதிகமானோரை ஈர்க்கும் என்று எதிர்பார்த்த நிகழ்ச்சியாளர்கள், நள்ளிரவு வரை இதனை மிதக்க விட திட்டமிட்டிருந்தனர். ஆனால் நண்பகலில் எதிர்பாராதவிதமாக இந்த இறப்பர் வாத்து வெடித்தது. அதையடுத்து அந்த நிகழ்ச்சி நிறுத்தப்பட்டது. (ற)

## உலகெங்கும் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்

லண்டன், ஜன.2

2014ஆம் ஆண்டை வரவேற்கும் பொருட்டு உலகெங்கும் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் நேற்று முதல் நடைபெற்று வருகின்றன. ஆஸ்திரேலியாவின் சிட்னி, மெல்பர்ன் போன்ற முக்கிய நகரங்களில் வண்ணமயமான வாண வேடிக்கைகளுடன் புத்தாண்டு கொண்டாட்டங்கள் நடந்து வருகின்றன.

ஆக்லாந்தின் ஸ்கை டவரில் நிகழ்த்தப்பட்ட வண்ண மயமான நிகழ்வை நகரின் பல பகுதிகளில் இருந்தும் கண்டு களித்த மக்கள் உற்சாகக் குரலெழுப்பி புத்தாண்டை வரவேற்றனர். (ற)

## நாஜிக்களின் ஓவியங்கள் ஜேர்மனியில் திருட்டு

பெர்லின், ஜன.2

ஜேர்மனியின் நாடாளுமன்றத்தில் இருந்த நாஜிக்கள் காலத்து வரலாற்றுச் சிறப்பு மிக்க இரண்டு ஓவியங்கள் காணாமற் போயுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மனியின் தலைநகர் பெர்லினில் உள்ள நாடாளுமன்றத்தில் நாஜிக்கள் காலத்து வரலாற்றுச் சிறப்பு மிக்க எண்ணெய் ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு ஓவியங்களே காணாமற் போயுள்ளன என்று கூறப்படுகின்றது. ஜோர்ஜ் வொல்டன் பெர்கர் வரைந்த ஓவியம்ஒன்றும், லோவிஸ்கோரினித் வரைந்த ஓவியம் ஒன்றுமே காணாமற் போயுள்ளன. அவை 1905ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த பியூலோ, ரெய்ச்டேக் நகரில் உரையாற்றிய காட்சிகளைச் சித்தரிப்பவையாகும். அந்த ஓவி யங்கள் காணாமற் போயுள்ளமை குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

யாழ் நகரில்..!

கட்டிட நிர்மாணத் துறையில் மாத வருமானம் ரூபா 150,000/= இனை உறுதி செய்யும் 18 மாத பாட நெறி



BTEC HND in
- Quantity Surveying
- Civil Engineering

Leading to **BSc (Hons)** From **UK**

வார இறுதி வகுப்புகளும் ஆரம்பம்.

**Why** Choose
BCAS for **QS & Civil Engineering** ?

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக QS, Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS, Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
- RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
- £4500 வரை பிரித்தானிய Top-Up கற்கைநெறிகளிற்கான புலமைப்பரிசில்
- தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை (Top-Up) பூர்த்தி செய்யும் அரிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது
- கட்டாரில் தொழில் புரிந்துகொண்டே BCAS Qatar Centre இல் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு
- 15 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131


Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

## அதிகாரங்களைப் பகிர ஒருபோதும் தயாரில்லை

### *பேச்சு நடத்துவதற்குத் தயார்: தென்சூடான் ஜனாதிபதி திட்டவட்டம்*

ஜூமா, ஜன.2

தென் சூடானில் பெரும் பதற்றம் நிலவி வரும் நிலையில் கிளர்ச்சியாளர்களுடன் ஒருபோதும் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளத் தாம் தயாரில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் தென்சூடான் ஜனாதிபதி சல்வா கிர்.





வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர தாம் விரும்புகின்ற போதும் அதிகாரங்களை எவருக்கும் கையளிக்கும் எண்ணம் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"பதவி விலக்கப்பட்ட உபஜனாதிபதி றீக் மாச்சரிடம் அதிகாரங்களை கையளித்து கிளர்ச்சியாளர்களின் செயற்பாடுகளுக்கு துணைபோக அனுமதிக்கப்படமாட்டாது. ஒருபோதும் அதிகாரங்களைக் பகிர்ந்து கொடுப்பதற்கு நான் தயாராக இல்லை" என்று தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் பதவி கவிழ்க்கப்பட்ட துணை ஜனாதிபதிக்கும் இடையிலான அதிகாரப் போட்டியால் தென் சூடானின் பல்வேறு பகுதிகளிலும் வன்முறைகள் நீடிக்கின்றன.

தென்சூடானில் கடந்த இரண்டு வாரங்களாக தொடரும் வன்முறைகளால் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

நீண்ட காலப் போராட்டங்களுக்குப் பின்னர் 2011 ஆம் ஆண்டு சூடானிலிருந்து சுதந்திரம் பெற்ற தென் சூடானில், மீண்டும் உள்நாட்டுப் போர் ஒன்று ஏற்படுவதற்கான வாய்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளது என்று சர்வதேச சமூகம் கவலை வெளியிட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு.வாவியில் அசுத்தம்; மீன் இனங்கள் அருகல்

மட்டக்களப்பு, ஜன.2

மட்டக்களப்பு வாவி அசுத்தமடைந்துள்ளதால் 28 வகையான மீன் இனங்கள் அருகிப்போயுள்ளதாக மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டொமிங்கோ ஜோர்ஜ் தெரிவித்தார்.

வாவியில் காணப்பட்ட 112 மீன் இனங்களில் கிளாத்தி, செத்தல், கிளாக்கன், சிலுந்தல் போன்ற மீன் இனங்களே இவ்வாறு அருகிப்போயுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வாவி அசுத்தமடைவதால் அதில் தற்போதுள்ள ஏனைய மீன் இனங்களும் அழியும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக மட்டக் களப்பு மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரி எஸ்.கோகுலன் தெரிவித்தார்.

மழை காலங்களில் அதிக கழிவுப் பொருள்கள் கால்வாய்கள் வழியாக வாவியை வந்து சேர்வதாலும் மண்ணரிப்பாலும் இந்தநிலை ஏற்பட்டுள்ளதாக கோகுலன் மேலும் தெரிவித்தார்.

இந்தநிலையில், மழைகாலங்களில் ஆற்றின் கரையோரங்களில் ஏற்படும் மண்ணரிப்பைத் தடை செய்வதற்கான வேலைகளில் மட்டக்களப்பைச் சேர்ந்த கட்டமைப்புத் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கமைவாக கால்வாய்கள், ஆற்றின் படுகைகள் மற்றும் ஆற்றின் ஓரங்கள் என்பவற்றில் இக்கட்டுமானப் பணிகள் முழு வீச்சில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (வ)




## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

சிரார்த்த தினம் 02.01.2014

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கு, நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் **இராசையா ஆறுமுகம்**

(ஓய்வுபெற்ற மருந்தாளர் - வல்வெட்டித்துறை, பிரதேச வைத்தியசாலை)



திதி:வளர்பிறை துதியை

உதயம் 04.07.1946 — அஸ்தமனம் 13.01.2014

அதிசயமாக எம்மை விட்டுப்<br>
பிரிந்த அப்பாவே!<br>
ஊரே உங்களைப் பார்த்து மெய்சிலிர்த்த<br>
வாழ்வு ஏனோ முடிந்துபோனது<br>
உதவியென்றால் உங்கள் கரம்<br>
அரவணைக்கும் என்ற உண்மை<br>
உறங்கிப் போனதோ<br>
மற்றவுன் எப்படியும் வாழட்டும் என்று<br>
எப்போதும் இருந்ததில்லை<br>
இப்படி வாழுங்கள் என்று<br>
இதமாய் ஆறுதல் தரும்<br>
ஓர் ஆண்டு உங்களைப்<br>
பிரிந்து வாழும் எமக்கு<br>
எங்கேயப்பா - ஆறுதல்.<br>
ஆண்டவன் பொன்னடியில்<br>
ஆராத இன்பமுடன் நீங்கள்<br>
இருக்க என்றும் வேண்டுகின்றோம்.<br>
ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் முதலாம் ஆண்டு திவசக்கிரியைகள் இன்று (02.01.2014) வியாழக் கிழமை நீர்வேலி வடக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நிகழவுள்ளதால் உற்றார், உறவினர், அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி - குணமணிதேவி ஆறுமுகம்<br>
(இளைப்பாறிய சாவகச்சேரி, நகரசபை செயலாளர்)<br>
பிள்ளைகள் - சஞ்ஜீவன், மஞ்ஜீவன்.

4ஆம் கட்டை, இராசவீதி,<br>
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(41762)(12.6.3)


# ஸ்ரீலங்கா மு.காங்கிரஸ் உறுப்பினர் கட்சியிலிருந்து இடை நிறுத்தம்

நாவிதன்வெளி, ஜன.2

நாவிதன்வெளி பிரதேச சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.ஐ. தகாப்தீன் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம், மத்தியமுகாமில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நாவிதன்வெளி பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு கட்சியின் தலைவர் உட்பட உயர்பீட உறுப்பினர்கள் வேண்டிக்கொண்டதையும் பொருட்படுத்தாது வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் பெயரிலேயே இவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

> "–"
>
> வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் பெயரிலேயே இவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இதுவிடயமாக சம்பந்தப்பட்ட பிரதேச சபை உறுப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப் படவுள்ளதாகவும், அடுத்து வரும் வரவு-செலவுத்திட்டத்துக்கு ஆதரவு வழங்காவிட்டால் கட்சியிலிருந்து முற்றாக விலக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (வ)


# மரண அறிவித்தல்

## திருமதி இராசலட்சுமி சுந்தரலிங்கம்

### (ஈஞ்சடி, சுதுமலை)



சுதுமலை கிழக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி சுந்தரலிங்கம் 30.12.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - அழகம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் மருமகளும் சுந்தரலிங்கம் (முன்னாள் கிளை முகாமையாளர், சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவு சங்கம்) அவர்களின் அன்புமனைவியும், யதீஸ்குமார் (லண்டன்), யாழினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், பார்த்தீபன் (லண்டன்), தாட்சாயினி (லண்டன்) ஆகியோரின் அன்புமாமியும், துவாரகேஷ், அபிநயஸ்ரீ, பிரவீன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், காலஞ்சென்ற Dr.அருமைத்துரை மற்றும் சின்னத்தம்பி, சிவபாலன், சந்திரபாலன் காலஞ்சென்ற அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மநாதன், கமலாதேவி, விமலாதேவி, பத்மாவதி, நீலாம்பிகை, சிவகாமி, பத்மநாதன், மங்களேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2014) வியாழக் கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை கிழக்கு,<br>
மானிப்பாய்.

தகவல்:<br>
குடும்பத்தினர்.

(41915)(3.6.4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆழிப்பேரலை நினைவாக வழங்கப்பட்டன மரக்கன்றுகள்


வவுனியா, ஜன.2
ஆழிப்பேரலை அனர்த்தத்தால் உயிர் துறந்தவர்களின் நினைவாக வவுனியாவில் 100 குடும்பங்களுக்கு . மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

ஆழிப்பேரலையின் போது இறந்தவர்களின் நினைவு தின நிகழ்வுகள் வவுனியாவின் பல இடங்களிலும் அண்மையில் இடம்பெற்றன.

இந்த வகையில் இதன் 9 ஆம் ஆண்டு நிறைவு தின நிகழ்வுகள் வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா வெளிக்குளம் ராணி மில் வீதியில் அமைந்துள்ள காளி கோயிலில் இடம்பெற்றது.

இங்கு, இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்கான பூசை இடம்பெற்றதைத் தொடர்ந்து வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.குமாரசாமி தலைமையில் இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தின் முடிவில் இறந்தவர்களின் நினைவாக 100 குடும்பங்களுக்கு பயன் தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வர்த்தகரும் மேற்படி ஒன்றியத்தின் செயலாளருமான கு.சஜிஸ்குமார், ஓய்வுபெற்ற உப அதிபர் சு.சிவஞானம், மக்கள் ஒன்றியத்தின் உறுப்பினர் டி.அமரசிங்க ஆகியோர் கலந்து கொண்டு மரக்கன்றுகளை வழங்கினர். (க-421)




## கற்சிலைமடு கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு புதிய கட்டடம்

முல்லைத்தீவு,ஜன.2
யு.என்.கபிற்றாற் நிறுவனம் கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய கட்டடத்தை அமைப்பதற்கென 16 லட்சம் ரூபா வழங்கியுள்ளதாக சங்கத் தலைவர் எஸ்.நவரத்தினம் தெரிவித்தார்.

கற் சிலைமடுவில் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் புதிய கட்டடம் ஒன்றைப் புதிதாக அமைப்பதற்கு யு.என். கபிற்றாற் நிறுவனம் 16 லட்சம் ரூபா நிதியை வழங்க முன் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது பழைய கட்டடத்தை அகற்றிவிட்டுப் புதிய கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்கான முன்ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன: (க-500)

# வவுனியாவில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு

## கடும் விசனம் தெரிவிக்கின்றனர் மக்கள்

வவுனியா, ஜன.2
வவுனியாவில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு சட்ட விரோதமான வகையில் மண் அகழ்ந்தெடுக்கப்பட்டுக் கடத்தப்படுவதாக இங்குள்ள மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

எந்தவித அனுமதியுமின்றிக் காடுகளை அண்மித்த பிரதேசங்களில் இருந்து நூற்றுக் கணக்கான டிப்பர் வாகனங்களில் கிரவல்மண் ஏற்றப்பட்டு வெளி மாவட்டங்களுக்கு அதிகாலை வேளையில் கடத்தப்பட்டு வருகின்றது. ஏ-9 வீதி, மன்னார் வீதி ஆகியவற்றில் 24 மணிநேரமும் வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த மண்ணைக் கடத்தும் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். கிரவல்மண் அகழப்படுவதால் சூழலுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மண் அகழ்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் பெரிய குழிகள் தோன்றியுள்ளதுடன், மழை காலத்தில் அவற்றில் நீர் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்புகள் பெருமளவில் உற்பத்தியாகின்றன.

> "-"
> மண் அகழ்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் பெரிய குழிகள் தோன்றியுள்ள துடன், மழை காலத்தில் அவற்றில் நீர் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம் புகள் பெருமளவில் உற்பத்தியாகின்றன.

இதனால் நோய்த் தாக்கங்களும் ஏற்பட்டுள்ளன. மேலும் மண்ணரிப்பு ஏற்படுவதையும், மழை காலங் களில் நீர் வழிந்தோடக்கூடிய வசதியில்லாததால் குளங்களுக்கு நீர் செல்லாது வீணாவதையும் அவதானிக்க முடிகின்றது. இதனால் குளத்து நீரை நம்பி சிறுபோகப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் பெரும் சிக்கலை எதிர்கொள்கின்றனர். இதேவேளை மண் வெளி மாவட்டங்களுக்குக் கடத்தப்படுவதால் உள்ளூர்ப் பகுதிகளில் வீதி அபிவிருத்திக்கும், கட்டட வேலைகளுக்கும் வேறு மாவட்டங்களில் இருந்து அதிக விலை கொடுத்து மண்ணை வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுவது தொடர்பாக சில அதிகாரிகள் கண்டும் காணாமல் இருப்பதால் எதிர்காலத்தில் வவுனியாப் பிரதேசம் பல்வேறு சூழலியல் ஆபத்தை எதிர்கொள்ள நேரிடும் எனவும் மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (க-402)

## வாழ்வு எழுச்சித் திணைக்களம் தொடர்பான கலந்துரையாடல்கள்

அக்கராயன், ஜன.2
ஜனவரி 3 ஆம் திகதியிலிருந்து புதிதாக இயங்கவுள்ள வாழ்வு எழுச்சித் திணைக்களத்தினுள் (திவிநெகும) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்வாங்கப்படவுள்ளதால் இது தொடர்பான கலந்துரையாடல்கள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 4 பிரதேச செயலகங்களிலும் நடைபெற்று வருகின்றன.

பளை, கரைச்சிப் பிரதேச செயலகங்களில் இந்தக் கலந்துரையாடல்கள் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றுள்ளன.

கரைச்சிப் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இணைப்பாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடமாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கரைச்சிப் பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், பளைப் பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-18)

## யாழ்ப்பாணம் மாநகரசபை ஆதனவரி அறிவித்தல்-2014

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அத்தியாயத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் படி யாழ்ப்பாணம் மாநகர சபை பின் வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளமை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

01. மாநகரசபையின் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம், 247 ஆம், பிரிவுகளின் பிரகாரம், நேர் முன் ஆண்டான 2013 ஆம் ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டை குறிப்பிடப்பட்ட விடயங்களில் அவசியமெனக் கருதப்படக்கூடியதாக அத்தகைய திருத்தங்களுடன் 2014 ஆம் ஆண் டிற்கான மதிப்பீடாக அல்லது ஆதனவரி மதிப்பீடாககைக் கொள்ளுதல்.

02. அடுத்துத் திருத்தியபடியான முற் கூறிய கட்டளைச்சட்டத்தின் 238 ஆம் பிரிவின் நியதிப்படி யாழ்ப்பாணம் மாநகரசபைப் பரிபாலன எல்லைக் குட்படும் சகல வீடுகள் ஒவ்வொரு விவரணத்தையும் கொண்ட கட்டடங்கள், சகல காணிகள், குடிமனைகள் எதனதும் வருடாந்தப் பெறுமதியின் மீது 2014 ஆண்டிற்குப் பின்வரும் வீதங்களை உண்டு பண்ணவும் விதிக்கவும்.
   (அ) மாநகர சபைப் பரிபாலன எல்லைக்குட்படும் வட்டாரம் 01 முதல் 23 வரைக்கும் உள்ள சகல வட்டாரங்களிலும் ஆறு சத வீதத்திலான(06%) ஒரு விகிதம்

03. (அ)மேற்கூறப்பட்ட வீத வரிப்பணங்கள் யாவையும் நான்குசமகந்தாய தவணைகளில் ஆண்டு முறையே மார்ச் 31, ஜூன் 30,செப்ரெம்பர்30, டிசெம்பர் 31 ஆம் திகதிகளன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்பட வேண்டும்.
   (ஆ) 2014 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த வீத வரி முழுமையாகச் செலுத்தப்பட்டால் ஒரு 10% (பத்து சத வீதம்) கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் வீதவரி வருமதியாக உள்ள அந்தக் கந்தாயத்திற்குரிய முதல் மாதத்துக்குள்ளாக கந்தாயவரி செலுத்தப்பட்டால் ஒரு 5% (ஐந்து சத வீதம்) கழிவு அனுமதிக்கப்படும்.

04. மேற்கூறப்பட்ட பந்தி 3 (அ) இல் குறிப்பிடப்பட்ட உரிய திகதிகளிற்கு முன்பு குறித்த வீத வரிகளைச் செலுத்தாத விடத்து வெறும் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15%(பதினைந்த சத வீதம்) இலும், மற்றும் ஏனைய இடங்கள் மீது 20% (இருபது சத வீதம்) இலுமான விறாந்துச் செலவு அறவிடப்படும்.

05. 2014 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. கிடைக்காதவர்கள் மாநகர ஆதன வரிப் பகுதியில் நேரடியாக சமுகமளித்து ஆதனவரி அறிவித்தலைப் பெற்றுக் கொள்வதுடன் 2014 ஆம் ஆண்டு ஆதனவரியினைத் தாமதமின்றிச் செலுத்தமுடியும்.

திருமதி யோகேஸ்வரி பற்குணராசா
முதல்வர்
மாநகரசபை,யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/10890)(4.6.3)

## வறிய மாணவர்களுக்கு உபகரணங்கள்



மன்னார், ஜன.2
போரினால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் வறிய மாணவர்களுக்கு மன்னார் மாவட்டத்தின் பிரபல வர்த்தகர் இருதயநாதன் சாள்ஸ் பாடசாலை உபகரணங்களை கடந்த திங்கட்கிழமை மாலை வழங் கினார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மீள் குடியமர்வுக் கிராமங்களான சன்னார்,ஈச்சலவக்கை, பெரியமடு ஆகிய மூன்று கிராமங்களுக்கும் சென்ற அவர் கற்றல் உபகரணங்களைவழங்கினார்.

நீண்ட நாள்களாக இங்குள்ள மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளுக்குத் தேவையான உபகரணங்களின்றி அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

இதன் அடிப்படையில் நேற்று முன்தினம் குறித்த பகுதிக்குச் சென்றிருந்த இருதயநாதன் சாள்ஸ் இந்த உதவிகளை வழங்கினார்.

இதன் போது சன்னார் கிராமத்தைச் சேர்ந்த 350 மாணவர்களும், ஈச்சலவக்கை கிராமத்தைச் சேர்ந்த 120 மாணவர்களும், பெரியமடு கிராமத்தைச் சேர்ந்த 30 மாணவர்களும் பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கொழும்பின் கொடுக்குப் பிடி வடக்கின் மீது இறுகுமா.....?

வடக்கில்–யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும்–அரிசியின் விலை திடீர் திடீர் என அதிகரித்து வருகிறது. நாளாந்தம் என்ன விகிதாசாரத்தில் உயரும் என்று ஊகிக்கவும் இயலாத அளவுக்கு, அரிசி வியாபாரம், நாளொரு விலையும் பொழுது ஒரு 'சல்லி'யாகவும் எகிறிச் செல்கிறது. தரமான அரிசி வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

நியாய விலையில் அரிசி வாங்கலாம் என்பது பொய்யாய்ப் பழங்கதையாக மாறி வருகிறது. காலாவதியான, கையிருப்பில் நீண்ட காலம் தேங்கிக் கிடந்த அரிசி வகைகளுக்கு மவுசோ, மவுசு!

உள்ளூரில் அறுவடை செய்யப்பட்டு இருப்பில் இருந்த, மனித உணவுக்கு ஒவ்வாத அரிசி வகைகள், குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும் மக்கள்–பாவனையாளர்கள் கவலைப்படுகின்றனர். ஆனால் தட்டுப்பாடு காரணமாக, குறை கூறிக் கூறி அவ்வகை அரிசியையே வாங்க வேண்டி உள்ளதாகவும் கவலை தெரிவிக்கிறார்கள்.

மொத்தத்தில், வடக்கு மக்கள், பிரதான உணவுப் பொருளான அரிசியை தமது விருப்பத்துக்கு மாறாக கொள்வனவு செய்து சாப்பாடு ஆக்க வேண்டிய மிகவும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வடக்கில் அதன் சகல பிராந்தியங்களிலும், பிரதேசங்களிலும் நெல் விற்பனை முடிவடைந்து விட்டது. இனிமேல் வெளிமாவட்டங்களில் இருந்தே அரிசியை அல்லது நெல்லைக் கொள்வனவு செய்ய வேண்டிய தவிர்க்க இயலாத நிலைமை தோன்றி உள்ளது. அதன் விளைவு வடக்கில் அரிசி விலை, அண்மைக் காலத்தில் என்றும் இல்லாத அளவுக்கு, உயர்ந்து செல்லக்கூடிய சாத்தியமே அதிகம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் காலபோக நெற் செய்கை மிகப் பெரிய அளவில் பாதிப்புற்றுள்ளது. அதனால் இம்முறை உள்ளூர் நெல், சந்தைக்கு வருவதற்கு வாய்ப்பே இல்லை. ஏன், விவசாயிகளின் சொந்தத் தேவைக்கேனும் விளைந்த நெல் போதுமா என்பது ஐயமே.

இன்னும் ஒரு வாரத்துக்குள் மழை பெய்யாவிடில், வயல்களில் மேலோங்கி உயர்ந்து நிற்கும் கோழிச் சூடனையும் கோரையையும் வெட்டித் தள்ள நேரிடும். குளத்திலிருந்து பம்பி மூலம் தமது பயிர்களைக் காப்பாற்ற சில விவசாயிகள் முயற்சி செய்கின்றனர். ஏனைய சில விவசாயிகள் மழை வேண்டிக் கொடும்பாவி எரிப்பதிலும் ஈடுபடுகின்றனர். செம்மணி வயல் வெளிகளில் நெற் பயிர்கள் மாட்டுத் தீவனமாகப் பயன்படுத்தப் படுகின்றன.

இவற்றின் மத்தியில், மழை பொய்த்ததால், தென் பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்படுவது போன்று தங்களுக்கும் நட்ட ஈடு கொடுக்கப்படுமா என்ற பெரிய வினா வடக்கு விவசாயிகளைக் குடைந்து கொண்டிருக்கிறது.

மிகப் பல விடயங்களில், நிதி உதவி 'சார்ந்த' கருமங்களில் இன ரீதியான பாகுபாடுகள் ஆங் காங்கே தலையெடுத்து வருகின்றன என்பது மறைக்கப் பாலதன்று.

வடக்கில் மழை–இயற்கை–பொய்த்ததால்–விவசாயிகளும், பாவனையாளர்களான மக்களும் மிகப் பெரிய அளவில் பாதிப்புற்றுள்ளனர். இரண்டு சாராருக்கும் உதவ வேண்டிய பொறுப்பு அர சாங்கத்துக்கே உண்டு. வடக்கில் விவசாயம் பொய்த்ததால், உணவுக்கு–அரிசிக்கு–தட்டுப்பாடு ஏற்படாமலும், விலையேற்றம் உருவாக்கப்படாம லும் தடுக்கப்பட்டாக வேண்டும். தருணம் பார்த் திருக்கும் கள்ளச் சந்தைக்காரர்கள், அதீத இலாபத் துடன் விற்று மக்களைச் சுரண்டாமல் தடுப்பதும், ஊழலுக்கு இடம்தராத கொள்வனவு–விற்பனவுப் பொறிமுறையும் தாமதமின்றி வகுக்கப்பட வேண்டும்.

ஆனால் அதற்கான ஆளுமை மிகுந்த அதிகாரங்கள் (வடக்கு) மாகாண சபைக்கு வழங்கப்படவில்லை. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், விவசாயமும் விவசாய சேவையும் மற்றும் விவசாய விரிவாக்கமும் மேம்பாடும், மாகாண நோக்கங்களுக்கான விவசாயக் கல்வியும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் சார்ந்த பணிகளுமே–

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் மூலம் வகை செய்யப்பட்டுள்ளன.

விவசாயத்துக்கும் அது சார்ந்த ஏனைய பிரதான சேவைகளுக்கும் உரித்தான இயங்கு அதிகாரங்கள், மாகாண சபைகளுக்கு வழங்கப்படாமல் இருப் பது–விவசாயத்துறையில் வடக்கு மேலெழுவதைத் தடுப்பதற்கான பொறி முறைகள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. மொத்தத்தில் இது வடக்கின் மண் மற்றும் நீர் வளங்களை கொழும்பு அரசு தனது கொடுக்குப் பிடியில் வைத்திருக்கும் சூக்குமம் அன்றி வேறில்லை.

# இலங்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டு

தொல்காப்பியன்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும், வடக்கை அபிவிருத்தி செய்வதற்கும், தம்முடன் இணைந்து பணியாற்ற முன் வருமாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும், வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார். நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் நிறைவில் பதிலுரை ஆற்றியபோதே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார். கூடவே இன்னொரு விடயத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வெளிநாடுகளிடம் தீர்வைத் தேடித் திரிய வேண்டாம் என்றும், உள்நாட்டில் தீர்வைப் பெறுவதற்கு முன் வருமாறும் அவர் குறிப்பிட்டிருந்தார். இதுபோன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், அவரது அரசும் அழைப்பு விடுப்பது ஒன்றும் இது தான் முதன்முறையல்ல. ஆனால், இதற்கு முந்திய அழைப்புகள் விடுக்கப்பட்ட காலச் சூழலுக்கும் தற்போதைய சூழலுக்கும் இடையில் வேறுபாடுகள் நிறையவே உள்ளன.

### ஜெனிவாவில் தம்மைக் காப்பாற்ற தெரிவுக் குழுவுக்கு அழைக்கும் அரசு

2014ஆம் ஆண்டு இலங்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஓர் ஆண்டாக அமையும் என்று கருதப்படுகிறது. இந்த நிலையில் அரசிடம் இருந்து வந்துள்ள பேச்சுக்கான அழைப்புக் குறித்து, பல்வேறு சந்தேகங்களும், கேள்விகளும் எழுந்துள்ளன. ஏனென்றால், இதுவரை அரசும் தமிழர் பிரச்சினையை நியாயமாகத் தீர்க்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் செயற்படவோ, அல்லது அதற்கான முயற்சிகளில் ஈடுபடவோ இல்லை. விடுதலைப் புலிகளை அழிக்கும் வரை, இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைத் தருவதாகக் கூறி வந்த மஹிந்த ராஜபக்ஷ அரசு, விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது. 2011ஆம் ஆண்டு வரை இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு தம்மிடம் உள்ளதாகக் கூறிவந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பின்னர், தன்னிடம் தீர்வு ஏதுமில்லை என்று கையை விரித்தது மட்டுமன்றி, தெரிவுக் குழுவே தீர்வைத் தேட வேண்டும் என்றும் அறிவித்தார். நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணப் போவதாக அரசு அறிவித்த போதிலும், அது உள்நோக்கம் கொண்ட நடவடிக்கை என்பதைப் புரிந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் இணைந்துகொள்ளவில்லை. அதையே காரணமாக வைத்து ஐ.தே.கவும் ஜே.வி.பியும் தெரிவுக் குழுவைப் புறக்கணித்தன. இதனால், நாடாளுமன்றத் தெரிவுக்குழு பயனற்ற ஒன்றாக இன்றும் பெயரளவுக்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு கட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசு மிரட்டிக் கூடப் பார்த்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்கு வராமல் போனால், அரசதரப்புப் பிரதிநிதிகளே கூடி ஆராய்ந்து ஒரு முடிவை எடுப்பார்கள் என்று அரசு மிரட்டிய போதிலும் அதற்குக் கூட்டமைப்பு மசியவில்லை.

அதேவேளை, அரசும் தனியாக தெரிவுக்குழுவைக் கூட்டி ஒரு தீர்வை எட்டத் தயாராகவும் இருக்கவில்லை. ஏனென்றால், அவ்வாறு அரசு ஒரு தலைப்பட்சமான முடிவுகளை எடுத்தால், அதன் விளைவுகள் அரசையே பாதிக்கும். எனவேதான், தெரிவுக் குழுவைக் கைவிடவும் முடியாமல், அதனைச் செயற்படுத்தவும் முடியாமல் இக்கட்டில் சிக்கியிருக்கிறது. இந்த நிலையில், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும், அரசு அடுத்த ஆண்டில் பலத்த சவால்களை எதிர்கொள்வதற்கு வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசுக்கு எதிரான அடுத்த கட்ட நகர்வுகளில் மேற்குலக நாடுகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. வரும் மார்ச் மாத அமர்வில் இலங்கையை எப்படியாவது ஒரு வழிக்குக் கொண்டு வந்து விடுவதற்கு மேற்கு நாடுகள் ஆர்வம் காட்டுவதாகத் தெரிகிறது. எனவே,



மார்ச் மாதத்துக்கு முன்னதாக எதையாவது செய்து, ஜெனீவாவில் தம்மைக் காப்பாற்ற முனைகிறது அரசு. இது ஒரு காரணம்.

### அடுத்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் திட்டத்தில் அரசு

ஜனாதிபதி அல்லது நாடாளுமன்றத் தேர்தலை இனிமேல் அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முன்னிறுத்தி எதிர்கொள்ள முடியாது. அந்த மாயை மெல்ல மெல்ல உடையத் தொடங்கி விட்ட நிலையில், அரசுக்குப் புதிய உபாயம் ஒன்றைத் தேட வேண்டிய சிக்கல் உள்ளது. ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதானால், தமிழ் வாக்குகளைக் கவர எதையாவது செய்தாக வேண்டிய நெருக்கடி அரசுக்கு உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக தமிழ் வாக்காளர்கள் வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால், கடந்த தேர்தல்களில் தமிழ் மக்கள் அளித்த வாக்குகள் அதனைத் தெளிவாகவே எடுத்துக் காட்டியுள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்மக்களுக்கு அள்ளி வீசிய வாக்குறுதிகள் பல இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அல்லது மீள்குடியமர்வு போன்ற பல வாக்குறுதிகள், குறிக்கப்பட்ட கால எல்லைகளுக்கு அப்பால் நீண்ட இழுபறிகளின் பின் னரே நிறைவேற்றப்பட்டன. இத்தகைய நிலையில், அரசுக்கு எதிரான அலை தமிழ் மக்களிடம் தொடர்ந்து நீடித்து வருவதை, வடக்கு மாகாண சபைத் தேர்தல் எடுத்துக் காட்டியுள்ளது. எனவே, அடுத்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதை அரசு உறு திப்படுத்தினால், தமிழர்களின் வாக்குகளைக் கவர வேண்டிய தேவை நிச்சயம் உள்ளது. அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தயவைப் பெறுவதுதான் ஒரே வழி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதன் மூலம் அதற்கான கதவுகளை மெல்லத் திறக்கலாம். இப்படிப் பல தேவைகள் அர்சுக்கு உள்ள நிலையில் தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த அழைப்பு விடுத்துள்ளது அரசு. ஆனால், இந்த அழைப்பு தமிழ் மக்களுக்கு நம்பகத்துக்குரியதொன்றாக இருக்கவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### அரசின் பொறிக்குள் விழாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

கடந்த காலங்களில் தமிழர்களை அரசு தனது தேவைகளுக்கே பயன்படுத்தி வந்துள்ளது. எனவே, இந்த அழைப்பில் தமிழர் தரப்பு சந்தேகம் கொள்வதில் ஆச்சரியம் ஏதுமில்லை. அதனால் தான், மிக அவதானமாக, ஆக்கபூர்வமாக அரசு பேச முன்வந்தால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம் என்று சம்பந்தன் கூறியுள்ளார். அவர் அவ்வாறு கூறியிருந்தாலும், இலகுவாக அவரோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அரசின் பொறிக்குள் சிக்கிக் கொள்ளமாட்டார்கள் என்றே நம்பலாம். ஏனென்றால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு தீர்வைப் பெறுவதற்கு விருப்பம் கொண்டிருப்பாரேயானால், அதற்கான நல்லெண்ணச் சமிக்ஞைகளை வெளிப்படுத்த பல வழிகள் உள்ளன. ஆனால், அவர் அப்படி நடந்து கொள்ளவில்லை. குறிப்பாக, வடக்கு மாகாண சபையை அவரோ, அவரது கட்டுப்பாட்டில் உள்ள ஆளுநரோ சுதந்திரமாக செயற்பட அனுமதிக்கவில்லை.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதற்கு முன்னர், வடக்கு மாகாணசபை மீது செலுத்தும் ஆதிக்கத்தைக் குறைத்து, ஆளுநரை மாற்றி சுமுகமானதொரு சூழலை அவரால் உருவாக்க முடியும். அத்தகையதொரு நிலையை ஏற்படுத்தாமல், வெறும் பேச்சுப் பொறி ஒன்றை வைத்து அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விழுத்தலாம் என்று கனவு காண்கிறது அரசு. ஏற்கனவே இதுபோன்ற பொறியில் சிக்கியே வெளிவந்தது என்பதால் அவ்வளவு இலகுவாக இதில் கூட்டமைப்பு விழுந்து விடாது.

வவுனியாவில் நடந்த கூட்டமைப்புத் தலைவர்களின் கூட்டத்தில், எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடருக்கு முன்னதாக, அரசுடன் பேச்சு நடத்துவதில்லை என்று எடுக்கப்பட்டுள்ள முடிவு இதனை நன்றாகவே உறுதிப்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையோடு இயைந்த வாழ்வு

சு.சாரங்கி



உலகமே இசைமயமானது. இசை தரும் இன்பத்தை அனுபவிக்காதவர் யாரும் இலர். அது மனிதர்களை மட்டுமல்ல, சகல உயிர்களையும் ஈர்க்கவல்லது. எல்லோரையும் இசைய வைப்பதால்தான் அது இசை என்று பெயர் பெற்றது.

இப்பூவுலகில் இசை இல்லாத இடம் உண்டா? சகல இடங்களிலும் இசை ஆட்சி செய்கிறது. அதனை அறிந்து அனுபவிக்கத் தெரிய வேண்டும். உல்லாசமாக இருப்பவர்களுக்கு மட்டுமல்ல, உழைத்துக் களைத்தவருக்கும்கூட இசை ஆறுதல் தருகிறது. அவர்களது வியர்வையை வருடி இன்பம் தருகிறது. வார்த்தையில்லாத மொழிகளால் அவர்களோடு பேசுகிறது.

இசையைக் கேட்டு இன்புறாத உயிர்களே இல்லை என்று கூறலாம். அது, கல் மனதையும் கரைய வைக்கும், கண்ணீர் விட வைக்கும். கொடிய விலங்குகளையும், நச்சுப் பாம்புகளையும் கூடக் கனிய வைக்கும். இசை வயப்பட்ட விலங்குகள் தம் பகையை மறந்து மயங்கி நிற்கும்.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில் பொழுது புலரும் போதே இசையும் இளம் பனியாய்ப் பொழிகிறது. திருப்பாவையும், திருவெம்பாவையும் செவியின் வழியாக மனதைக் குளிர்விக்கிறது. எங்கும் இசையாய், இசைப் பயனாய் அன்பையும், அமைதியையும் புதுப்பிக்கிறது.

அன்று முதல் இன்று வரை தமிழ் மக்களின் வாழ்க்கையே இசைமயமானதுதான். குழந்தை பிறக்கும்போதே பாட்டும் பிறந்து விடுகிறது. தாலாட்டுப் பாடல் பாடுகிறோம். மனிதர்கள் இறக்கும் போது பாடப்படும் ஒப்பாரிப் பாடல் ஓலத்தை மறக்க முடியுமா? தமிழர்களின் ஒவ்வொரு கிராமத்திலும் இந்தப் பாடல்கள் இன்றும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

இதற்கு இடையில்தான் எத்தனை எத்தனை பாடல்கள்? வண்டி ஓட்டும்போது, நாற்று நடும்போது, அறுவடை செய்யும்போது, நெல் குற்றும் போது: இப்படி பல சூழ்நிலைகளிலும் பாடல்கள் பாடப்படுகின்றன. கிராமப்புறத்தில் அன்பு கொண்ட தலைவன், தலைவியால் பாடப்படும் நாட்டுப் பாடல்களை எழுதாக் கிளவி என்றும், நாட்டார் பாடல்கள் என்றும் இலக்கிய ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கும்மி, கோலாட்டம் முதலிய விளையாட்டுப் பாடல்களும் இதில் அடங்கும்.

உலக மொழிகள் எல்லாவற்றிலும் முதலில் வாய்மொழி இலக்கியங்கள் தோன்றி வளர்ந்த பின்னரே எழுத்து இலக்கியங்கள் எழுந்துள்ளன. எனவே இசைக்குப் பிறகே இயலும், நாடகமும் வளர்ந்துள்ளன. இதனால் முத்தமிழில் முதல் தமிழ் இசையேயாகும்.

நாட்டுப்புறப் பாடல்களில் தாலாட்டு, காதல், திருமணம், குடும்பம், ஒப்பாரி ஆகியவை அகப் பாடல் எனவும், தொழில், வழிபாடு, ஊர்வலம், நாட்டுச் சிறப்பு, கலகம், பஞ்சம், கதைப் பாடல்கள் போன்றவற்றைப் புறப்பாடல் எனவும் ஆய்வாளர்கள் பகுத்துள்ளனர்.

தமிழில் யாப்பு என்று கூறப்படும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால் வகைப் பாக்களும், அவற்றின் இனங்களும் இசையை அடிப்படையாகக் கொண்டவையே. பரிந்து வரும் இசைப்பாட்டையே பரிபாடல் என்கின்றனர். பரிபாடல் நூலில் பாடல்களில் பாடியவர் பெயரும், பண்ணின் பெயரும், இசை வகுத்தார் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அவர்கள் வகுத்தெழுதிய முறையும், அம்முறை பற்றிய இசைக்குறிப்பும் இக்காலத்தில் கிடைக்கவில்லை. இதுமட்டுமல்லாமல் இடைக்காலத்தில் மறைந்துபோன இசை நூல்களும் ஏராளம். சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தில் இசைக் குறிப்புகள் இருப்பதை அறியலாம்.

இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் இசைத் தமிழ் நூல்கள் மூலம் பண்டைய இசைத் தமிழ் மரபினையும், குழல், யாழ் முதலிய இசைக் கருவிகள் குறித்தும், இசைபாடும் முறையினையும் அறிய முடிகிறது.

அக்காலத்தில் இசை வளர்த்த மரபினரை பாணர் என்று அழைத்துள்ளனர். அவர்கள் இசைத்த யாழ் என்ற கருவி குறித்தும் அவர்களது வாழ்க்கை முறை குறித்தும் பழந்தமிழ் நூல்கள் மூலம் நாம் அறியலாம். அவர்கள் இருந்த ஊர்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் இன்றும் விளங்கி வருகிறது.

யாழ் இசையால் யானையை வென்ற உதயணன் கதை கூறும் பெருங்கதையும், இசை பாடி சுரமஞ்சரியை வென்ற சீவகன் வரலாறு கூறும் சீவக சிந்தாமணியும், இடைக்காலத்தில் தமிழ்நாட்டில் வழங்கி வந்த இசைவளத்தைப் புலப்படுத்துகின்றன. சேந்தனார் முதலிய ஒன்பது பேரால் பாடப்பட்ட திருவிசைப்பாப் பாடல்கள், தேவாரம், திருவாசகம் முதலியவற்றுக்குப் பண் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழிசை இலக்கியமாகக் கீர்த்தனைகளை இயற்றிய முத்துத் தாண்டவர், இராம நாடகக் கீர்த்தனை பாடிய அருணாசலக் கவிராயர், கீர்த்தனைகள் பல பாடிய மாரி முத்தாப் பிள்ளை ஆகிய மும்மூர்த்திகளை தமிழ் மக்கள் மறக்கலாமா?

கலையும், பண்பாடும்தான் ஒரு நாகரிக சமுதாயத்தின் அடையாளங்களாகும். ஆய கலைகள் 64 எனினும், அவற்றுள் இசைக் கலைக்குச் சிறந்த இடம் உண்டு; திசைமாறிச் சென்று கொண்டிருக்கும் மாணவர்களைத் திருத்துவதற்கும், அவர்களை நல்ல குடிமக்களாக மாற்றுவதற்கும், கலை இலக்கியங்களில் கவனம் செலுத்தச் செய்வது நல்லது. இதனைக் கல்வித் துறை கவனத்தில் கொள்ள வேண்டும். இசையால் பயிர்கள் வளரும் என்பதை அறிவியல் ஆய்வு கண்டுபிடித்து அறிவித்தது. மனித மனங்களை வளர்ப்பதற்கு இந்த இசையாலும் இயலும் என்பதை இலக்கியங்கள் கூறுகின்றன. மனநோயைப் போக்கும் மாமருந்து என்று உளவியல் வல்லுநர்கள் உரைக்கின்றனர். இந்த இசை மரபுகளை நன்கு கட்டிக் காத்து அடுத்தத் தலைமுறைக்கு நாம் அளிக்க வேண்டும்.

> யாழ் இசையால் யானையை வென்ற உதயணன் கதை கூறும் பெருங்கதையும், இசை பாடி சுரமஞ்சரியை வென்ற சீவகன் வரலாறு கூறும் சீவக சிந்தாமணியும், இடைக்காலத்தில் தமிழ்நாட்டில் வழங்கி வந்த இசைவளத்தைப் புலப்படுத்துகின்றன. சேந்தனார் முதலிய ஒன்பது பேரால் பாடப்பட்ட திருவிசைப்பாப் பாடல்கள், தேவாரம், திருவாசகம் முதலியவற்றுக்குப் பண் அமைக்கப்பட்டுள்ளன.

# இந்திய இலங்கை உறவின் முறுகலுக்குக் காரணம் ஈழத்தமிழரின் அரசியல்

உள்நாட்டுப் போரின் முடிவில் பொதுமக்கள் மீது இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நம்பகமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென இவ்வாண்டு முழுவதும்இலங்கை மீது அனைத்துலக அழுத்தங்கள் இடப்பட்டுள்ளன.

2013இல் இந்திய இலங்கை உறவானது, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போரில் இடம்பெற்ற பல்வேறு போர் மீறல்கள் மற்றும் தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டமை போன்ற பல காரணங்களால் பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கில் மீளிணக்கப்பாட்டின் ஒரு பகுதியாக 25 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முதலாக இலங்கை அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்திய போதிலும் இங்கு தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. நவம்பரில் இலங்கையில் பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் ஒன்று கூடும் உச்சி மாநாடு இடம் பெற்றது. இலங்கை மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களைக் காரணங் காட்டி சில உலக நாட்டுத் தலைவர்கள் இதில் கலந்துகொள்ளாது இந்த உச்சி மாநாட்டைப் புறக் கணித்தனர்.

### இலங்கைக்கு எதிராகக் காலக்கெடு விதிப்பு

இலங்கையில் தனிநாடு கோரிப் போராடிய புலிகள் அமைப்பு அழிக்கபட்டு நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில், ஈழத்தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகள் மறுக் கப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டி இலங்கையில் இடம்பெற்ற உச்சி மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் எனத் தமிழ்நாட்டு அரசியற் கட்சிகள் அழுத்தம் கொடுத்ததன் காரணத்தால், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அதில் கலந்துகொள்ளவில்லை.

எனினும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித் இந்த உச்சி மாநாட்டில் கலந்துகொண்டதுடன், இந்தியா தமிழ் மக்களின் நலன்களைக் கருத்திற் கொள்வதாகவும், திறந்த தேசிய நலனை அடிப்படையாகக்கொண்டு இலங்கையுடன் இந்தியா உறவைப் பேணுவதாகவும் தெரிவித்திருந்தார்.

இலங்கை 1948இல் பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திர மடைந்ததன் பின்னர், போரால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடக்கைப் பார்வையிடச் சென்ற முதலாவது உலகத் தலைவரான பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் பொது நலவாய அமைப்பின் உச்சி மாநாட்டில்இலங்கைக்கு எதிராக காலக்கெடு விதித்திருந்தார். இலங்கை அரசு 2014 மார்ச் மாதத்துக்குள் தன் மீதான போர்க் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் நம்பகமான விசாரணையை மேற்கொண்டு பொறுப்பளிக்காவிட்டால், தான் இலங்கை மீது அனைத்துலக விசாரணையை மேற்கொள்வதற்கான நகர்வை முன்னெடுப்பேன் என பிரித்தானியப் பிரதமர் அறிவித்திருந்தார்.

### சர்வதேச விசாரணையை வேண்டித் தொடரும் அழுத்தங்கள்

ஆனால் இலங்கை அரசு அதன் சொந்த நாட்டால் முன்னெடுக்கப்படும் விசாரணை மீது நம்பிக்கை கொண்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதிலளித்திருந்தார்.

உள்நாட்டுப் போரின் முடிவில் பொது மக்கள் மீது இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நம்பகமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென இவ்வாண்டு முழுவதும் இலங்கை மீது அனைத்துலக அழுத்தங்கள் இடப்பட்டுள்ளன.

இந்தியாவின் ஆதரவுடன் 2013 மார்ச்சில் அமெரிக்கா தலைமையில் இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இலங்கை தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்து பொறுப்பளிப்பதுடன், மீளிணக்கப்பாட்டு நகர்வுகளையும் முன்னெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்துக்கு இந்தியா தனது ஆதரவை வழங்கியமை தொடர்பில் இலங்கையில் பல்வேறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியா மீதான இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் தீவிர மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என இலங்கையின் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்தது.

செப்ரெம்பரில், இலங்கை அரசு, போரால் பாதிக்கப்பட்ட வடக்கில் வாழும் தமிழ் மக்களுடன் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நகர்வாக வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தியது. இந்தத் தேர்தல் மூலம் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இந்தியா போரால் பாதிக்கப் பட்ட வடக்கு மாகாணத்தை மீளக் கட்டியெழுப்ப தனது ஆதரவை வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தார்.

13ஆவது திருத்தச் சட்டத்தைத் துரிதமாக நடைமுறைப்படுத்துதல், இலங்கைச் சிறைகளில் வாடும் இந்திய மீனவர்களை விடுவித்தல் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்களுக்கான மீளிணக்கப்பாட்டு ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துதல் போன்ற சில விடயங்கள் இவ்வாண்டு இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே தீர்க்கப்படாத மிகப் பெரிய பிரச்சினைகளாக உள்ளன.

(நன்றி: புதினப்பலகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி அதிகார சபை இனிமேல் வாழ்வின் எழுச்சித் திணைக்களம்

வலி.வடக்கு, ஜன.2

கடந்த இருபது வருடங்களாக இலங்கை சமுர்த்தி அதிகார சபையாக இயங்கி வந்த சமுர்த்தி அதி கார சபை நாளை வெள்ளிக் கிழமை முதல் வாழ்வின் எழுச்சித் திணைக் களம் என்ற பெயரில் இயங்கவுள்ளது.

இலங்கை சமுர்த்தி அதிகார சபையுடன் இணைந்த ஏனைய அமைப்புகளும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஜனாதிபதியின் ஆதரவுடன் இந்தத் திணைக்களத்தின் கீழ் வரவுள்ளன.

இது சம்பந்தமான சுற்றறிக்கை இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் மாவட்ட செயலாளர்கள், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள், உதவிசமுர்த்தி ஆணையாளர்கள், மாவட்ட சமுர்த்திப் பிரதிப் பணிப்பாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகிய தரப்புகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

அன்றைய தினம் காலையில் சகல சமுர்த்தி சங்கங்கள் சமுர்த்தி மகா சங்கங்கள் ஆகியவற்றில் சமயச் சடங்குகள் மற்றும் கலாசார நிகழ்வுகளை நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யும் படியும் சமுர்த்தி அதி கார சபையின் பணிப்பாளர் நாயகம் ஆர்.பி.பீ. திலகஸ்ரீயினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-86)

"_"

**இலங்கை சமுர்த்தி அதிகார சபையுடன் இணைந்த ஏனைய அமைப்புகளும். பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஜனாதிபதியின் ஆதரவுடன் இந்தத் திணைக்களத்தின் கீழ் வரவுள்ளது.**

# கோஷ்டி மோதலில் சிக்கி நாவற்குழியில் 6 பேர் காயம்

*திங்கள் இரவு சம்பவம்*

நாவற்குழிப் பகுதியில் இரு பகுதியினருக்கு இடையே ஏற்பட்ட மோதலில் கடந்த திங்கள் இரவு ஒரே குடும் பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஆறு பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் இரவு நாவற்குழி மகா வித்தியாலயப் பகுதியில் இடம்பெற்றது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த பொன்னன் தனபாலசிங்கம் (வயது-56), இவரது பிள்ளைகளான த.மனோஸ்காந்தன் (வயது-19), த.ஸ்ரீகாந்தன் (வயது-24) மற்றும் மீசாலை கிழக்கைச் சேர்ந்த ஆறுமுகம் ரமனேஸ் (வயது-24), நாவற்குழி தெற்கைச் சேர்ந்த ஜீவராஜா கனீஸ்ரன் (வயது-21), பாலாவி தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி தயாபரன் (வயது -38) ஆகியோரே காயங்களுக்கு இலக்கானவர்களா வர்.

இவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டதுடன் இவர்களில் சின்னத்தம்பி தயாபரன், தனபாலசிங்கம் மனோஸ் காந்தன் ஆகியோர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ந-9)


KIDS PARK PRE-SCHOOL AND DAY CARE CENTER THIRUNELVELY

சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்

Kids Park Pre School and Day Care Center

528, Palaly Road, Thirunelvely.



P. Lukshan, K. Kugapriya, S. Harjanan, K. Lathusha, S. Latheeskaran, J. Nilaxsika, R. Acheyan

P. Jayatharsan, P. Sathursika, K.Kishanth, A. Mathurakala Viththya, S. Pratheep, P. Sathvika, J. Koviliyan

J. Akshara, J. Kesika, G. Gishaniji, T. Kiriththika, K. Piranithan, B. Thejaswiny

S. Sankavai, L. Sivajahnu, S. Jabesh, S. Harini, K.Aruniya, S. Lathushan



J. Jathusha, J. Swathi, B. Vathsaja, S. Pankjan

S. Narththana, P. Palavenujan, D. Karuran, S. Bravenan



நிபுணத்துவ ஆலோசகர்:

**பாலசுப்பிரமணியம் தனபாலன்**

BA (Cey), PGDE (merit), Dip. in Psy
Dip. in Pre School Education (Distin
M.Phil in Pre School Education,
Cert in Vocational Guidance (Singap
Reading PhD University of Jaffna.

விரைவில் எமது மண்ணில் சகல

மனதர்ர

தேசத்தைக் க
எமது முன்
ஒப்பனை.
முழுநி
பாடசாலைக்கு

(C/10665)(10.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்திஜி முன்பள்ளி கலை விழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.2

ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜி முன்பள்ளி கலை விழா கடந்த செவ்வாய்க்கிழமை திருமதி எஸ்.கல்யாணி தலைமையில் முன்பள்ளி பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் என்.விந்தன் கனகரத்தினம் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.பரஞ்சோதி, யாழ்.மாநகர சபை உறுப் பினர் எஸ்.மரியகொறற்றி, தீவக முன்கல்வி உதவிப் பணிப்பாளர் கே.ஆனந்தி, தம்பாட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஏ.யோகராசா, காந்திஜி நாடகமன்றத் தலைவர் எம்.முருகவேள், காந்திஜி சனசமூக நிலையத் தலைவர் எஸ்.சாந்தகுமார், முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவர் எம்.சிவஞானம் ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் சிறுவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ந-7)



# ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கு வலய மட்ட இடமாற்றம்

வலி.வடக்கு, ஜன.2

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கான வலய மற்றும் கோட்ட மட்டத்திலான இடமாற்ற உத்தரவு இன்று வியாழக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வலிகாமம் கல்வி வலயத்தினால் உரிய ஆசிரியர்களுக்கு தனிப்பட்ட முறையில் கடிதங்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் வலய உயர் அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக ஒரே பாடசாலையில் கடமையாற்றிய நூற்று இருபது ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வழமை போன்று இடமாற்றத்துக்கு உள்ளாகிய ஆசிரி யர்களில் ஒரு பகுதியினர் தமது இடமாற்றத்தை நிறுத்தவும் மற்றும் அயல் பாடசாலைகளில் மாற்றம் கேட்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ந-86)

## ...ர வாழ்த்தி வழியனுப்புகின்றோம்!

...க் கட்டியெழுப்பும் எம் கல்விப்பணியின் கலங்கரை விளக்குகளே!
... முன்பள்ளியில் விளையாட்டு, ஆடல், பாடல், அபிநயம், ஓவியம்,
...னை, பொம்மலாட்டம், நாடகம், கணினி மூலம் சிறப்பாகக் கற்று
...ழுநிறை ஆளுமையுடையவர்களாக இன்று முதன் முதலாக
...க்குச் செல்லும் உங்களை மனதார வாழ்த்தி வழியனுப்புகின்றோம்....



பணிப்பாளர்:
**திருமதி கர்ணி தனபாலன்**
Dip. in Pre-School Education (Distinction)
PRC Guidance & Counselling (1st Class)



U. Sabina | K.Anuran | R. Parmena | M. Kavin | K. Thadshajini | R. Sanojan | R. Anushviny

K. Abishnavy | M. Sarukshan | T. Thaksika | S. Abiram | N. Sanura | M. Piravina | K. Piranavan






V. Akashbeniya | S. Menusa | S. Sathanan | V. Pipiththy | J. Abiluxshan

Y. Jashmina | G. Mathusha | P. Ajaana | N. Shayithan | S. Luxvini

...ன்
...n Psy 1st Class,
...Distinction),
...ngapore),
...na.




**அன்பான பெற்றோர்களே! உங்கள் சிறார்கள் எப்படி செயற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்களோ அப்படியே நடந்து முன்மாதிரியாகச் செயற்படுங்கள். அவர்களுடைய நிறைகளைப் பாராட்டவும், குறைகளை மன்னிக்கவும் கற்றுக்கொடுங்கள். அவர்களிடம் வன்முறைகளைத் தவிருங்கள். அன்பை வெளிகாட்டுங்கள். உங்கள் குழந்தைகளுடன் விளையாடுங்கள். அவர்களை மதியுங்கள். துணிச்சலைப் பாராட்டுங்கள். மன்னிக்கக் கற்றுக் கொடுங்கள். இறைவனை வணங்கி பண்பாளர்களாக்குங்கள். உங்கள் வீடாக எமது முன்பள்ளியில் இவற்றை நாம் உங்கள் குழந்தைகளின் பெற்றோர்களாக இருந்து வழங்குகின்றோம்!...**

**...ல வசதிகளையும் கொண்ட சர்வதேச பாடசாலை ஒன்றை உருவாக்கவுள்ளோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

மேடம்: எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். சகோதரவகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிடைக்கும்.

**இடபம்**: சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். யாரையும் எடுத்தெறிந்து பேச வேண்டாம். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். வெளி உணவுகளைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்**:திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். குடும்பத்தில் அமைதி நிலவும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**கடகம்**: மன நிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். முன்கோபம் விலகும். அரசுப்பணிகள் சுமுகமாக முடியும். வேற்று மதத்தினரால் ஆதரவு கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**சிங்கம்**: நட்பு வட்டாரம் விரிவடையும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்துகொள்வார்.

**கன்னி**: பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**துலாம்**: தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**விருச்சிகம்**: மனதில் பட்டதைப் பளிச்சென்று பேசுவீர்கள். அரசுக் காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வியாபாரத்தில் பரபரப்பான சூழல் ஏற்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**தனுசு**: யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்துக்கு ஆளாவீர்கள். உங்களைப் பற்றி அவதூறாகப் பேசுவார்கள். அதைப் பெரிது படுத்த வேண்டாம். சிறுசிறு ஏமாற்றங்கள் வந்து நீங்கும். ஊழியர்களுடன் அளவாகப் பழகுங்கள்.

**மகரம்**: திட்டமிட்ட காரியங்களை அலைந்து முடிக்க வேண்டி வரும். வெளிவட்டாரத்தில் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வந்து நீங்கும்.

**கும்பம்**: சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப்பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். தாய்வழி உறவினர்களால் நன்மை உண்டு.

**மீனம்**: குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். நட்பு வட்டாரம் விரிவடையும். பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

# சட்டமும் சுதந்திரமும்



## விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

'விடுதலை பெற்ற மனிதனுக்குப் போராட்டம் என்பது பொருளற்ற ஒன்று. ஆனால், நம்மைப் பொறுத்தவரை அது பொருளுடைய ஒன்று. ஏனெனில் பெயரும் உருவமுமே பிரபஞ்சத் தோற்றத்தின் காரணம் !

வேதாந்தத்தில் போராட்டத்துக்கு இடம் உண்டு; அச்சத்துக்கு இடம் இல்லை. உங்களது இயல்பை உறுதியாக எண்ணும்போது அச்சமெல்லாம் மறைந்து விடும். நீங்கள் கட்டுண்டிருப்பதாக எண்ணினால், கட்டுண்டவர்களாகவே இருப்பீர்கள். நீங்கள் விடுதலை பெற்றவர்கள் என்று எண்ணினால் விடுதலை பெற்றவர்களாகவே விளங்குவீர்கள்.

இந்தத் தோற்றப் பிரபஞ்சத்தில் இருக்கும்போது நாம் அனுபவிக்கும் சுதந்திரம் உண்மைச் சுதந்திரத்தின் மிகச் சிறிய ஒரு பகுதியே. உண்மைச் சுதந்திரம் அல்ல.

இயற்கை விதிகளுக்குக் கட்டுப்படுவதே சுதந்திரம் என்ற கருத்தை நான் ஏற்க மாட்டேன். அது எதைக் குறிப்பிடுகிறது என்பதே எனக்கு விளங்கவில்லை.

இயற்கை விதிகளை மீறுவதன் மூலமே மனிதகுலம் வளர்ச்சி பெற்றுள்ளது என்பது மனிதகுல வரலாறு அறிவிக்கும் ஒன்று. உயர்ந்த விதிகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் தாழ்ந்த விதிகளை வெற்றி காண முடிந்தது எனலாம். அப்போதும் என்ன? வெற்றி காண விரும்பும் மனம் விடுதலை பெறவே முயன்றது.

இயற்கை விதிகளை மீறும் போராட்டத்தின் மூலமே விடுதலை கிட்டும் என்பதை அறிந்த உடனே அந்த இயற்கை விதிகளை வெற்றி காண அந்த மனம் விரும்பியது. எனவே விடுதலையே் லட்சியம். மரங்கள் இயற்கை விதிகளை மீறுவதில்லை; பசு திருடு வதில்லை; சிப்பி பொய் சொல்வதில்லை. ஆனாலும் அவை மனிதனைவிட உயர்ந்தவை அல்ல. பன்மடங்கு உறுதியுடன் விடுதலையை வலியுறுத்துவதே வாழ்க்கை.

# பேஸ்புக் உருவான கதை



ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த மாணவர் மார்க் ஸுக்கர் பெர்க் என்பவரால் எதேச்சையாக உருவாக்கப்பட்டது தான் இந்த பேஸ்புக் (FACE BOOK). தன்னைக் கைவிட்டுப்போன காதலியின் நினைவிலிருந்து மீள்வது எப்படி என்று ஒரு நாள் இரவு யோசித்துக் கொண்டிருந்த போதுதான் இந்தச் சிந்தனை அவருக்கு வந்தது. ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் ஒரு வழக்கம் உண்டு. அங்கு பயிலும் மாணவர்கள், வேலை செய்யும் ஆசிரியர்கள் தொடர்பான விவரங்கள் அச்சிடப்பட்ட புத்தகம் ஒன்றை மாணவர்களுக்கு அந்தப் பல்கலைக்கழக நிர்வாகம் கொடுத்து வந்தது. அந்தப் புத்தகத்தை மாணவர்கள் பேஸ்புக் என்று குறிப்பிடுவது வழக்கம். இந்தச் சிந்தனையைத்தான் ஸுக்கர்பெர்க் எடுத்துக் கொண்டார். தனது சக மாணவர்களான எட்வர் டோ சவேரின், டஸ்டின் மொஸ்கோவிட்ஜ், கிறிஸ் ஹ்யூக்ஸ் ஆகியோரைச் சேர்த்துக் கொண்டு இணையத்தளம் ஒன்றை அவர் உருவாக்கினார். முதலில் ஹார்வர்டு பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமே அதில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

பின்னர் ஏனைய கல்லூரி மாணவர்களும் அனுமதிக்கப்பட்டனர். அதற்குக் கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து பள்ளி மாணவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இப்போதோ 13 வயதுக்கு மேற்பட்ட எவரும் இதில் உறுப்பினராக முடியும். அவர்களுக்கு ஒரு மின்னஞ்சல் முகவரி மட்டும் இருந்தால் போதும்.

காதலில் மனம் உடைந்த இளைஞனால் விளையாட்டாக உருவாக்கப்பட்ட இந்த இணையத்தளம், இப்போது அவனை உலகின் முக்கியமான பணக்காரர்களில் ஒருவனாக ஆக்கி இருக்கிறது. அது எம் காலத்தின் (காதலின்?) அதிசயம் என்று தான் சொல்ல வேண்டும். அதுவும் ஆறே வருடங்களில் இந்தப் பிரமாண்ட அதிசயம் நடந்திருக்கிறது. இன்று இந்த இணையத் தளத்தை வாங்குவதற்கு உல கின் மிகப்பெரிய நிறுவனங்கள் எல்லாம் போட்டி போடுகின்றன.

வணிகரீதியில் மதிப்பு வாய்ந்த எம்.ரி.வி. நிறுவனத்துக்கு இணையாக, வாங்குவதற்கு போட்டி போடப்படும் நிறுவனங்களில் ஒன்றாக பேஸ்புக் இருக்கிறது. இதில் உலகப்புகழ்பெற்றமைக் ரோசொப்ட் நிறுவனம் முதலீடு செய்துள்ளது.

## நாளை

மார்கழி-19

வெள்ளிக்கிழமை 03.01.2014

திதி: துதியை பி.ப.12.59 வரை

நட்சத்திரம்:

உத்தராடம் மு.ப.08.30 வரை

சுபநேரம்:

06.30- 08.00 வரை

இராகுகாலம்:11.00 -12.30 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 7 | | | 1 | | | |
| | | | 2 | 5 | 3 | 1 | | |
| | | | | | 8 | | | 3 |
| 9 | 5 | | 6 | | | 8 | 7 | 1 |
| | 3 | | | | | | 5 | |
| 8 | 1 | 4 | | | 7 | | 3 | 2 |
| 4 | | | 1 | | | | 9 | |
| | | 5 | 7 | 8 | 9 | | | |
| | | | 3 | | | 5 | 1 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 8 | 2 | 4 | 5 | 6 | 1 | 7 |
| 2 | 7 | 1 | 8 | 9 | 6 | 4 | 5 | 3 |
| 4 | 6 | 5 | 3 | 1 | 7 | 2 | 8 | 9 |
| 9 | 3 | 4 | 5 | 6 | 2 | 1 | 7 | 8 |
| 1 | 2 | 7 | 4 | 3 | 8 | 5 | 9 | 6 |
| 8 | 5 | 6 | 9 | 7 | 1 | 3 | 4 | 2 |
| 6 | 8 | 3 | 1 | 5 | 9 | 7 | 2 | 4 |
| 7 | 1 | 2 | 6 | 8 | 4 | 9 | 3 | 5 |
| 5 | 4 | 9 | 7 | 2 | 3 | 8 | 6 | 1 |

### நேற்றைய சுடோக்கின் விடை

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய [illegible] ஜப்பானியச் [illegible] 1986 இல் ஜப்பானிய நிறுவன [illegible] இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் உயர் கல்வியை தாமாகத் தெரிவு செய்வது நன்மை



நாம் இந்த 21 ஆம் நூற்றாண்டில் பல கற்கை நெறிகளுக்கு முகம் கொடுத்து அதில் எமக்கு விரும்பிய துறைகளில் கல்வி கற்று எமது வாழ்க்கையில் ஏதோ ஒரு வகையில் முன்னேறிக்கொண்டிருக்கிறோம். அதற்கு அடித்தளமாகவிளங்குவதுஎமது உயர்கல்வி. ஒவ்வொரு பெற்றோருக்கும் தமது பிள்ளைகள் என்ன தொழில் செய்வோராக வரவேண்டும் என்ற ஒரு கனவு இருக்கும். அது போலவே ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் தாம் என்ன தொழில் செய்பவராக வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஒன்றும் இருக்கும். இவ்விரு தரப்பினரதும் கனவுகள் ஒத்துப் போகும் பட்சத்தில் எந்த விதப் பிரச்சினையும் வராது. இல்லையெனில் பெற்றோர் விருப்பத்துக்கமைய கல்வி நெறியைக் கற்கும் மாணவர்கள். என்ன இந்த உயர் கல்வி இவ்வளவு கஷ்டமாக இருக்கிறதே? எங்களால் எவ்வாறு படிக்க முடியும் என்று ஏனோதானோ எனக் கல்வியைக் கற்பார்கள். எதுவும் விருப்பப்படி அமைவதையே பிள்ளைகள் விரும்புவார்கள்.

தங்களுக்குப் பிடித்த பாடநெறியைப் பிள்ளைகள் தெரிவு செய்யும்போது அவர்களால் முழுமனத்துடன் படிப்பில் கவனம் செலுத்த முடியும்.

எனவே பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளின் உயர் கல்வியைப் பொறுத்த வரையில் அதை அவர்களின் கைக ளிலேயே விடுங்கள். அவர்களை வற்புறுத்தி உங்களின் விருப்பத்துக்கேற்ற கல்வி நெறியைக் கற்குமாறு வற்புறுத்தாதீர்கள். அது அவர்களின் மன நிலையைப் பாதிக்கும் வாய்ப்புக் கூட ஏற்படலாம்.


*விஜயகிருஸ்ணா, புலோலி*

## காணொலி கடகம்

கலண்டர் கடவுளுக்கும் பூச்சூடி
பூசிய மூவிரல் திருநீறு
வாசலில் அம்மா இருக்க
முற்றத்தில் சுற்றத்துடன் முழக்கமிட்டு
விளையாடிய தருணங்கள்

விளக்கில் விழுந்த முடி
தெரியாமல் படித்த பாடம்
சும்மாயிராது சுரண்டிச் சுரண்டி
விளையாட அழைக்கும் ஜிம்மியின்
குறும்பு முகம்

ஆண்டவனும் அனுபவிக்கா
ஆரோக்கியம்
அளித்த இன்பங்கள் இவை
இப்போ எங்கென்று அறிவாயா?
விழித்திரு காணொலிக் கடகம்
கொள்ளையடித்துக் கொண்டது.



*ப. கோகிலராஜ். வவுனியா*



## விதியா.. மதியா...

இரண்டு கைகால்
இடப்புறம் வலப்புறம்
இரண்டு விதியை
எழுதினால்..
நாளை...

இரண்டும் மோதும்
ஒன்றை ஒன்று..
இரண்டும் அழியும்
விதியழிந்து..
மதி வெல்லும்.

உறைந்தால் முடிவு
எழுந்தால் விடிவு
விழித்தே எழுந்திரு
விதியினை..
எழுத..!

த. குணாஜினி
யாழ். தேசிய கல்வியியற்
கல்லூரி, கோப்பாய்.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

**மாணவர்கள் உயர்கல்வித்துறையை தாமாகத் தெரிவு செய்வது**

**நன்மையா? தீமையா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.......................................................

முகவரி :- .......................................................

.......................................................

........................ ........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## எப்படி உருவாகிறது கண்ணீர்?


எமது கண்ணில் உள்ள விழி சுழல்வதற்கான ஈரப்பசை தரும் சுரப்பி. இயல்பான அளவுக்கு மேல் அதிகமாகச் சுரப்பதால் கண்ணீர் ஏற்படுகிறது. கண் அந்த மேலதிக சுரப்பி நீரை வடிக்க இயலாததால் மிகுதியான நீர் கண்ணீர்ப் பெருக்கமாக வெளி யேறுகிறது.

கண்ணீரைத் தோற்றுவிக்கும் சுரப்பி. கண்ணீர்ச் சுரப்பி என அழைக்கப்படும். கண்ணீர் என்பதற்கு லத்தீன் மொழிச்சொல் லக்ரிமா (Lacryma) என்பதாகும். அந்தச் சுரப்பி கிட்டத்தட்ட வாதுமைக் கொட்டை அளவு வடிவில் கண்ணின் மேலே அமைந்துள்ளது. ஆறு அல்லது ஏழு நுண்ணிய நரம்புகளால் கண் விழியின் மேற்பரப்பில் அது இணைந்துள்ளது. ஒவ்வொரு முறையும் கண் மூடித் திறக்கும் போது (Blink) கண் ணின் மேற்பரப்பு முழுமையும் இச்சுரப்பு நீர் பரம் பலாகிறது. மேல் கீழ் கண்ணிமைகள் சேருமிடத்தில் தேவைக்கு மேலான நீர் சேகரிக்கப்பட்டு கண்ணின் உள் மூலையில் இரண்டு வாய்க்கால் வழியே வந்து மூக்கின் அருகிலுள்ள கண்ணீர் பைக்கு எடுத்து வரப் படுகிறது (Lachymal Sac). வெங்காயம் அல்லது வீட்டு அமைப்பில் தோன்றும் நவச்சார ஆவி (Ammonia) போன்ற சேர்மம் ஆகியவற்றின் மூக்கைத் துளைக்கும் மணம் அல்லது துன்பம், மகிழ்ச்சி, பயம் போன்ற உணர்ச்சிகளால் ஏற்படும் அழுத்தம் போன்றவற்றினால் கண்ணீர்ச் சுரப்பி வழக்கமான சுரப்பு நீருக்கு மேல் அதிகமான நீரை சுரக்கிறது . அதனால் கண்ணீர்ப் பை நிரம்பி மூக்கின் மேல் நுழை கிறது. குழாய்கள் ததும்பி வெளிப்படுகின்றன. இந்தத் ததும்பி வழிதலே கண்ணீராகும்.


*மழைஅழகன் பவதாரணி*

## அதிகம் பேச வேண்டாம்

ஒவ்வொரு வார்த்தைகளையும் நாம் பேசும் போது நமது உடலில் 72 தசைகள் அசைந்து இயங்குகின்றன. அதனாலேயே அதிகம் பேச வேண்டாம் என்று பெரியவர்கள் நம்மைக் கட்டுப்படுத்துவதுண்டு. அதிகமான பேச்சு உடலின் தசைகளைப் பலவீனப் படுத்தி விடுகின்றது. இதனால் உரிய நேரத்தில் உரிய பலத் தைக் காட்ட முடியாமல் போகிறது என்பதை ஜப்பானியர்கள் கண்டுபிடித்துள்ளனர்.



## அட அப்படியா?



ஆழ்கடலைப் பற்றி ஆராயக் கூடிய இயலுக்கு ஒஷனோகிராபி என்று பெயர்.
10 நிமிடங்கள் ஓடக்கூடிய கார்ட்டூன் திரைப்படத்துக்கு சுமார் 1,100 சித்திரங்கள் தேவைப்படும்.
உலகில் அதிகம் இனிப்புச் சாப்பிடுகிறவர்கள் இங்கிலாந்துக் காரர்கள்.
உலகிலேயே சீனாவில்தான் சைக்கிள்கள் அதிகம்.
நகைச்சுவைகளைச் சொல்லித் தருவதற்கு என்றே ஒரு கல்லூரி இங்கிலாந்தின் மான் செஸ்டர் நகரத்தில் உள்ளது.
உலகில் அதிக அளவு கண் தானம் வழங்குபவர்கள் இலங்கையர்கள்தான்.
கன்னியாகுமரி மாவட்டத்தில் ஔவையாருக்கு 3 கோயில்கள் உள்ளன.
உலகிலே அதிக அளவில் தபால் நிலையங்கள் உள்ள நாடு இந்தியாதான்.
கடல் வழியே அனுப்பப்படும் தந்திக்கு கேபிள் என்று பெயர்.
ஜப்பானில் மாணவர்களுக்கு இரண்டு கைகளாலும் எழுதுவதற்குக் கற்றுக் கொடுக்கிறார்கள்.

*சிந்து சிவதாஸ், ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் குத்தகைக்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2014

05.11.2013, 26.11.2013, 19.12.2013 திகதிகளில் செய்யப்பட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் 2014ஆம் ஆண்டுக்கு பின்வரும் சந்தை, இறைச்சிக் கடைகளுக்கு மீள்கேள்வி கோரப்படுகின்றது.

| இல. | சந்தைகள்,(துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலை யங்களுடன்) இறைச்சிக் கடைகள். | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த)ரூபா. |
|---|---|---|---|---|
| | **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1. | திருநெல்வேலி சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1000.00 | 15000.00 | 15,502,500.00 |
| | **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1. | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 384,930.00 |

கேள்விப் படிவம் வழங்கப்படும் திகதி : 07.01.2014 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிவரை.
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 07.01.2014 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணி வரை.
கேள்வி திறக்கும் திகதி : 07.01.2014 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணி
நிபந்தனை : குத்தகைக் காலம் 01.01.2014ஆம் திகதி முதல் கணிக்கப்படும் என்பதுடன் குத்தகைத் தொகையின் 1/3 பகுதியினை 08.01.2014ஆம் திகதி அன்று செலுத்தி குத்தகை உடன்படிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதனை கருத்திற்கொள்ளவும். கேள்விகளை ஏற்றுக்கொள்ளவும் நிராகரிக்கவும் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
குத்தகை தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.
01.01.2014 (சி/10889)(7.6.3)

ப.வசந்தகுமார்
தவிசாளர், நல்லூர் பிரதேச சபை.

## காலநீடிப்பு

### முல்லைத்தீவு மாவட்டச்செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரல்-2014

17.12.2013 ஆம் திகதிய உதயன் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் பொருள்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் வழங்கும் திகதி 31.12.2013 ஆம் திகதியிலிருந்து 08.01.2014 ஆம் திகதி வரை நீடிப்பு செய்யப்படுகின்றது. அக்கறையுடைய வழங்குநர்கள் இக்காலப் பகுதிக்குள் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000 இனை பணமாக செலுத்தி மாவட்ட செயலகம், கணக்குக் கிளையில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்வதுடன் 17.01.2014 ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை மாவட்டச் செயலகம், கணக்குக்கிளையில் சமர்பித்தல் வேண்டும்.

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்/மாவட்டசெயலாளர்
முல்லைத்தீவு. (சி/10891)(4.6.3)

## வாசகர்களே வாங்கிவிட்டீர்களா உங்கள் ஜனவரி மாத குடும்ப முன்னேற்றத்தை...




★நட்சத்திர இல்லத்தரசி ★சிரிப்பு ஒரு மருந்து ★அம்முவின் கேள்வி பதில் ★சமையல் குறிப்புகள் ★உள்நாட்டு சினிமா ★சமய அனுஷ்டானங்கள் ★தொழுகை நேரங்கள் ★ஜனவரி மாத இராசி பலன் ★காதலி தேடிக்கொடுத்த மனைவி ★சிறுவர் விருந்து ★பாலர்களுக்கான விசேட பயிற்சிகள் ★தரம் 5 மாணவர்களுக்கான தரமான 10 வினாக்கள் ★ G.C.E O/L தர மாணவர்களுக்கான தரமான 10 கணித வினாக்கள் ★ G.C.E A/L இணைந்த கணிதம் தரமான 5 வினாக்கள் ★G.C.E A/L உயிரியல் தரமான 5 வினாக்கள் ★G.C.E A/L வணிகக் கல்வி தரமான 5 வினாக்கள்

அரசியல் பாலியல் கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு

**இல்லத்தரசிகளுக்கான இன்னும் பல [illegible] அம்சங்களுடன் வெளிவந்துள்ளது.**

**உங்கள் பிரதிகளை அருகிலுள்ள [illegible] முகவர்களிடமும் புத்தக சாலைகளிலும் கேட்டுப் பெற்றுக் கொள்ளவும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி இந்துவில் தொ.நு.கூடம்

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரவகுப்புதொழில்நுட்ப பாட மாணவர்களுக்கானஆய்வுகூடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான இடத்தைத் தெரிவுசெய்து அனுப்புமாறு கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது. 90×30 அளவில்மூன்றுமாடிகளைக் கொண்ட கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. வடமாகாணத்தில் 20 பாடசாலைகளில்தொழில்நுட்ப ஆய்வு கூடம் அமைக்கப்படவுள்ளது. மகிந்தோதய ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்ஆய்வுகூடம்நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்புகளில் 2013 இல் புதிதாக தொழில்நுட்பப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு தேர்தல் தொகுதிக்கு ஒரு பாடசாலை என்ற ரீதியில் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (வ-9)

## கௌரவிப்பு



அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சைவப் புலவர் விருது வழங்கும் நிகழ்வில் வட மாகாணம் முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த முத்துஐயன் கட்டு பாலகிருஷ்ணன் திலகானந்தம் சைவப் புலவர் பட்டத்தைப் பெற்றுக் கௌரவிக்கப்பட்டார். (ந-500)

## வீதியில் தள்ளாட்டம்; முதியவரை தூக்கி வீசியது வாகனம்

நிறை போதையில் வீதியைச் சொந்த மாக்கி தள்ளாடிச்சென்றநபரை வேகமாக வந்த வாகனம்மோதித்தள்ளியது. வரணியில் நேற்று முன்தினம் நடந்த இந்த விபத்தில் இயற்றாலையைச் சேர்ந்த இரத்தினசிங்கம் யோகராசா (வயது-64) என்பவர் தலை மற்றும் கால் ஆகியவற்றில் காயங்களுக்கு இலக்கானார். அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகயாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப் பட்டார்.
இதேவேளை தாக்குதல் ஒன்றில் காயமுற்ற நுணாவில் மேற்கைச் சேர்ந்த 30வயதுபெண் ஒருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார். (ஒ-9)

# காலம் கடந்த காசுக் கட்டளைகளை மாற்றிக் கொள்ளச் சந்தர்ப்பம்

வரணி, ஜன.2

அஞ்சல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட காலம் கடந்த காசுக் கட்டளைகளை அதன் உரிமையாளர்களுக்கு மாற்றிக் கொடுக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக அதன் கட்டுப்பாட்டாளர் அறிவித்துள்ளார். 1.1.2010 தொடக்கம் 31.12.2010 வரையான கால கட்டப் பகுதியில் வழங்கப் பட்டுள்ள காசுக்கட்டளைகளின் உரிமையாளர்களுக்கே இவ்வாறான சலுகை வழங்கப்பட்டுள்ளது.

வழமையாக ஒரு காசுக் கட்டளையின் வழங்கு காலம் ஆறு மாதங்களாகும். சில தவிர்க்க முடியாத காரணங்களுக்காக அந்தக் காசுக் கட்டளை வழங்கிய மாதத்தின் கடைசித் திகதியில் இருந்து 2 வருடங்கள் வரை அதனை மாற்றிக் கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டு வந்தது.

2 வருடங்களின் பின்பு அந்தக் காசுக் கட்டளையை எந்தவித காரணத்தைக் கொண்டும் மாற்றிக் கொடுப்பதற்கோ கால நீடிப்பு செய்வதற்கோ முடியாது. இப்படியான காசுக் கட்டளைகள் அரசு வரவு கணக்குக்கு மாற்றப் படும். இருந்தும் சில தவிர்க்க முடியாத காரணங்களுக்காக மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் காசுக் கட்டளைகளை தண்டப்பணம் செலுத்தி மாற்றிக் கொடுக்க காசுக் கட்டளைகள் திணைக்களம் முன் வந்துள்ளது.

நீதிமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட்ட காசுக்கட்டளைகள், சட்ட நிமித்தம் காரணமாக வீட்டு வாடகைக் கட்டணம், சபையினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள காசுக் கட்டளைகள், பணத்தைப் பெறுபவர் வெளிநாடு ஒன்றுக்குச் சென்றிருத்தல், பணம் பெறுபவர் மோசமாக உடல் நலம் பாதிக்கப்பட்டவராக இருத்தல் ஆகிய காரணங்களுக்காக காலம் கடந்த காசுக் கட்டளைகளை மாற்றிக் கொடுக்க திணைக் களம் முடிவெடுத்துள்ளது.

இவர்களுக்கான சந்தர்ப்பத்திற்கமைய 6.12.2013 ஆம் திகதியில் இருந்து 3 மாதங்களுக்குள் தமக்கு அதற்காக விண்ணப்பிக்க வேண்டும் என காசுக் கட்டளைத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்ததுடன், அதன் பின்பு விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-122)

## 31ஆம் நாள் நினைவுடன்



திருமதி
**தவமணி (நாகம்மா) தர்மலிங்கம்**

அன்புக்கோர் உரைக்கல்லாய்
அரவணைப்பில் பூமியைப்போல்
பண்புகளைப் புகட்டுகின்ற
நல் ஆசானாய் எமையெல்லாம்
வழிநடத்திய எம் அன்புத் தெய்வமே!

கீரிமலை வீதி, சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் பிளாக்கர் றோட், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி (நாகம்மா)தர்மலிங்கம் அவர்கள் கடந்த 03.12.2013 சிவபதமடைந்தார்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (02.01.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறுகின்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எம் மீளாத்துயரில் பங்கு கொண்டு நேரிலும் தொலைபேசியிலும் ஆறுதல் தந்த அனைவருக்கும் மற்றும் 31.12.2013 அன்று கீரிமலையில் நடைபெற்ற கிரியை களிலும் கலந்து கொண்ட உறவுகளுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிளாக்கர் றோட்,
சங்கானை. (சி/10887)(3.6.4)

தயாளலிங்கம்
[மகன்–வவுனியா]

## மரண அறிவித்தல்

# முருகன் நாகன்



கைதடி வடக்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் நாகன் 30.12.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன்-பொன்னி தம்பதியினரின் மகனும், சீதேவிநாகியின் அன்புக் கணவரும், செல்லப்பா, பூரணம், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), வாமதேவன் (பிரான்ஸ்), நவரத்தினம் (சுவிஸ்), யோகேஸ்வரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரஸ்வதி, காலஞ்சென்ற இரத்தினம் (SRகட்டட நிறுவனம்) மற்றும் தங்கம்மா, ஞானதேவி (பிரான்ஸ்), மீரா(பிரான்ஸ்), ராதிகா(சுவிஸ்), லீலாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லனிதா, ஜெசிநாத், கோபிநாத், கிறிஸ்தா (செல்வி), நிஷா, தர்சன், சிந்துஜன், சிந்துஜா, வியூரன்(விஜி), கயூரன்(நிரோஜன்),சகானா, மதியழகன், ராஜ், விரோஜினி, தர்மிளா ஆகியோரின் பாசமிகு பேரனும், கிருசிகன், கேசிகன், கவினிகா, கிருஷ், சாருஜன், அஷ்னா ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்ற சடையன் மற்றும் சங்கரன், நாகமுத்து, வைரவி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக் கிரியைக்காக ஊறல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி. (41870) (4.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## அனுமதியற்ற கட்டடங்கள்; சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

கொக்குவில் மேற்குப் பகுதியில் அனுமதியின்றிக் கட்டப்படும் கட்டடங்கள் தொடர்பாக சபையின் வீடமைப்புக் குழுவின் அறிக்கை கிடைத்ததும் உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதென நல்லூர் பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் கூட்டம் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை சபை மண்டபத்தில் நடைபெற்றது. சில கட்டட அனுமதிகள் குறித்த முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு அவை தவறான முறையில் வழங்கப்பட்டவை அல்ல எனவும் சபை தீர்மானித்துள்ளது. (ந-7)

## சிறிய பஸ்களின் சேவைக்கு வேண்டுகோள்

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் சிறிய பஸ்களை சேவையில் ஈடுடுத்துமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பெரியளவிலான இ.போ.ச பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு வருமானம் போதவில்லை யெனக்கூறப்படும் நிலையில் சிறிய பஸ்களை கிராமப் புறங்களுக்கான சேவையில் ஈடுபடுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போக்குவரத்து நெருக்கடி மிகுந்த பிரதேசமாக துணுக்காய் விளங்குகின்றது.

இங்குள்ள சில கிராமங்களில் மக்கள் மீளக் குடியமர்ந்த போதிலும் போக்குவரத்து நெருக்கடி நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் **முருகேசு வேதாரணியம்**

[ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்]

கடந்த 03.12.2013 செவ்வாய்க்கிழமை
இறைபதம் அடைந்த
எமது அன்புத் தந்தையின்
அந்தியேட்டிக் கிரியை இன்று (02.01.2014)
வியாழக்கிழமை எமது இல்லத்தில்
காலை 6.00 மணியளவில் நடைபெற
உள்ளது. அதனைத் தொடர்ந்து
மதியம் 12.00 மணிக்கு இடம்பெறும்
சபிண்டீகரணத்திலும்
மதியபோசனத்திலும் கலந்து
கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

ரதி மகால்
கரவெட்டி.

குடும்பத்தினர்.

(43035) (7.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**குணதாசன் எலிசபேத் (ராணி)**

தோற்றம்
26.01.1943

மறைவு
02.01.2013

"ஆண்டவருக்குள் இறப்பவர்
பேறு பெற்றோர்
ஏனெனில் அவர்கள் செய்த நன்மையே
அவர்களோடு கூடவரும்"

"அம்மா உலகினில் உள்ளவரை
உங்கள் நினைவினில் நாங்கள்."

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
கச்சாய் வீதி, கொடிகாமம்.

(41912) (7.6.3)

## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பு விநாயகமூர்த்தி



(விடத்தற்பளை
சம்பாவெளி வீரகத்தி விநாயகர்ஆலய
முகாமையாளரும், சம்மேளன தலைவரும்,
சமுர்த்தி மகாசங்க உறுப்பினரும்,
கூட்டுறவுச் சங்க உறுப்பினரும்)

விடத்தற்பளை மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு விநாயகமூர்த்தி நேற்று (01.01.2014) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2014) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விடத்தற்பளை,
மிருசுவில்.

தகவல் :
குடும்பத்தினர்.

(33060)(7.6.3)

### திருமதி இராஜேஸ்வரி (ஈஸ்வரி) தாமோதரம்பிள்ளை



யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும், 4ஆம் வட்டாரம், பிரதான வீதி, முள்ளியவளையை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி இராஜேஸ்வரி (ஈஸ்வரி) தாமோதரம்பிள்ளை நேற்று (01.01.2014) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - பூபதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், தமோதரம்பிள்ளை (ஓய்வுபெற்ற முகாமையாளர், மக்கள் வங்கி, முல்லைத்தீவு) அவர்களின் பாசமிகு மனைவியும், பூபாலசிங்கம் (Ram poobal) அவர்களின் அன்புச் சகோதரியும், ஜெகதீஸ்வரி (பபா), தயாபரன், சுதாகரன் (CEO, ETM(Pvt)Ltd) ஆகியோரின் அன்புத் தாயும், உதயசீலன், தேவிகா, ஜெயப்பிரீத்தா (Finance Manager, Euroville) ஆகியோரின் மாமியும்,விஜுராஜ் (AirCom Travel,Colombo) தர்சிகா (MBSL), கபீஸ்வரன் (Commercial Insurance), டிபன்ராஜ், சாருராஜ் ஆகியோரின் அன்புப் போர்த்தியும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் பரமேஸ்வரி, தியாகேஸ்வரி, சிவசுப்பிரமணியம் (கனடா), காலஞ்சென்ற புஸ்பவதி மற்றும் ஆனந்த லட்சுமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2014) வியாழக் கிழமை, பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது முள்ளியவளை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாவற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தமோதரம்பிள்ளையும்
குடும்பத்தினரும்.
077 220 9595/ 021 320 1299

(சி.10903) (45.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



அம்பகர் லேன் கொக்குவில் கிழக்கை
வசிப்பிடமாகவும் தற்காலிகமாக பிரான்சை
வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

### செல்லத்துரை பொன்னுத்துரை

(முன்னாள் சாரதி, இலங்கை
போக்குவரத்து சபை)
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்
களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது
ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

(41866)(4.6.3)


தம்பு அருளானந்தம்
சம்பந்தி குடும்பத்தினர்
(முன்னாள் ஊழியர்-C.T.B)

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் கருணை இல்லத்தின் ஸ்தாபகரும்
உரும்பிராய் கற்பக விநாயகர் மகளிர் சி.க.கூ.
சங்கத்தின் பூர்த்தி செய்யப்படாத மண்டபத்தைக் கட்டி
முடிப்பதற்குப் பேருதவி புரிந்த கொடை வள்ளலுமாகிய

### பொன்.தெய்வேந்திரம்

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி
கேட்டு துயர் அடைகின்றோம். அன்னாரது
பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன்
அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
உரும்பிராய் கற்பக விநாயகர் ம.சி.க.கூ. சங்க
நிர்வாகிகளும், அங்கத்தவர்களும்,
பலாலி வீதி, உரும்பிராய்.



(C/10899)(7.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி கனகரத்தினம்



விக்கினேஸ்வராவீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் கணேஸ்வரம் அளவெட்டியை வசிப்பிடமாவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கனகரத்தினம் 31.12.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னர் -சிதம்பரம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், சதீஸ்குமார் (கொலன்ட்), சத்திய சீலன் (ஹொலன்ட்), சபீனா (லண்டன்), சஜிதா ஆகியோரின் பாசமிகு தாயும், பிரதீபா, செல்வகுமார், அகிலன் ஆகி யோரின் அன்பு மாமியும், தீப்திகா, ஷகிர்ஷன், ரக்ஷன்யா அகியோரின் பாசமிகு பேர்த்தியும், சந்திரகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் யோகராணி, பவானி(கொலன்ட்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2014) வியாழக்கிழமை பி.ப.2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அளவெட்டி மல்லாகம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கணேஸ்வரம்,
அளவெட்டி.

(41867) (4.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி (சிந்தாமணி) நடராசா



நாரந்தனை மத்தி, ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும் திருநாவற்குளம் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி (சிந்தாமணி) நடராசா 31.12.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா- தெய்வானைபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா- பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான மகேஸ்வரி, முத்துராசா, பூமணி மற்றும் வடிவேலு (ராசு), ருக்குமணி, தாரணதேவி, காலஞ் சென்றவர்களான மகாலெட்சுமி, சிவசுப்பிரமணியம் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும், தர்மலெட்சுமி (ஜேர்மனி), காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் விஜயரெட்ணம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற விஜயலெட்சுமி மற்றும் சத்திய லெட்சுமி (சாந்தி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானசேகரம், புவனேஸ்வரி, சந்திரலீலா, நிமலநாதன் ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, ஆச்சிமுத்து, சுப்பிர மணியம், சீவரட்ணம், கருணை நாயகி, சேனாதிராசா மற்றும் பாக்கியவதி, காலஞ்சென்ற துரை ராசாமற்றும் கணேசலிங்கம் காலஞ்சென்ற ஜெயராணி மற்றும் சிவநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சோபனா, தர்சன்(கண்ணன்), விஜித்தரன், வினோத்தரன், நிவாகன், கஜேந்தினி, கார்த்திகா, சிந்துஜா, நிந்துஜா, சுஜனா, சுலக்சன், சுதர்சன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், வேணுகா, யானுகா, திவியன், கிருஷ்டிகா, ஜனனி, காவியா, சிவா, ஜனுஷா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.01.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு திருநாவற்குளம் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருநாவற்குளம்,
வவுனியா.

(43576) (4.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே. 077 892 9901, [illegible] 205 2337

## இடமாற்றக் கடிதங்கள் அனுப்பி வைப்பு

தென்மராட்சி, ஜன.2

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ள 24 ஆசிரியர்களுக்கான பாடசாலைகள் குறிப்பிட்ட இடமாற்றக் கடிதங்கள் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வலயக் கல்வி அலுவலகத்தினால் அனுப்பப் பட்டுள்ளன.

வன்னிப் பிரதேசம், வடமராட்சி , வலிகாமம், தீவகம் போன்ற கல்வி வலயங்களிலிருந்து வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கே வலயத்தினால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இதேவேளை, தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று ஆசிரியர்களும் ஏனைய வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இடமாற்றங்கள் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருமென குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-9)

## பதிற் கடமையாற்ற நூலகர் இல்லை

வடமராட்சி, ஜன.2

கட்டைவேலி உப அலுவலக அல்வாய் பொது நூல் நிலையத்தில் நூலகருக்கான பதில் கடமை நிறைவேற்றுநர் ஒருவர் இன்மையால் வாசகர்கள் சில சேவைகளைப் பெறமுடியாதிருப்பதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையம் அரச விடுமுறை தினங்களில் திறக்கப்படுவதில்லை. கடமையில் உள்ள நூலகர் விடுமுறையில் சென்றால் புத்தகங்களை இரவல் பெற முடியாதிருப்பதுடன், பழைய பத்திரிகைகளை தேவைக்கு ஏற்ப பார்க்கவோ, வாசிக்கவோ முடியாத நிலைமை இருப்பதாக வாசகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த நிலையைப் போக்க பதில் கடமை நிறைவேற்றுநர் ஒருவரை நியமிப்பதுடன், அரச விடுமுறை தினங்களிலும் நூலகத்தை திறக்குமாறும் வாசகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(ந-173)

### கடமைகளைப் பொறுப்பேற்றனர்

சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகவும் நீதி மன்ற நீதிவானாகவும் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்று புதன் கிழமை பொறுப் பேற்றுக் கொண்டார்.

சாவகச்சேரி நீதிமன்றில் கடமையாற்றிய செ.லெனின்குமார் ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கும், பருத்தித்துறை நீதிமன்றில் கடமையாற்றிய திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சாவகச்சேரி நீதிமன்றுக்கும், நீதிச்சேவைகள் ஆணைக்குழுவினால் இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்தே நேற்று இவர் கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளார். சாவகச்சேரி நீதிமன்ற வரலாற்றில் முதலாவது பெண் மாவட்ட நீதிவான் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-9)

### திருவாசக முற்றோதல்

கோண்டாவில் ரயில் நிலையம் முன்பாகவுள்ள சிவன் அம்மன் கோயிலில்நாளைவெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் "திருவாசக முற்றோதல்" இடம் பெறவுள்ளது. ஆர்வலர்கள் முற்றோதலில் பங்கு பற்றி பயன பெறுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஓ)

## மரண அறிவித்தல்

### திருமதி தனலட்சுமி (லலிதா)பாக்கியராஜா



பழம் றோட், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு காந்திஜீ வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி பாக்கியராஜா 31.12.2013 செவ்வாய்க்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை-நாகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் -பாக்கியம் தம்பதியரின் மூத்த மருமகளும், பாக்கியராஜாவின் (ஆட்டோ) அன்பு மனைவியும், சஜீத்தா, ஜனுசன் (குவைத்), த்ரணிகா (2014-கணித பிரிவு யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுமனின் (லேத்) அன்பு மாமி யாரும், சானுசனின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ்சென்ற உதயசூரியன் மற்றும் தவப்புதல்வன் (சுகாதார அமைச்சு, வடமாகாணம்), விவேகானந்தன், விஜேந்திரன் (நியூலாந்து), வெற்றிச்செல்வி, வேணி சுபாஜினி ஆகியோரின் அன்பு சகோதரியும் கருணாவதி, பவானி (ஜேர்மனி), மணிநாதன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காந்திஜீ வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(41868)(7.6.3)

தகவல் :
பாக்கியராஜா
(கணவர்)

## மரண அறிவித்தல்



### திருமதி பரமேஸ்வரி கணேசபிள்ளை

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும், வவுனியா, வெளிக்குளத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி கணேசபிள்ளை 30.12.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பையா கணேசபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2014) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வெளிக்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்


18/10, பிள்ளையார் கோயில் வீதி,
வெளிக்குளம்,
வவுனியா.

(43574) (4.6.3)

தகவல்:
பிள்ளைகள்
தொ.பே. 024 222 0245

## மரண அறிவித்தல்

### கந்தையா கல்யாணசுந்தரம் (மாணிக்கம்)



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் திருவையாறை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கல்யாணசுந்தரம் (மாணிக்கம்) 31.12.2013 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா-நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், பரிமளகாந்தியின் அன்புக்கணவரும், றமேஸ்கண்ணா, சுபாஸ்கண்ணா, றஞ்சித்கண்ணா ஆகியோரின் அன்புத் தந்தையும், அபிரா, அபிஷன், அஜினன் ஆகியோரின் பாசமிகு பேரனும், நிவேதிகாவின் அன்பு மாமனாரும், பாலாம்பிகை, காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் சிவஞானம், காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் சோமசுந்தரம், தையல்நாயகி, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இரத்தினபூபதி, சிவத்திரை மற்றும் இராஜேஸ்வரன், மகேஸ்வரன், இராசலக்சுமி, புஸ்பலீலா, கமலேஸ்வரன், விக்கினேஸ்வரன், புஸ்பகாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2014) வியாழக்கிழமை கோப்பாய் வடக்கு, கிருஷ்ணர் கோயிலடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப. 11.30 மணியளவில் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(41863) (4.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு பொதி செய்வதற்கு ஆண்கள் தேவை. நாள் ஒன்றிற்கு ரூபா 400/= யும் மேலதிகமாக ரூபா 100/= உம் வழங்கப்படும். வயது 18 தொடக்கம் 23 வரை.

வேலை நேரம் :
காலை 8.00 மணி தொடக்கம்
மாலை 5.30 மணி வரை.

தொடர்பு : 11-A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3857 (41966) (7.6.3)

## வீடு விற்பனைக்கு

கம்பர்மலை பாரதி வாசிகசாலையிலிருந்து மேற்கே 100 மீற்றர் தூரத்தில், றோட்டிற்கு தெற்கே 1.08 பரப்பளவு கொண்ட காணியில் புதிய வீடு விற்பனைக்குண்டு. நான்கு பக்க மும் சுற்றுமதில் உண்டு. தரகர் தேவையில்லை. (43039)(7.6.3)

தொடர்பு : 077 500 7121, 077 853 3528

## காணி விற்பனைக்கு

பாசையூர் கடற்கரை வீதியில் புனித அந்தோனியார் சந்திக்கும் கொழும்புத்துறை முதியோர் சந்திக்கும் இடையில் இலக்கம் 195 இல் உள்ள 2 ¾ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (41871)(10.6)

தொடர்பு: 0061296882848 / 0213006601
Email: augustine.ajmh@bigpond.com

## காணி விற்பனைக்கு

இல. 10, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத் துறை பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. சென் ஜோன்ஸ் கல்லூரி, கச்சேரி ஆகிய இடங்களில் இருந்து 2 km தூரத்துக்குறப்பட்டது.

தொடர்பு: 0766119691, 0776213966, 021 3214316 (41872)(10.6)

## 2014ஆம் ஆண்டிற்கான வாகன சுத்திகரிப்பு சேவை வழங்கல்

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் சேவையில் ஈடுபட்டுள்ள வாகனங்களிற்கான சுத்திகரிப்பு சேவைக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

1. 2014ஆம் ஆண்டிற்கான சுத்திகரிப்பு சேவைக்கான இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 03.01.2014 தொடக்கம் 10.01.2014 வரை கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும்.
2. அரசாங்க ஒப்பந்தத்தை செய்ய முடியாதவாறு தடை செய்யப்பட்டவர்களிற்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களிற்கோ கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
3. விண்ணப்பிக்கத் தகுதியானோர் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக 1000 ரூபாவும் மீளளிக்கக் கூடிய வைப்புத் தொகையாக 30000 ரூபாவையும் எமது பணிமனையில் செலுத்தி கேள்வி ஆவணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். கேள்விப் பத்திரங்களை 13.01.2014ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தலைவர், கேள்விச் சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்விப் பெட்டியிலோ இட முடியும். அதே திகதியில் பிற்பகல் 3 மணிக்கு திறக்கப்படும்.
4. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ நேரில் சமுகமளிக்கலாம்.
5. கேள்வி தொடர்பான கேள்விச் சபையின் தீர்மானமே இறுதியானதாகும்.
6. மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Dr. ப.கார்த்திகேயன்
தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு
பி.சு.சே.ப.பணிமனை, கிளிநொச்சி. (சி/10867)(7.6.3)

## மரண அறிவித்தல்



### திருமதி ராசாத்தி பரமநாதன்

கீரிமலை வீதி மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ராசாத்தி பரமநாதன் 31.12.2013 செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகர் (கன்னர்)- லக்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், பரமநாதனின் ஆருயிர் மனைவியும், தேவகுமார், சிவகுமாரன், நிலா, பாலகுமாரன், நந்தகுமார், கௌசலா ஆகியோரின் ஆருயிர் தாயாரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், செல்லக்குட்டி மற்றும் சின்னத்துரை, அப்புத்துரை, அப்பையா, சுப்பிரமணியம் ஆகியோரின் அருமை சகோதரியும், புஸ்பாவதி, கலைவாணி, பத்மநாதன், ஜெயக்குமாரி, தாரணி, ரவி, பிரகலாதன், கபில்ராஜ், காலஞ்சென்ற சறோஜினிதேவி ஆகியோரின் அருமை மாமியாரும் மகாதேவன், பாக்கியம் காலஞ்சென்றவர்களான வாசுதேவன், வரதன் ஆகியோரின் அருமை மைத்துனியும் கஸ்தூரி, பவித்திரி, டினோத் குமார், சஞ்சய்குமார், கேதாயினி, விதுசினி, ஜனகன், ஜகிதா, நிதுசன், சதுசன், கோபிநாத், கிருஷானி, தேவகன், அபிசேகன், ஆதனா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 05.01.2014 ஞாயிற்றுக்கிழமை St John's Dixie Cemetery & Crematorium, 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada எனும் இடத்தில் 11.00 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
முருகர் சின்னத்துரை([illegible])- 077[illegible]
பரமநாதன் தேவகுமார்(மகன்)- 0014169888242

கீரிமலை வீதி, மாவிட்டபுரம். (41873)(5.6)

# அரசியல் பழிவாங்கலால் புறக்கணிக்கப்பட்டுள்ளோம்

## நிரந்தர நியமனம் கிடைக்காத தொண்டராசிரியர்கள் குமுறல்

முல்லைத்தீவு, ஜன. 2

உரிய தகுதிகள் யாவும் இருந்தும் தாம் நிரந்தர நியமனம் வழங்கப்படாது புறக்கணிக்கப்பட்டுள்ளதாக நிரந்தர நியமனம் கிடைக்காத முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டராசிரியர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் பொருட்டு நடைபெற்ற நேர்முகத் தேர்வின் போது தகுதி அடிப்படையில் தாம் தெரிவு செய்யப்பட்ட போதிலும், அரசியல் பழிவாங்கல் காரணமாகத் தமக்கு நிரந்தர நிய மனம் வழங்கப்படவில்லையெனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ்வாறு நிரந்தர நிய மனம் வழங்கப்படாத சிலர் 12 வருடங்களுக்கும் மேலாகத் தொண்டராசிரியர்களாக வேதனம் எதுவும்பெறாதுகடமையாற்றியுள்ளனர். நேர்முகத் தேர்வின் போது இவர்களிலும் பார்க்கக் குறைந்த நிலையில் இருந்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டதனால் தாம் நியாய மற்ற வகையில் புறக்கணிக்கப்பட்டதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்களில் சிலர் தமது பரிதாப நிலை தொடர்பாக புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட வடமாகாண சபையின் கல்வியமைச்சருக்குத் தெரியப்படுத்தியதாகவும் தெரிவிக்கின்றனர். எனவே பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கும் தமக்கு ஏனையவர்களைப் போன்று நிரந்தர நிய மனம்வழங்கித் தமது வாழ்வில் ஒளியேற்று மாறு இவர்கள் வேண்டுகோள் விடுத் துள்ளனர். (க-500)

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### சேனாதிராஜா தயாளன்
(மின்சார சபை-முன்னாள் பணியாளர்)

மலர்வு 10.05.1960
மறைவு 28.12.2008

ஆண்டுகள் ஐந்து ஓடிப்போனது
ஆறாத துயர் மட்டும்
இன்னும் ஓய்ந்ததில்லை
மாறாத பந்தமும்
நீங்காத நினைவுகளும்
அலை கொண்டு போனாலும்
அப்பா எங்களோடுதான்
வாழ்ந்திடுவாய்
வருடங்கள் பலவானாலும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

என்றும் நினைவுடன்
பிள்ளைகள்

(சி/10965)(7.6.3)

## முல்லையில் நத்தார் தினம்

முல்லைத்தீவு, டிசெ.31

முல்லைத்தீவு மாவட்டத்தில் நத்தார் தின நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

இராணுவ நிலைகள், பொலிஸ் நிலையங்கள், வீடுகள், பிர தான சந்திகள் ஆகிய இடங்களில் மரக்கிளைகளால் ஆக்கப்பட்ட சோடனைகளுக்கு மின் குமிழ்கள் பொருத்தப்பட்டு அழகாகக் காட்சியளித்தன.

மேலும் கிறிஸ்தவ மக்கள் கடந்த வருடங்களிலும் பார்க்க இந்த வருடம் நத்தார் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## உணவகம் வாடகைக்கு விடப்படும்

கிளிநொச்சி A9வீதி, இரணைமடுச் சந்தியில் உள்ள 30 அடி அகலமும் 60 அடி நீளமும் கொண்ட, குளியல் அறை, கழிப்பறை வசதிகளுடன் மேலதிக வசதிகளும் செய்து கொள்ளக்கூடிய பழைய மாத்தறை ஹோட்டல் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு : 021 228 5520, 077 660 4294 (29723) (7.6.3)

## அறிவித்தல்
### வடமராட்சி மணல் ஏற்றும் வாகன உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் மீள்பரிசீலனை செய்தல்

எமது சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான மணல் விநியோகம் தொடர்பாக யாழ் அரச அதிபரின் கூற்றுக்கிணங்க எமது சங்கத்திற்குள் பதிவு செய்யப்பட்ட வாகனங்களை மீள் ஆய்வு செய்யவுள்ளோம். அவையாவன. 1. உழவு இயந்திரங்கள்
2. கன்ரர் ரக வாகனங்கள் (2 ¼ கீப்புக்குள்பட்டவை)

மேற்குறித்த வாகனத்தை வைத்திருக்கும் அங்கத்தவர்கள் உடனடியாக சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். பாரவூர்திகள் பதிவு செய்யப்படமாட்டா என்பதையும் அறியத் தருகின்றோம்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி : (C/10398) (7.6.3)
தர்மிகா கட்டடப் பொருள் விற்பனை நிலையம்,
திக்கம் றோட், அல்வாய்.
நிர்வாகம்.

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Navalar road junction , Brown road , Jaffna.
Web : www.physicsocean.com Email : info@physicsocean.com

A/L 2016
TECHNOLOGY STREAM
தொழில்நுட்பவியல் துறை

துறைசார் வளவாளர்களால் கற்பிக்கப்படும்
நேரம் : சனி, ஞாயிறு - 2.30-5.30 P.M
ஆரம்பம்: 05.01.2014

SCIENCE OF TECHNOLOGY
தொழில்நுட்பத்துக்கான விஞ்ஞானம்
BIO TECHNOLOGY
உயிர்முறை தொழில்நுட்பவியல்
ENGINEERING TECHNOLOGY
பொறியியற் தொழில்நுட்பவியல்

மேலதிக விவரம் அலுவலகத்தில். (41885)(10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதியின்றி பயணித்த ரயில்; அறிக்கை கையளிப்பு

கொழும்பு.ஜன.2

சாரதியின்றி பயணித்த ரயில் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை போக்குவரத்து அமைச்சர் குமார்வெல்கமவிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது.

ரயிலின் சாரதியும் அதன் உதவியாளருமே இந்த சம்ப வத்திற்கு பொறுப்பு கூறவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த ரயிலின் சாரதி மற்றும் உதவியாளர் தொடர்பில் ரயில்வே திணைக்களம் ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

## எங்கள் வாக்கு - எங்கள் பலம் புத்தாண்டு மந்திரமாகட்டும்

### *மனோ கணேசன் தெரிவிப்பு*

கொழும்பு.ஜன.2

எங்கள் வாக்கு - எங்கள் பலம் என்பது எங்கள் புத்தாண்டு மந்திரமாகவும், அதிகபட்ச வாக்களிப்பு என்பது எங்கள் புத்தாண்டு இலக்காகவும் இருக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

மனோ கணேசன் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிறக்கும் புத்தாண்டு தலை நகரத் தமிழருக்கு புதிய கதவுகளை திறக்கின்றது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் எங்கள் இனத்தின் அரசியல் பலத்தை உறுதிப்படுத்திக் காட்டும் வாய்ப்பு இன்னமும் சில தினங்களில் கலைக்கப்படவிருக்கும் மேல்மாகாண சபைக்கான தேர்தலின் போது எமக்கு கிடைக்கவிருக்கின்றது.

இன்று எங்களுக்கு எஞ்சியுள்ள ஒரே ஆயுதம் வாக்குச்சீட்டுஎன்பதை நாம் ஒவ் வொருவரும் உணர்ந்து, வடமாகாணத்தில் தமிழ் மக்கள் வாக்களித்ததைப் போன்று, மத்திய மாகாணத்தில் தமிழ் மக்கள் வாக்களித்ததைபோன்று, எமது ஜனநாயக மக்கள் முன்னணியின் ஏணிச் சின்னத்துக்கு அணிதிரண்டு வாக்களித்து எங்கள் அரசியல் பலத்தை மேல்மாகாணத்தில் எடுத்துக்காட்ட உறுதி பூணுவோம்.

புதிய ஆண்டில் எமது மக்கள் ஏனைய சகோதர இனத்தவர்களுக்கு சமானமாக வாழ்ந்து காட்டத் தயாராக வேண்டும். அதற்கு உரிய அரசியல் அந்தஸ்தை நாம் பெற வேண்டும்.

எனவே தலைநகர மாகாணத்தில் எங்கள் இன வளர்ச்சியின், எழுச்சியின், உயர்ச்சியின் அடையாளமாக திகழும் ஏணியில் ஏறி நிற்பதற்கு கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்ட தமிழர்கள் தயாராக வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பால்மா களஞ்சியசாலைகளை பதிவு செய்ய நடவடிக்கை

கொழும்பு.ஜன.2

பால்மா களஞ்சியசாலைகள், சேகரிப்பு மற்றும் விநியோக நிலையங்கள் என்பன நுகர்வோர் அதிகார சபையில் பதிவு செய்யப்பட வேண்டும். நேற்று முதல் இந்த பதிவு நடவடிக்கை கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள் நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்விடயம் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி பதிவு செய்யப்படாத எந்தவொரு இடத்திலும் பால் மா வகைகளை களஞ்சியப்படுத்திவைக்க முடியாது. (எ)

## மரண அறிவித்தல்

### தியாகராசா பற்குணமாணிக்கம்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா பற்குணமாணிக்கம் நேற்று முன் தினம் (30.12.2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், நீர்வேலியைச் சேர்ந்த லக்சுமிதேவியின் அன்புக் கணவரும், தக்சாயினியின் பாசமிகு தந்தையும், அருள்மாணிக்கம், உருத்திரமணிக்கம், வசந்தமல்லிகா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (05.01.2014) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: 0044 2088668182
இல. 43, கூழாவடி ஒழுங்கை, ஆனைக்கோட்டை. 021 225 5616

தகவல்: தி. அருள்மாணிக்கம் (சகோதரன்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 15.11.1955



மறைவு 03.12.2013

### வல்லிபுரம் நற்குணம்

*நற்குணம் என்னும் நாமத்துக்கேற்ப*
*நற்பண்புகள் நிறைந்த நாயகனே*
*நீ உன் நாமத்துக்கேற்ப எம்மை*
*நல்வழிகாட்டிய நன்னடத்தை*
*உடையவனே*
*நீ எம்மைவிட்டுச் சென்றாலும்-நாம்*
*உன் நாமத்துக்கேற்ப*
*நடப்போம் ஐயா!*

அன்னாரின் 31ஆம் நாள் கிரியைகள் இன்று (02.01.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மருமகன் - சாந்தரூபன் (ராந்தன்)
உமா பேரப்பிள்ளை.

எலிஓடை, சமரபாகு,
வல்வெட்டித்துறை.

(43036) (7.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி ஜானகி சொர்க்கலிங்கம் (சொக்கன்)



நுணாவில் கல்வயல் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜானகி சொர்க்கலிங்கம் நேற்று (01.01.2014) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சொர்க்கலிங்கத்தின் அன்பு மனைவியும், சசிந்திரன், செந்தில் நாதன், காலகரன், கஜனான், குமரேஸ்வரி, துஷ்யந்தி, ஜெயப்பிரதா, கோமதி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2014) வியாழக்கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரது இல் லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் கல்வயல் வீதி,
சாவகச்சேரி.

(33061) (10)

தகவல்:
குடும்பத்தினர்.

## மனித உரிமை மீறல் 7,765 முறைப்பாடுகள்

கடந்த வருடம் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் 7,765 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

இவற்றில் அதிகளவிலான முறைப்பாடுகள் பொலிஸார் தொடர்பில் பதிவாகியுள்ளதாக ஆணையாளர் கலாநிதி பிரதீப மஹானாமஹேவா தெரிவித்தார்.

அத்துடன் கல்வி அமைச்சு மற்றும் அரச நிறுவனங்கள் குறித்தும் அதிகளவிலான முறைப்பாடுகள் பதி வாகியுள்ளன.

மனித உரிமைகள் மீறப்படுகின்றமை தொடர்பில் 1996 என்ற தொலைபேசி இலக் கத்தின் ஊடாக பொதுமக்கள் முறைப்பாடுகளை முன் வைக்க முடியும்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொது மக்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் எனவும், அதற்கான தீர்வுகள் விரைவில் வழங்கப்படும் எனவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (எ)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா இரத்தினம்



பத்தமேனி அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா இரத்தினம் நேற்று (01.01. 2014) புதன்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-லட் சுமி தம்பதியரின் அன்பு மகளும், இரத்தினத்தின் அன்பு மனைவியும், நடராசா, சரஸ்வதி, சியாமணிதேவி, நிர்மலாதேவி (இந்தியா), சிறிதரன் (லண்டன்) ஆகி யோரின் அன்புத் தாயும், வசந்தாதேவி, சிவஞான லிங்கம், விஜய நாதன், சண்முகலிங்கம், சூரியபாலன் (இந்தியா) ஆகியோரின் மாமியும், நிறூஜா, கௌசிகன், அமலராஜா, நிரோஷன், சுகிர்தன், சரண்ஜா, நிரோஷகா, நிதர்சன், கவிராஜ் ஆகியோரின் பேர்த்தியும், பிரகீர்த்தின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02/01/2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்: பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கனகசபை தனபாலசிங்கம்



(ஓய்வுபெற்ற கட்டட வரைவல்லுனரும், தொழில்நுட்ப உத்தியோகத்தரும், நீர்ப்பாசனத் திணைக்களம்)

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் மாதகலை வதிவிட மாகவும், தற்போது லண்டனில் வசித்தவருமாகிய கனகசபை தனபாலசிங்கம் கடந்த (24.12.2013) லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை (மலாயன் பென்சனர்)- சீனிக்குட்டி தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சேதுபதி (ராணி) யினி அன்புகி கணவரும், நிஷற்தா, துஷந்தா, தர்ஷன், நிரோஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் (சாத்திரியார்), கமலாம்பிகை-நகமித்திரன் மற்றும் புஸ்ப லீலாவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை)-மயில்வாகனம், சுந்தர காந்தன் (ஓய்வுபெற்ற உப அதிபர்) ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2014) வியாழக்கிழமை பிற்பகல் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"இந்திரகோட்டம்" கோயில் வளவு, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
0044 7776573787, 021 3210064, 021 223 0456

தகவல்:
யாழினி பாலேந்திரன்

## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் யோகேஸ்வரன்



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஏழாலைதெற்கு களபாவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் யோகேஸ்வரன் கடந்த (30.12.2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர் களான நடராசா- அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமக னும், நிமலாம்பிகையின் அன்புக் கணவரும், சுசீலாதேவி (ஏழாலை கிழக்கு), பரமேஸ்வரி (ஜேர்மனி), சிவஞானசுந்தரம் (பிரான்ஸ்), சோமசுந்தரம் (பிரான்ஸ்), யோகாம்பிகை (பிரான்ஸ்), சறோஜினிதேவி (ஏழாலை மேற்கு), தனராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயந்தினி, ஜெனீவன் (ACX PHONE SHOP), ஜெகந்தன், ஜெயாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுறேந்திரராஜா (சுறேன்- ACX PHONE SHOPE), கஜானா ஆகியோரின் அன்பு மாமனும், அபிஷாயினி, ஜொயல் ஆகேஷ், மிஷேல், ஆஜோஜனா, கர்னிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (31/12/2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காடாகடம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

களபாவோடை, ஏழாலை. 021 205 9503

தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் தியாகரமூர்த்தி (மண்டைதீவு)



மண்டைதீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தியாகரமூர்த்தி 30.12.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சின்னம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-பத்மாவதி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மதுரநாயகியின் அன்புக் கணவரும், சுஜாதா (Swiss), கவிதா, தேவகி ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலாஜி (Swiss), பிரபாகரன் (பிரபன்) ஆகியோரின் மாமனும், அபிநயா (Swiss), ஆராதனன் (Swiss) ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்றவர்களான தங்கச்சியம்மா, திலகவதி, திருப்பதி, தில்லைவனம், சித்திரம், செல்வம் மற்றும் சின்னமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற கனகசபை, சிவசம்பு, பரமானந்தம் மற்றும் கந்தசாமி காலஞ்சென்ற பரமலிங்கம், யோகாம்பிகை மற்றும் பஞ்சாட்சரம், பாக்கியலட்சுமி, கணேசமூர்த்தி, லட்சுமிதேவி ஆகியோரின் மைத்துனரும், சுதானந்தராஜா, தயாளன் ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2014) வியாழக்கிழமை கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலட்டி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு.

(41918) (10)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடமாகாணசபையை முறையாக இயங்கவைப்பது அரசின் கடமை

## புத்தாண்டு வாழ்த்தில் வேலணை வேணியன் தெரிவிப்பு

புத்தாண்டு பிறந்த பின்னரும் கூட எமது நாட்டு மக்கள் மத்தியில் சாந்தி, சமாதானம், ஒற்றுமை, சகோதரத்துவம் நிலவ வேண்டும் என்பதுதான் தமிழ் பேசும் அனைத்து மக்களினதும் பிரார்த்தனையாக அமைந்துள்ளது.

இவ்வாறு கொழும்பு மாநகர சபையின் ஜனநாயக மக்கள் முன்னணி உறுப்பினர் வேலணை வேணியன் தமது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வடக்கு மக்களினது விடிவுக்காக மனிதாபிமான அடிப்படையில் வடமாகாண சபையை உகந்த முறையில் இயங்க வைப்பது அரசின் தலையாய கடமை என்பதை மறந்துவிட முடியாது. இலட்சக் கணக்கான உறவுகளை இழந்த நிலையிலும், காணாமற்போன உறவுகளை எண்ணியும், சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களின் பிரிவாலும் துயருறும் மக்களுக்கு உதவ அரசு முன்வரவேண்டும்.

வடமாகாணசபை நடவடிக்கைகள் யாவும் அரசின் போதிய நிதியுதவிகளுடனும், வெளி நாடுகளால் தருவிக்கப்பட்ட எமது நாட்டு அபிவிருத்திக்குரிய முதலீட்டு உதவியுடனும் அங்குள்ள மக்கள் கடந்த காலங்களில் பட்ட துன்ப - துயரங்களை மறந்து வாழ இப்புத்தாண்டில்வழிபிறக்கவேண்டும். தமிழ் பேசும் மக்கள், அனைத்து இன மக்களுடனும் - அனைத்து மத மக்களுடனும் - அனைத்து மொழி பேசும் மக்களுடனும் ஒற்றுமையுடன் வாழவே விரும்புகின்றார்கள். அவர்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழ இந்த நாளில் இறை நம்பிக்கையுடன் பிரார்த்தித்து நிற்கின்றார்கள் - என்றுள்ளது.

### கட்சி தாவல் ஆரம்பம்

தென் மற்றும் மேல் மாகாண சபைகள் ஜனவரி 12 ஆம் திகதி கலைக்கப்பட்டு அவற்றுக்கு மார்ச் இறுதியில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தற்போதிலிருந்தே கட்சி தாவும் படலம் ஆரம்பமாகியுள்ளது.

இதன் முதற்கட்டமாக தென் மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் கிரிஷாந்த புஷ்பகு மார (ரத்தரன்) அக்கட்சியிலிருந்து விலகி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் நேற்று இணைந்துகொண்டுள்ளார்.

மாகாண சபைத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினராக போட்டியிடும் நோக்கிலேயே அவர் ஐ.ம.சு.மு.வில் இணைந்து கொண்டதாக கூறப்படுகின்றது. (ஐ-சி)

# சுகாதார அதிகாரி மீது தாக்குதல் முயற்சி

யாழ்ப்பாணம்,ஜன.02

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பொது சுகாதார பரிசோதகரது வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாதோர் அவரைத் தாக்க முற்பட்டுள்ளனர். அது சாத்தியமாகாததால் அவர் பயன்படுத்தும் அரச உடைமையான மோட்டார் சைக்கிளையும், வீட்டு மின் குமிழையும் அடித்து நொருக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

கொக்குவில் கிழக்கில் நேற்று முன்தினம் இரவு 9.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட அதிகாரி தெரிவித்ததாவது.

வீட்டின் முன்பாக நான் அமர்ந்திருந்த போது இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வந்து நின்றன. அதில் வந்த 5 பேரில் 3 பேர் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை.

ஒருவர் வெளிவாசலில் வந்து நின்று என்னிடம் ஒரு விடயம் கதைக்க வேண்டும் என்றும் வெளியே வருமாறு

> "மோட்டார் சைக்கிளையும், வீட்டு மின் குமிழையும் அடித்து நொருக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

அழைத்தார். நான் அங்கு செல்ல தாமதமாகியதால் வெளிவாசலில் உள்ள மின் குமிழ்களை அடித்து உடைத்தனர். இதனால் நான் வீட்டுக்குள் ஓடிச் சென்று கதவைப்பூட்டி விட்டேன். கதவு வரை மூன்று பேர் வந்தனர். வீட்டில் இருந்தவர்கள் சத்தமிட்டதனால் அவர்கள் வீட்டுக்கு வெளியே நின்றிருந்த அலுவலக மோட்டார் சைக்கிளை அடித்துச் சேதமாக்கி விட்டுத் தப்பிச் சென்று விட்டனர். இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளேன் - என்றார்.

சம்பவம் தொடர்பில் கொக்குவில் பொற்பதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

# புது வருடத்தில் 10 ஆயிரம் தொழில்வாய்ப்புகளை வழங்க இலங்கை முதலீட்டுச்சபை நடவடிக்கை

2014 ஆம் ஆண்டில் இலங்கையில் 10ஆயிரம் தொழில் வாய்ப்புகளை உருவாக்க இலங்கை முதலீட்டுச்சபை தீர்மானித்துள்ளதாக அச்சபையின் தலைவர் கலாநிதி லக்ஷ்மண் ஜயவீர தெரிவித்திருக்கிறார்.

தற்சமயம் இலங்கை முதலீட்டுச்சபையின் கீழ் நடந்து வரும் திட்டங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் மூலம் இந்தத் தொழில்வாய்ப்புகளை உருவாக்கமுடியுமென அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

இந்த வருடத்தில் முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் மூலம் சுமார் 8.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஏற்றுமதி வருமானமாகப் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் கலாநிதி லக்ஷ்மன் ஜயவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இராணுவ

நேர் மோதியதில் வவுனியாவைச் சேர்ந்த ஓட்டோச் சாரதியான பா.லனாதீபன் (வயது-31) சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இராணுவ ட்ரக் வண்டியில் வந்த இராணுவத்தினர் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வவுனியா ஹொரவப்பொத்தான வீதி அம்பாள் கபே பகுதியில் உள்ள ஓட்டோத் தரிப்பிடத்திலிருந்து பயணி ஒருவரை குடாக்கக்கொடி பகுதியில் இறக்கிவிட்டுத் திரும்பிய போது ஓட்டோ விபத்துக்குள்ளாகியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-402)

### புத்தாண்டுக்

விருந்தினர்கள் அமர்ந்திருந்த மேடை பாரம் தாங்காமல் சரிந்து வீழ்ந்ததால் அதில் அமர்ந்து இருந்தவர்கள் காயங்களுக்கு உள்ளாகினர்.

" முழு மேடையும் பொறிந்து வீழ்ந்ததாலே பலர் காயமடைய ஏற்பட்டது. சம்பவம் நடைபெற்ற இடமெங்கும் இரத்தமயமாகக் காணப்பட்டது. காயமடைந்தவர்களை ஏற்றிச் செல்ல அம்புலன்ஸ் வசதி போதாமை என்பதால் சாதாரண வாகனங்கள் மூலமும் அவர்கள் ஏற்றிச் செல்லப்பட்டார்கள்'' என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களால் கொழும்பு நவலோக வைத்தியசாலை நிரம்பி வழிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ங-சி)

### தாயும் சிசுவும்

கப்பட்டுளளார். குறித்த மூவரும் பரந்தனில் உள்ள தேவா லயத்துக்குச் சென்று வழிபாடு செய்துவிட்டு ஆனையிறவிலுள்ள உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தனர். அப் போது அவர்களின் பின்னால் அதிவேகமாக வந்த டிப்பர் வாகனம் ஒன்று அவர்களை மோதியது. பின்னர் அந்த இடத்தில் நில்லாமல் வேகமாக சென்று மறைந்துவிட்டது என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்துக்குக் காரணமான டிப்பர் வாகனத்தையோ அதன் சாரதியையோ பொலிஸார் இது வரை கைது செய்யவில்லை. குறித்த டிப்பர் வாகனம் ரயில் பாதை புனரமைப்புப் பணியில் ஈடுபடும் இந்திய நிறுவனம் ஒன்றுக்கு சொந்தமானது என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்குச் சென்ற திடீர் மரண விசாரணை அதிகாரி கே.திருலோகமூர்த்தி விசாரணைகளை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலங்கள் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (ங-4-55)

### மீனவர்

பில் புதிய ஒப்பந்தங்களும் இதன்போது கைச்சாத்திடப்படவுள்ளன என்று அறியமுடிகின்றது.

அதேவேளை, இந்துமா சமுத்திரத்தில் ஐரோப்பிய நாடுகளின் மீன்பிடி நடவடிக்கை அதிகரித்துள்ளமை உட் பட கடல்சார் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளன.

தமது இந்திய பயணம் தொடர்பில் நேற்று முன்தினம் அமைச்சர் ராஜித சேனாரத்ன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இலங்கை உயர் மட்டக்குழு மீனவர் பிரச்சினை தொடர்பில் ஆராய இந்தியா செல்லவிருப்பது குறித்து தமக்கு எதுவித அறிவித்தலும் கிடைக்கவில்லை என்று வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்தியா செல்லும் இலங்கைக்குழுவில் வடமாகாண மீனவர் சார்பில் குறைந்த பட்சம் 4 பிரதிநிதிகளாவது இடம் பெறவேண்டும். ஏனெனில் எங்களுக்குத் தான் எங்களின் பிரச்சினை தெரியும். எனவே நாங்கள் சென்றால் தான் அதுபற்றி தெளிவாக விளக்க முடியும். ஏற்கனவே இந்தியமீனவர்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களில் உள்ள விடயங்கள் எமக்கே தெரியும். எனவே தான் இந்தப் பேச்சுகளில் நாம் இருப்பது சுமுகமான முடிவொன்றை எட்ட உதவும்.

இதேவேளை இந்தியாவுக்குச் செல்லும் இலங்கைக் குழுவிடம் 'எல்லை தாண்டும் இந்திய மீனவர்களை கைது செய்யக்கூடாது, கைது செய்யப்பட்ட மீனவர்களை சிறையில் அடைக்காது விடுவிக்க வேண்டும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை ஒப்படைக்க வேண்டும்' என்று இந்தியா வலியுறுத்தி உள்ளதாக அறிகிறோம், ஆனால் இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறக் கூடாது என்று இதன்போது இலங்கை உயர் மட்டக் குழு ஆணித்தரமாக எடுத்துச் சொல்லும் என்று எமக்கு நம்பிக்கை இல்லை. உண்மையில் இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் எல்லை மீறாவிட்டால் எந்தப் பிரச்சினையும் இருக்காது. ஆகவே முதலில் இந்திய மீனவர்கள் எல்லை மீறாமல் இருக்க வேண்டும் என்றே இந்தப் பேச்சுக்களில் வலியுறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம். இதேவேளை நாளை மறுதினம் வவுனியாவில் வடமாகாண மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி இது தொடர்பில் முக்கிய தீர்மானங்களை எடுக்க உள்ளோம்" என்றார். (ங-4)

### அதிகரிக்காது

வனங்கள் அவற்றைப் பதுக்கி வைத்துள்ளன. இவ்வாறு பால் மாவைப் பதுக் கிவைத் துள்ள நிறுவனாங்கள் சுற்றி வளைக்கப்பட்டு சீல் வைக்கப்படும். அதற்கான நடவடிக்கை களில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை ஈடுபட்டு வருகின்றது.

பால்மா வகைகளுக்கான தட்டுப்பாடு சந்தையில் நிலவுகின்றதால் தூய பசும் பாலை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். பசும்பாலைப் பருகுவதற்கு மக்கள் பழகியுள்ளனர். எனவே, பசும்பால் உற்பத்தியை ஊக்குவிக்க நாம் நடவடிக்கைகளை மேற்கொள்வோம். - என்றார். (ங-சி)

### படையினரின்

மன்னாரிலுள்ள மரக்கறி வர்த்தகர்கள் தம்புள்ள மத்திய சந்தை உள்ளிட்ட வெளி இடங்களில் இருந்து மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்து மன்னாருக்கு கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர்.

இவர்கள் கடை வாடகை, வரி, கொள்வனவுச் செலவுகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டே விலைகளைத் தீர்மானித்து விற்பனை செய்து வருகின்றனர்.

ஆனால் இராணுவத்தினரின் மரக்கறி விற்பனை நிலையத்தில் மிகவும் மலிவான விலையில்மரக்கறிவகைகள்விற்பனை செய்யப்படுவதால் தமது வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதுடன், பொருளாதார நெருக்கடிக்குள் தாம் தள்ளப்பட்டுள்ளதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மன்னார் அரச அதிபர், வடமாகாண அமைச்சர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மன்னார் நகர சபைத் தலைவர், உறுப்பினர்கள் எவரும் இது வரை எந்தவித அக் கறையும் தெரிவிக்கவில்லையென வும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### சூடானின்

கூறியது. இந்த வாக்குறுதிகளை பொது நலவாய அமைப்பிடமும் அரசு அளித்துள்ளது. இருப்பினும், கடந்த நான்கரை வருடங்களில் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கைப் பரிந்துரைகளைக் கூட அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. குறிப்பாக, சுயாதீன ஆணைக் குழுக்களை நிறுவுமாறும், தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் கூட பொறிமுறைக் கொண்டு வரவேண்டும் என்றும், தடுத்து வைக்கப்பட்டுள்ளோர், காணாமற்போனோர், கொல்லப்பட்டோர் தொடர்பிலான பெயர்ப்பட்டியலை வெளியிடவேண்டும் என்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்தப் பரிந்துரைகளை அரசு நடைமுறைப் படுத்த வில்லை. அதுமட்டுமல்லாது, சர்வதேசத்திற்கும் ஐ.நாவுக்கும் அளித்த எழுத்து, வாய் மூல வாக்குறுதிகளையும் அது நிறைவேற்றவில்லை.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது ஒரு சிக்கலான விடயமே அல்ல. ஆனால், அரசுதான் அதை சிக்கல் தன்மையானதாக மாற்றிக்கொண்டது. இனப்பிரச்சி னையைத் தீர்ப்பதற்கு சர்வதேசத்துக்கு அளித்த உறுதிமொழிகளை அரசு நிறைவேற்றி இருந்தால், இலங்கையிலும் பிரச்சினை இல்லை. சர்வதேசத்திலும் பிரச்சினை இல்லை. பிரச்சினை முடிந்திருக்கும்.

தேர்தல்கால மேடைகளில் வழங்கும் வாக்குறுதிகளைப் போல, தாம் அளித்த வாக்குறுதிகளை ஐ.நாவும் சர்வதேசமும் மறந்துவிடும் என்று அரசு எண்ணி க்கொண்டிருக்கிறது. 5 அல்ல இன்னும் 10, 15, 20 வருடங்கள் சென்றாலும் இலங்கை அரசு தமக்கு அளித்த உறுதிமொழிகளையும், தமிழ் மக்களின் இனப் பிரச்சினையையும் சர்வதேசம் ஒருபோதும் மறக்காது. எனவே, இனப்பிரச்சினையை சர்வதேசத்துடன் பேசித் தீர்க்க வேண்டும். இதற்காக 13 ஆவது திருத்தத்தை மட்டுமல்ல, அதற்கப்பால் செல்வதற்கும் நாம் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டோம்.

#### நாடு இருக்குமா என்பது சந்தேகம்

நாம் தற்போது தீர்க்கமான நிலையில் இருக்கின்றோம். அடுத்த சில வருடங்களில் நாடு இருக்குமா என்பது சந்தேகம். ஏனெனில், சர்வதேசத்தால்தான் தற்போது நாடுகள் உருவாக்கப்படுகின்றன. கிழக்குத் திமோர், தென் சூடான் முதலான நாடுகள் இவ்வாறுதான் உருவாக்கப்பட்டன.

கிழக்குத் திமோர், இந்தோனேஷியாவிலிருந்து பிரிந்து வேறொரு நாடாகியுள்ளது. இந்தோனேஷியாவுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் சிறியதொரு பிரேரணைதான் கொண்டுவரப்பட்டது. பின்னர் அது பெரிதாகி கிழக்குத் திமோர் என்ற ஒரு நாட்டையே உருவாக்கியது. சூடானும் அதுபோலதான்.

சூடானுக்கு எதிராகவும் ஐ.நாவில் சிறியதொரு பிரேரணை தான் கொண்டுவரப்பட்டது. பின்னர் அது பெரிதாகி தென் சூடான் என்ற புதிய நாட்டையே உருவாக்கியது. மேற்படி இரு நாடுகளுக்கும் எதிராக ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட பிரேரணைகளை இரு நாட்டு அரசுகளும்கருத்திற்கொள்ளவில்லை. அதுபோலத்தான் எமது நாட்டு அரசும் செயற்படுகிறது.

இலங்கைக்கு முதன் முதலில் ஐ.நாவை அறிமுகப்படுத்தியவர் யார்? தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான். அவர்தான் ஐ.நாவுக்கு முதன் முதலில் சென்றார். 1971ஆம் ஆண்டில் கலவரம் ஏற்பட்ட போது எவரும் ஐ.நாவுக்குப் போகவில்லை. 1989ஆம் ஆண்டு இடம்பெற்ற கலவரத்தின் பின்னர்தான் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐ.நாவுக்கு முதன் முதலாகச் சென்றார். எனவே, அரசு இப்போது எம்மை ஏசுவதில் பயனில்லை. சர்வதேசத்துடன்தான் பேசவேண்டும்.- என்றார் . (ங-சி)

### பீரிஸின்

பீரிஸ் ஜனவரி 28 ஆம் திகதி இந்தியாவுக்கு செல்லவுள்ளார் என்று வெளியாகியிருக்கும் தகவல்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம,

"இன்னும் அவ்வாறானதொரு முடிவு எடுக்கப்பட வில்லை. எனினும், அமைச்சர் இந்தியா செல்வது ஒன்றும் புதுமையான விடயமல்ல'' என்று கூறினார். (ங-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பியனானது யாட் அணி


முல்லைத்தீவு, ஜன.2
முல்லைத்தீவு மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்திய அணிக்கு 3 பேர் கொண்ட கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் யாட் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
கடந்த வாரம் மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றொக் விளையாட்டுக் கழக அணி



மோதிக் கொண்டது.
இதில் யாட் விளையாட்டுக் கழக அணி 14:10 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)

# கிறாஸ் கொப்பர்ஸை வென்றது சென்ரல்

வலி .வடக்கு, ஜன.2
யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் லீக் முறையிலான 20/20 கிரிக்கெட் போட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் இதில் யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக்கழகம் 2 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.
போட்டியில் யாழ்ப்பாணம் சென்றல். விளையாட்டுக் கழகமும் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.
போட்டியில்முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரல் விளையாட்டுக் கழகம் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது.
ரஜீவ்குமார் ஆட்டமிழக்காது



நான்கு சிக்ஸர்கள், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 85, ஓட்டங்களையும் றொசான் 42 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 10 ஓட்டங்களும் பெறப்பட்டன.
கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சோந்த அஜித் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், கபிலன் ,மதுசன் ஆகி யோர் தலா 4 பந்துப்பரிமாற் றங்கள் பந்து வீசி முறையே 23, 31 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 148 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.
கபிலன் நான்கு பவுண்டரிகள், இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக 56 ஓட்டங்களையும், நிலோசன் 34 ஓட்டங்களையும், ரகீம் 20 ஓட்டங்களையும் பெற்றது டன் உதிரிகளாக 10 ஓட்டங்களும் பெறப்பட்டன.
சென்ரல் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரஜீவ்குமார் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் றொசான் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ஜெசிந்தன் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள். (த-86)

## முல்லைத்தீவில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.2
முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் போட்டி ஏற்பாட்டாளர்கள்



தெரிவித்துள்ளனர்.
மேற்படி போட்டியில் 20 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.2
சுன்னாகம் சூராவத்தை நியூ வொரியர்ஸ் விளையாட்டுக் கழகம் கந்தன் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் 5 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நியூவொரியர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இதில் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜன.2
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளை



யாட்டுக் கழகம் 'சாந்தன், யூட்கசன்' ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இதில் இன்று வியாழக்கிழமைஇடம்பெறும் ஆட்டத்தில் சண்சைன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யுனி பைட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## உழவர் உதைபந்து; போட்டி முடிவுகள்

வலி .வடக்கு, ஜன .2
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளையொட்டி நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் முடிவுகள் சில வருமாறு:-
பண்டத்தரிப்பு நியூபிறைற் விளையாட்டுக் கழகத்துக்கும் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அராலி கிழக்கு அண்ணா விளையாட்டுக் கழக 'பி' அணியும் சாவற்காடு மகாத்மா விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்ட ஆட்டத்தில் அண்ணா விளையாட்டுக் கழக 'பி' அணி 3:1 என்ற கோல் கணக்கில் சாவற்காடு மகாத்மா விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டு அடுத்த சுற்றில் விளையாடத் தகுதி பெற்றது. (த-86)

AFTER O/L & A/L STUDY CIMA
Experienced and high calibered lecturers for CIMA at WISDOM JAFFNA
CIMA
Chartered Institute of Management Accountants



Mr. S. Mayoorran
B.Sc. Eng. (Hons), CIMA exam complete
Mr. B. Niransan
B.Sc. (Finance) (spl), MAAT, ICASL finalist
Mr. B. Mugunthan
BBA (Hons), MBA (Fmspl)
Mr. K. Sugash
LLB, AAL
Mr. T. Kanatheepan
LLB, CIMA exam complete
Mr.F. Piomathusoothanan
(B.Sc Eng (Hons), SMIESL, AMIESL
CIMA strategic level
Mr. R. Sanjaiyan
B.Sc. Eng. (Hons)
Mr. S. Ithayachchandran
CIMA part qualified
Mr.S.Ajendra
BSc.C.Management
CIMA strategic level

எமது அனுபவமும் திறமையும் மிக்க இவ் விரிவுரையாளர்கள் குழுயாழில், WISDOM இல் மட்டுமே CIMA விரிவுரைகளை ஆற்றுகின்றனர்.

BE SMART, CHOOSE WISELY

You Can Enrol from Today for the New Batches.


WEEK DAY BATCH : 03rd JAN 2014 | WEEKEND BATCH : 15th FEB 2014

021-2220727 | 021-7200777

YOUR WISDOM COMPANION
WISDOM
BUSINESS ACADEMY
Wisdom Business Academy - Jaffna
The Specialist in CIMA Education
154A/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(பிறவுன் வீதியும் நாவலர் வீதியும் சந்திக்கும் இடத்தில்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வில்லியர்ஸுக்கு சத்திரசிகிச்சை



தென்னாபிரிக்க ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியின் தலைவரும், அந்த அணியின் சிரேஷ்ட துடுப்பாட்ட வீரருமான ஏபி டி வில்லியர்ஸுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. அவரது கையிலேயே இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

2011ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் போது ஏபி டி வில்லியர்ஸுக்கு கையில் உபாதை ஏற்பட்டிருந்தது. இதற்காக அவரது கையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதோடு, அவரது கையில் தகடொன்று பொருத்தப்பட்டிருந்தது.

ஆனால் பொருத்தப்பட்ட தகடு அண்மைக் காலத்தில் அவருக்கு வலியை ஏற்படுத்தி வருவதால் அந்தத் தகடு சத்திரசிகிச்சை மூலம் நீக்கப்படவுள்ளது. இவ்வாரத்தில் இது நீக்கப்படுமென எதிர்பார்க் கப்படுகிறது.

இதன் காரணமாக தென்னா பிரிக்காவின் உள்ளூர் 20/20 தொடரில் ஏபி டி வில்லியர்ஸ் பங்குபற்றமாட்டார் என எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், பெப்ரவரி மாதத்தில் இடம் பெறவுள்ள தென்னாபிரிக்க, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான தொடரில் அவர் பங்குபற்றுவார் என எதிர்பார்க் கப்படுகிறது.

தென்னாபிரிக்க, இந்திய அணி களுக் கிடையி லான தொடர் சுருக்கப்பட் டதன் காரணமாக தென்னாபிரிக்க அணி இந்த மாதத்தில் எந்தவொரு சர்வதேசப் போட்டியிலும் பங்கு பற்றாது என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# புத்தாண்டில் உலக சாதனை படைத்தார் அண்டர்சன்

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதி ரான மூன்றாவது ஒருநாள் போட் டி யில், நியூசிலாந்து வீரர் கோரி அண்டர்சன் 36 பந்தில் சதம் அடித்து உலக சாதனை படைத்தார். நியூசிலாந்து சென்றுள்ள மேற்கிந் திய தீவுகள் அணி ஐந்து போட்டி கள் கொண்ட ஒருநாள் தொடரில் பங் கேற்கிறது.

முதல் போட்டியில் மேற்கிந்திய தீவு கள் அணி வென்றது. இரண் டாவது போட்டி மழையால் ரத்தா னது.

இரு அணிகளும் மோதும் மூன்றா வது போட்டி குயின்ஸ்டவுனில் நடந்தது. மழை குறுக்கிட்ட கார ணத்தினால் போட்டி தொடங்குவ தில் தாமதம் ஏற்பட்டது. தொடர்ந்து போட்டி 21 பந்துப்பரிமாற்றங் களாகக் குறைக்கப்பட்டது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணித் தலைவர் டுவைன் பிராவோ, முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

நியூசிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கப்டில் ஏமாற்றி னார். தொடர்ந்து வந்த மக்கலம் நிலைக்கவில்லை. டெய்லர் தாக் குப் பிடிக்கவில்லை. பின் ரைடரு டன் இணைந்த கோரி ஆண்டர் சன் புயல்வேகத்தில் ஓட்டங்களைக் குவித்தார். அவர் 36 பந்தில் சதம் அடித்து உலகசாதனை படைத்தார். இதற்கு முன் கடந்த 1996இல் பாகிஸ்தான் வீரர் சயிட் அப்ரிடி 37 பந்தில் சதம் அடித்ததே உலக சாதனையாக இருந்தது.

எதிர்முனையில் இவருக்கு நல்ல ஒத்துழைப்புக் கொடுத்த ரைடர், 45 பந்தில் சதம் அடித்தார். இவர் 104 ஓட்டங்களை எடுத்த போது ஹோல் டர் பந்தில் ஆட்டமிழந்தார்.


கோரி அண்டர்சன் தொடர்ந்து அதிரடியாகத் துடுப்பெடுத்தாட 21 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில், நியூசிலாந்து அணி 4 இலக்கு களை இழந்து 283 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 21 பந்துப்பரி மாற்றங்கள் முடிவில் ஐந்து இலக்குகள் இழப்புக்கு 124 ஓட்டங்களைப் பெற்று தோல்வி யைத் தழுவியது. (த)



இதற்கு முன் கடந்த 1996இல் பாகிஸ்தான் வீரர் சயிட் அப்ரிடி 37 பந்தில் சதம் அடித்ததே உலக சாத னையாக இருந்தது.

# யுவராஜ் இல்லை



நியூசிலாந்து அணிக்கு எதிரான இந்திய அணியில் யுவராஜ் சிங் நீக்கப்பட்டுள் ளார். இந்த மாதம் நியூசிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ள இந்திய அணி, 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க உள்ளது. இவ்விரு அணிகளும் மோதும் முதல் போட்டி இம்மாதம் 19ஆம் திகதி நேப்பியரில் தொடங்க உள்ளது. டெஸ்ட் தொடரின் முதல் போட்டி ஓக்லாந்தில் பெப்ரவரி 6ஆம் திகதி தொடங்குகிறது.

இந்தத் தொடரில் விளையாட உள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**அணி விவரம்:** டோனி(அணித்தலைவர்), ஷிகர் தவான், ரோஹித் ஷர்மா, விராட் கோஹ்லி, ரஹானே, அம்பதி ராயுடு, சுரேஷ் ரெய்னா, ரவிச்சந்திரன் அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, புவனேஷ்குமார், முகமது சமி, இஷாந்த் சர்மா, அமித் மிஸ்ரா, இஷ்வர் பாண்டே, வருண் ஆரோன், ஸ்டுவர்ட் பின்னி.

**டெஸ்ட் அணி விவரம்:** டோனி(அணித்தலைவர்), ஷிகர் தவான், முரளி விஜய், புஜாரா, விராட் கோஹ்லி, ரகானே, ரவிந்திர ஜடேஜா, சகிர்கான், முகமது ஷமி, இஷாந்த் சர்மா, அம்பதி ராயுடு, புவனேஷ்வர் குமார், அஸ்வின், உமேஷ் யாதவ், சகா, ஈஸ்வர் பாண்டே. (த)

# தொல்லை கொடுத்த ஜுனைட் கான்



அபுதாபியில் நடக்கும் முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி மிரட்ட, இலங்கை முதல் இன்னிங்ஸில் 204 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. இலங்கை, பாகிஸ் தான் அணிகள் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றன.

இதில் முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன் தினம் அபுதாபியில் தொடங்கி யது, நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணியின் அணித் தலைவர் மிஸ்பா களத்தடுப்பைத் தேர்வு செய்தார். இலங்கை அணிக்கு கருணாரத்னே, கவுஷல் சில்வா ஜோடி நல்ல தொடக்கம் கொடுத்தது. இதன் பின் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜுனைட் கான், இலங்கை வீரர் களுக்குப் பெரும் தொல்லை கொடுத்தார்.

வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க இலங்கை அணி, முதல் இன்னிங்ஸில் 204 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது.

பாகிஸ்தான் அணியின் ஜுனைட் கான் 5, பிலாவல் பட்டி 3, சயீத் அஜ் மல் 2 என்ற கணக் கில் இலக்குகளை வீழ்த்தினர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 ஆவது வெற்றி ஆண்டு

# SUBRA கல்வி நிறுவனம்

சித்தன்கேணி - கிளை- வட்டுக்கோட்டை

**A/L 2016** **DAY CLASS**

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான, தொழில்நுட்பப்பிரிவுகள்
எமது வழமையான ஆசிரியர் குழாமுடன்
ஆரம்பம்: 05.01.2014 ஞாயிறு காலை 9.30

தரம் 1 முதல் O/L வரை
தமிழ் மொழி மூலம் - ஆங்கில மொழி மூலம்
புதிய பிரிவுகள் - பிரிவு II ஆரம்பம்
04.01.2014 சனி மாலை 3.00

தரம் 1 முதல் 5 வரை - விசேட ஆசிரியர் குழாம்
வெற்றித்தேர்வு புலமைச்சுடர் பரீட்சைகள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றது.
புலமைப் பரிசில் மிக நீண்ட இடைவெளியின் பின் மீண்டும் கைலைநாதன் - அனுமதிகள் மட்டுப் படுத்தப் பட்டவை.

*மாதாந்தம் பயிற்சிப் பரீட்சைகள் *மாணவர் வரவின்மை உடனுக்குடன் பெற்றோருக்கு அறியத்தரப்படும்.
*கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு - இதுவே SUBRA
ஆசிரியர் விபரம் உள்ளே பக்கம் 5 இனைப் பார்க்கவும்.

---

### கல்விஆண்டு 2014
விண்ணப்பம் கோரல்

சான்றிதல் அளிக்கப்பட்ட பட்டய கணக்காளர்களுக்கான தொழில்சார் பட்டப்படிப்பு விண்ணப்பம் கோரல்

(ACCA) ASSOCIATION OF CHARTERED CERTIFIED ACCOUNTANTS –U.K (சான்றிதல் அளிக்கப்பட்ட பட்டய கணக்காளர் சம்மேளனம்)இன் கற்கை நெறியை யாழ்நகரில் K-AIMS கல்வி நிறுவனத்தினூடாக கற்கை நெறியை மேற்கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

ACCA கற்கை நெறியானது மூன்று நிலைகளை கொண்டது.

1. DIPLOMA - 6 மாதம்
2. DEGREE - ஒருவருடம்
3. ACCA - ஒருவருடம்.

- O/L, A/L பரீட்சைக்கு தோற்றியமாணவர்கள் DIPLOMA நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்
- HNDA, AAT, யாழ் பல்கலைக்கழக பட்டப்படிப்பை பூர்த்தி செய்தமாணவர்கள் DEGREE நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 04 January 2014

மேலதிக தகவல்களுக்கும் விசாரணைகளுக்கும்
0773 722 104/ 212 219 422

Colombo
No 35-1/1, Upatissa Road
Bambalapitiya

JAFFNA
No 147-2/2 K.K.S Road
Jaffna

---

**VCM Institute**

A/L 2016
இணைந்த கணிதம்
B. ரவீந்திரன்
ஆரம்பம்:- 03.01.2014 (வெள்ளி) 9.30AM

**PHYSICS**

ஆசிரியர் திரு. ம. ஸ்பெல்மன் B.sc
A/L - 2016
ஆரம்பம்:- 03/01/2014 வெள்ளி 5.00 PM

T.P: - 077 6116724

---

**IBS** கல்வி நிறுவனம்
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்

{புதிய கல்வியாண்டு 2014 ஆரம்பம்}
. காலம்:- 05/01/2014
நேரம்:-09.30 am
தரம் 4,5,6 முதல் O/L வரை
A/L கணக்கீடு
AP. பகீரதன்
புதிய அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

---



# கபிலா
பாதணியகம்
13, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

பாடசாலை மாணவர்களுக்கான
Bata DSI பாதணிகளைப் பெற்றுக்கொள்ள

பொறுத்த விலையைவிடக் குறைவான விலையில்.... அசத்தலான தள்ளுபடி

# கபிலா
காலணியகம்
24, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

## உங்களின் கல்விக் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள்

# CIMA @

Foundation Level
ஆரம்பம்
05 Jan 2014
Sunday 8.30 Am

ரூ.4000/- தொடக்கம் ரூ.40000/- வரையான கல்வி உதவித்தொகையை எங்களிடமிருந்து பெற்று CIMA கல்வி உலகிற்குள் பிரவேசியுங்கள்

16 வயதை நிரம்பப்பெற்ற அனைவரும் CIMA கல்வியை கற்க முடியும் A/L பெறுபேறுகளோ, O/L பெறுபேறுகளோ அவசியமில்லை

## SPECTRA SKILLS
NO:19 STANLEY ROAD, JAFFNA
021 222 1422, 021 320 2728

உங்களது கட்டணங்களை தவணை அடிப்படையில் செலுத்தலாம்

**எமது விரிவுரையாளர்கள்**
- தகைமைகள் ☑
- திறமை ☑
- அர்ப்பணிப்பு ☑
- அனுபவம் ☑

**CIMA கல்வியைப்பூர்த்தி செய்தவர்களுக்கு**
- கவர்ச்சிகரமான வருவாய் ☑
- சமுதாய அந்தஸ்து ☑
- வெளிநாட்டுக் குடியுரிமை அந்தஸ்து ☑
- நிச்சயமான வேலைவாய்ப்பு உள்நாட்டிலும்,வெளிநாட்டிலும் ☑

(நிபந்தனைக்குட்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.